
கல்கி

KALKI 24-8-80 90 காசு

நகைச்சுவை சிறப்பிதழ்



எஸ்.வி.வி நூற்றாண்டு


பெண்ணின் தந்தை: பையன் எவ்வளவு சம்பாதிக்கிறானோ?


பையனின் தந்தை: மாசம் ஐந்நூறு ரூபாய்!

பெண்ணின் தந்தை: ஹே, என் பெண்ணின் கைக்குட்டை செலவுக்குக் கூட இது காணாதே!

பையனின் தந்தை: ஹும், அவ்வளவு ஜல தோஷமுள்ள பெண்ணா? எங்களுக்கு வேண்டவே வேண்டாம்!

"நான் செக்ரெட்டரி
ஆகையால் ஸ்மார்ட்டாக இருக்கத்தக்க உடை அணிய வேண்டுமல்லவா."





உங்கள் அந்தஸ்தே தனி
அதற்கேற்ற துணி

ம:பத்லால்
:பேப்ரிக்ஸ்

ம:பத்லால் இண்டஸ்ட்ரீஸ் ம:பத்லால் :பைன்

MF-4-TAM

பாராட்டினால் பிழைத்தீர்கள்!



ஆண்டவனுக்கு உள்ள நகைச்சுவை உணர்வைப் பாருங்கள்! அகஸ்தியன் என்று இவர் புனை பெயர் சூட்டிக் கொள்ள வாய்ப்பாகவே இவரை ஆறு அடி உயரத்துக்கு வளர்த்து விட்டிருக்கிறார்! கடுகு, 141, பி.எஸ்.ஆர்., கமல் போன்ற வேறு பல பெயர்களும் உண்டு. எல்லாம் இப்போது அம்பலமாகி விட்டதால் இனி அவர் வாசகர்களின் அன்புத் தொல்லைகளிலிருந்து தப்பப் புது புனைப் பெயர்களைத் தேடவேண்டியதுதான்!

நடனம் போடும் 'கடுகு' படத்தைப் பார்த்தே சிரிப்பவர்கள் இவரை நேரில் பார்த்தால் சிரிக்காமலா இருப்பார்கள்? சதா சிரித்த முகம் கொண்ட அகஸ்தியனின் உரையாடல் ஸீரியஸ்ஸாக இருந்தாலும் எழுதும் போது நகைச்சுவை கொப்பளிக்கிறது. இவருக்கு ஹாஸ்யக் கதை, கட்டுரை எழுத மட்டும்தான் வரும். ஆனால் பி. எஸ். ரங்கனுடன் ஒரு பத்திரிகையின் வேடிக்கை அம்சங்கள் என்னென்ன, எப்படி அமையலாம் என்று ஐடியாக்கள் தருவதிலும் நிபுணர். பாவம், ஓவியர்கள் கை ஒடியும்!

அமரர் கல்கியிடம் அபார பக்தி கொண்ட இவர், தமது ஒரே மகளுக்கு கல்கியின் புதல்வி ஆனந்தியின் பெயரையே சூட்டினார். போனால் போகட்டும் என்று நானோ என் சகோதரியோ ஒரு பைசா இதுவரை ராயல்டி அவரைக் கேட்கவில்லை!

பிரபலமான வார இதழ்கள் பலவற்றிலும் இவர் பெயர் அடிக்கடி இடம் பெறுவதால் வாசகர்கள் சிரிப்பிலிருந்து தப்பவே முடியாது! ஸீரியஸான நாவல்களும் இவர் எழுதியிருக்கிறார். அவற்றைப் படித்துவிட்டு வாசகர்கள் பழக்க தோஷத்தில் சிரிப்பார்களா என்று நமக்குத் தெரியாது!

குறிப்பிடத்தக்கபடி வெளியான முதல் கட்டுரை 1952ல் கல்கியில் "பொன் விளைந்த பூமி." சோழவுடைய தகப்பனார் சீனிவாச அய்யர் ஆத்தூரில் நடத்தி வரும் பண்ணைக்குக் கல்கி அவர்களுடன் சென்று திரும்பிய பிறகு எழுதிய கட்டுரை. அங்கு என்ன பயிராயிற்றோ, இவரது பண்ணையில் பயிராவது நகைச்சுவை.

செங்கற்பட்டு சொந்த ஊர். படித்தது சென்னை கிறிஸ்துவக் கல்லூரி. தபால் இலாக்காவில் கணக்குப் பிரிவில் உத்தியோகம். டில்லியில் குடியேறி 18 வருஷங்கள் ஆகின்றன. வயது 48. — இதைச் சொல்ல மனைவி கமலாவின் அனுமதி உண்டு.

நாடகங்கள் நடித்திருக்கிறார், சித்ராலயா கோபுவுடன் சேர்ந்து விகடக் கச்சேரிகள் செய்திருக்கிறார். எங்கள் தங்கம் படத்தில் எம். ஜி. ஆர். செய்த கதாகாலட்சேபத்தை எழுதித் தந்திருக்கிறார். — படம் வெற்றி பெறக் கேட்பானேன்!

தையற் கலையிலும் சமையற் கலையிலும் இவர் நிபுணர் என்று மனைவி கமலாவே சான்றிதழ் வழங்கியிருக்கிறார். கமலாவைக் கதைகளில் கிண்டல் செய்தாலும், ஒருவர்மீது ஒருவர் ரொம்ப.... "இது"

அகஸ்தியன் மீது நாம் மூன்று விஷயங்களுக்குப் பொறாமைப்படுவதைத் தவிர்க்கவே முடியாது. அவையாவன: அவரிடம் உள்ள அருமையான நூலகம்; அதில் உள்ள ஏராளமான நகைச்சுவைப் புத்தகங்கள்; அவற்றுடன் அவர் செலவழிக்கும் நேரம்.

கல்கி அவர்களிடம் அபார பக்தி கொண்டிருக்கும் தமக்குக் கல்கி இதழ் ஒன்றைத் தயாரிக்கும் வாய்ப்புக் கிட்டியதை தவமிருந்து பெற்ற பேறாகக் கருதுகிறார் அகஸ்தியன்.

அதோடு, "இந்த இதழைப் பாராட்டி விடுங்கள். குறை கூறி எழுதினால், 'பாவம், இந்தத் தடவை சரியாகச் செய்யவில்லை, இவனுக்கு இன்னொரு சான்ஸ் தரலாம்' என்று கல்கி ஆசிரியர் கருதும்படி செய்து விடுவீர்கள். ஆகவே பாராட்டினால் பிழைத்தீர்கள்!" என்று வாசகர்களை எச்சரிக்கவும் செய்கிறார்.

சந்தேகமேயில்லை, குறை கூறும் கடிதங்கள் மலையாகக் குவியப் போகின்றன!

— கி. ராஜேந்திரன்,
ஆசிரியர், கல்கி

எஸ் – சதா
வி — வேடிக்கையும்
வி — விளையாட்டும்

இப்படி எஸ்.வி.வி என்ற மூன்றெழுத்துக்கு விளக்கம் தந்தவர் ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரியார் அவர்கள்!

— வி. ச. வாசுதேவன்





நான்—வெஜிடேரியன்



டைரக்டர் ஸ்ரீதர்

மேலே இருக்கும் தலைப்பைச் சேர்த்துப் படித்துவிடாதீர்கள். வார்த்தைகளைப் பிரித்துப் படியுங்கள்.

அதாவது நான் (நானாகிய ஸ்ரீதர்) வெஜிடேரியன் (சைவ உணவு உண்பவன்.)

நான் சுத்த சைவம். முட்டைகூடச் சாப்பிடுவதில்லை.

ஆனால் முட்டையை உடைத்துக் கறந்த பாலில் கலந்து குடித்திருக்கிறேன் ஒரு மூன்று மாதம்.

காரணம் டாக்டர் கொடுத்த அட்வைஸ்! ஒரு காலகட்டத்தில் (பெரிய வார்த்தை!) உடம்பில் சதைப் பற்று இல்லாமல் ஒல்லியாக இருந்தேன்.

பூரிக்க வேண்டும் என்று ஆசை. டாக்டரை அண்டினேன்.

''மிஸ்டர் ஸ்ரீதர். இது தேற வேண்டுமானால் (இது என்பது என் உடல்) தினம் காலையில் ஆறு மணிக்குள் பச்சை முட்டையை உடைத்துப் பச்சைப் பாலில் கலந்து ஆறு மாசம் குடியுங்கள்'' என்று டாக்டர் பச்சை பச்சையாகப் பேசினார்.

''நான் வெஜிடேரியன் டாக்டர்!''

''உன் உடம்பு தேற வேண்டுமா வேண்டாமா?''

''வேண்டும்.''

''நான் சொன்னபடி செய்யுங்கள்.''

என் உடம்பு தேறுவதற்கான வழிமுறையை அடுத்த நாளே கடைப்பிடிக்க ஆரம்பித்தேன்.

முட்டையில் இருக்கும் கொழ கொழாவைப் பாலில் கலப்பேன். டம்ளரை வலது கையில் பிடித்துக்கொள்வேன். எதிரே சர்க்கரையைத் தயாராய் வைத்துக் கொள்வேன்.

ஒன்,... டூ.... த்ரீ!

கொடகொடவென ஒரேமூச்சில் முழுங்கல்!

சர்க்கரையை அள்ளி வாயில் போட்டுக் கொள்வேன். மூன்று மாதம் இந்தச் சர்க்கசைத் தொடர்ந்தேன்.

என் உடம்பில் எந்த மாற்றமும் இல்லை. ஏமாற்றம்! இனி முட்டைக்கு வேலை இல்லை என்ற முடிவெடுத்தேன்.

அன்றிலிருந்து முட்டை கலக்கப்பட்ட எந்தப் பொருளையும் சாப்பிடுவதில்லை— கேக் உட்பட! சார், நான் — வெஜிடேரியன்!

'தில் ஏக் மந்திர்' ஹிந்திப் படத்தின் நூறாவது நாள் விழா — ஹைதராபாத்தில்.

படத்தில் நடித்த முக்கிய நடிகர்களோடு நானும் விழாவில் கலந்து கொண்டேன்.

மாலை பல பணியாரங்களோடு டீ. அந்த மாலையில்தான் நான் ஒரு சதியில் சிக்கிக் கொண்டேன்.

பல டிரேக்களில் அல்வா, ஜிலேபி, முந்திரி பகோடா, பஜ்ஜி — இப்படிப் பல வகைகள் மேஜைகளின் மீது அடுக்கப்பட்டிருந்தன.

பஜ்ஜி நீள நீளமாக இருந்தது. வாழைக் காய் பஜ்ஜி என்றால் எனக்கு உயிர்.

ஒன்றை எடுத்தேன். கடித்தேன். மென்றேன். விழுங்கினேன்.

ஹீரோ ராஜேந்திரகுமார் என் அருகில் வந்தார். ''ஃபிஷ் பஜ்ஜி ரொம்பப் பிரமாதம்!'' என்றார்.

''மீனா? பஜ்ஜியா? எது? எங்கே?'' என்று அலறினேன்.

''நான் சாப்பிட்டது மீன் பஜ்ஜியா? நான் சாப்பிட்டது மீனா?'' கண்ணகி கேட்டாளே, ''என் கணவன் கள்வனா?'' என்று! அப்படிக் கேட்டேன் பலமுறை பலரிடம்.

அவர்கள் சொன்ன பதில்: ''ஆமாம்!''

குமட்டிக் கொண்டு வந்தது.

பக்கெட் தண்ணீரையும் ஒரு சோப் கட்டியையும் கொண்டுவரச் சொன்னேன்.

வாயில் தண்ணீரைக் கொட்டிச் சோப்பையும் போட்டுத் தொண்டை வரையில் கையை விட்டு எட்டு முறை சழுவினேன்.

ஆனாலும் நான் — வெஜிடேரியன்!

காஷ்மீரில் 'தேன் நிலவு' ஷூட்டிங். காலை சென்னையிலிருந்து விமானம் மூலம்

டெல்லி. உடனே அடுத்த விமானம் மூலம் காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகர்.

யூனிட்டோடு ஸ்ரீநகரை அடையும்போது மாலை மணி ஐந்து. காலையிலிருந்து எதுவுமே சாப்பிடவில்லை. டசி. கோரப் பசி. அதே சமயம் களைப்பு.

வசந்தி (தேன் நிலவில் அறிமுகப்படுத்தப்பட்ட புது முகம்) யின் தந்தை தான் ஹோட்டலுக்குப் போய் எனக்கு ஏதாவது டிபன் (பூரி) வாங்கி வருவதாகக் கூறினார்.

பூரியை விண்டு மசாலா பட்டாணியோடு மென்றேன்.

'ஜவ்வு ஜவ்வு' என்றது. வயிற்றில் ஏதோ கலக்கம். ஆராய்ச்சியில் இறங்கினேன்.

வசந்தியின் தந்தையைக் கூப்பிட்டேன். ''பட்டாணியோடு என்ன கலந்திருக்கிறது?'' என்று கேட்டேன்.

''அது சிக்கன் பீஸ் — அதாவது பட்டாணி கோழிக் கறி...'' என்றார் நிதானமாக!

இன்னொரு பக்கெட் தண்ணீர், ஒரு கட்டி சோப். ஒரு திருப்தி.

என் லிஸ்டில் கோழிக் கறியும் சேர்ந்து விட்டது. இன்னும் நான் வெஜிடேரியன்!

ஆங்கில நடிகை ஷேர்லீ மெக்லீன் சென்னை விஜயத்தின்போது மறைந்த திரு ஏ. எல். எஸ். ஒரு விருந்து கொடுத்தார். சைவ, அசைவ உணவுகள் இருந்தன.

நானும் லேகல் கிருஷ்ணமூர்த்தியும் சைவ மேஜைக்கு வந்தோம். ஆளுக்கு ஒவ்வொரு தட்டு எடுத்துக் கொண்டோம். இரண்டு இரண்டு இட்லி, இரண்டு இரண்டு போண்டா எடுத்துத் தட்டில் போட்டுக் கொண்டு, சட்னி, கொத்சுவோடு பேசியபடி ஆனந்தமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்!

எங்கள் சந்தோஷத்தைக் கெடுப்பதற்காகவே வந்து சேர்ந்தார் திரு ஏ. எல். எஸ். அங்கிருந்த ஒரு பையனிடம் சத்தம் போட்டார்: ''ஏண்டா முட்டாள்! இந்த மட்டன் போண்டாவை இந்த மேஜையிலே ஏண்டா வைச்சே? அதைக் கொண்டு போய் அந்த மேஜையிலே வைடா'' என்றார். நானும் கிருஷ்ணமூர்த்தியும் ஒருவரை யொருவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டோம்.

அரை டம்ளர் ஜீராவைக் குடித்து என்னைத் தேற்றிக் கொண்டேன்.

மட்டன் கறியும் சாப்பிட்டு முடிந்தாயிற்று! ஆனாலும் நான் வெஜிடேரியன்!

சிவந்த மண் ஷூட்டிங்குக்காக இத்தாலிய நாட்டுத் தலைநகரான ரோமுக்குச் சென்றிருந்தோம்.

ஒரு ரெஸ்டாரண்ட். அந்த ஊரில் சைவ உணவே குதிரைக்கொம்பு.

நண்பர்கள் அசைவப் பிரியர்கள். ஏதேதோ ஆர்டர் கொடுத்தார்கள். நான் சர்வரைக் கூப்பிட்டேன். ஆங்கிலத்தில் அழகாக ''எனக்கு வெஜிடபிள் சாண்ட்விச்வேணும்;'' என்றேன்.

'மடையா! இதுகூடவா எனக்குத் தெரியாது' என்கிற மாதிரி என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனான் சர்வர்.

அரை மணிக்குப் பிறகு வந்தான், சாண்ட்விச் சோடு. எடுத்தேன். கடித்தேன்.

உப்புக்கரித்தது. விழுங்க முடியவில்லை.

'ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டது' என்று என் மூளையில் உறைத்தது!

பக்கத்திலிருந்த காமிராமேன் கப்பாடியாவிடம் அதைச் சாப்பிட்டுப் பார்க்கச் சொல்லி ''சாண்ட்விச்சுக்குள் என்ன இருக்கிறது!'' என்று சொல்லச் சொன்னேன்.


சாப்பிட்டார்.


''லவ்லீ டேஸ்ட்! இது போர்க் சாண்ட்விச்!'' என்றார். அதாவது பன்றிக் கறி. பத்து நிமிடம் நான் மயங்கிக் கிடந்தேன். அன்று முழுவதும் நாக்கு மட்டுமல்ல, உடம்பெல்லாம் உப்புக் கரித்தது!

நான் வெஜிடேரியன்!

முட்டை + மீன் + கோழிக்கறி + மட்டன் + பன்றிக் கறி இத்தனையும் சாப்பிட்ட நான் வெஜிடேரியன்!








சமீபத்தில் ரிலீஸான — தவறு, தவறு டெலிவரி ஆன ஒரு படத்திலிருந்து சில காட்சிகள் இங்கு தரப்படுகிறது. வெளிநாட்டில் நடந்த சம்பவமே இப்படத்தின் கதை.
அந்தப் படம் : **AVAN – AVAL – ADHU**

அவன் - அவல் - ஆடு




டைரக்டர் சார் எதுக்கு இந்த டான்ஸ்? குண்டாக இருக்கிறவங்க ஆடினால் என்னவோ மாதிரி இருக்குதில்லே?
அந்த காரணத்துக்காகத்தான் இந்த சீனைப் புகுத்தியிருக்கிறேன். ஒவ்வொரு ஷாட்டையும் இருபது முப்பது ரீடேக் எடுக்கப் போகிறேன். தானாக இளைச்சுடுவாங்க!
அதிருக்கட்டும் மனோரமாதான் குண்டாக இல்லையே, அவங்களுக்கு எதுக்கு டான்ஸ்?
"டான்ஸ் ஆடுவேன். இல்லாவிட்டால் சொந்தக் குரலில் பாடுவேன்" என்று சொன்னாங்க. அதனால்தான் டான்ஸையே கொடுத்துட்டேன்!
அந்தப் பெண் யாரோ ஒரு ஆளுடன் தொடர்பு கொண்டிருக்கிறாள்.
அட! மருந்துவத் துறையில் இவ்வளவு தேர்ச்சியா உங்களுக்கு! எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?
அவங்க பங்களூரில் ஆடி பாடற சீன்களை நேற்று ரஷஸ் பார்த்தேனே!
அப்பாடா... படத்திற்கு நல்ல வசூல் இருக்கும், சிவகுமார்.
லட்சுமி, ஸ்ரீப்ரியா, நான் எல்லாரும் நடிக்கிறதால் சொல்றீங்களா?
ஊஹூம் 'ஏ' சர்டிபிகேட் கிடைக்கிறதுக்கு ஏற்பாடு பண்ணிவிட்டேனே.

வட்டமேஜை

● அறிவு கெட்ட பாப்பாரப் பயலே... இப்படிச் சிலர் தங்கள் மீது பாய்ந்திருப்பது கண்டு என் இதயம் மிகவும் வேதனைப் பட்டது... தந்தை பெரியாரின் பகுத்தறிவு பாசறையிலிருந்து வீசப்படும் இந்த நாராசமான சொற்கள் பெரியாரின் பெருமையைக் குறைப்பதாகவே இருக்கின்றன.
வீரபாண்டி — வறிலை அன்புச் செல்வன்

● பார்ப்பனரல்லாத உயர் ஜாதிக்காரர்களையும் வீரமணி எதிர்ப்பதாக ''கல்கி'' விஷமப் பிரசாரம் செய்து திசை திருப்ப முயல்வதாக ஒரு வாசகர் சென்ற இதழில் எழுதியிருந்தார். கடவுள் எதிர்ப்பு பிரச்சாரம் செய்து வரும் வீரமணி பார்ப்பனர்களுக்கு மட்டும் எதிரி அல்ல. கடவுள் நம்பிக்கை உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கும் எதிரியே!
சிதம்பரம் — பார்ப்பனரல்லாத
சிவ. ராஜகுமார்.

● எதிர்ப்புக் குரலுக்கும் இடமளித்துப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டியதுதான். என்றாலும் ஊர் பெயரில்லாத கடிதத்தைப் பிரசுரிப்பது நாகரிக உலகிற்கு ஒவ்வாதது. நீங்களும் மொட்டைக் கடிதங்களை ஆதரிப்பதா? வேண்டாம்.
திருச்சி — ஆ. வெங்கடாசலம்

● ஸ்ரீவித்யா ஒவ்வொருவரைப்பற்றி வாரா வாரம் ஒரு விமர்சனம் கொடுப்பது திரை உலக பிரமுகரைப் பற்றித் தெரிந்துகொள்ள உதவுகிறது. தொடரட்டும்!
''டாக்டர்கள்'' ஜோக்ஸ் வெகு ஜோர்!
சாங்கியம் — வீ. ஞானவேல்


● ''டாக்டர்கள் ஓவர் டோஸ்'' மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளது.
இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாட்டில் டாக்டர்கள் மிக அவசியம். அவர்களுக்கு வேலை குறையவும் செய்யாது.
ஒரு நல்ல டாக்டர் வருமானத்தையோ, செல்வம் சேர்ப்பதையோ குறிக்கோளாகக் கொள்ள மாட்டார். குணமாகிச் செல்லும் நோயாளியின் சிரிப்பே அவரது செல்வம்.
மதுரை — கே. வி. விஜயகம்
மதுரை தனியார் டாக்டர்கள்
நிர்வாகக் குழு உறுப்பினர்.

● டாக்டர்கள் ஓவர் டோஸ் கண்டவுடன் சிரிப்புக்குப் பதில் ஆத்திரம்தான் வந்தது— டாக்டர்கள் மீது. ஐந்து ரூபாயிலிருந்து பத்து ரூபாய் வரை வாங்கிக் கொண்டிருந்தவர்கள் தற்போது 20 ரூபாயும் 40 ரூபாயும் வாங்குகிறார்கள். மனிதாபிமானம் மிகவும் குறைந்து விட்டது. ஒருவரிடம் சென்றால் தேவையோ இல்லையோ டெஸ்டுகளுக்குப் பலரிடம் அனுப்பி நம்மை ஓட்டாண்டியாக்கி விடுகிறார்கள். நோயாளிகளின் வசதிக்கேற்ப அளவாக ஃபீஸ் வாங்கக் கூடாதா? டாக்டர் குருசாமி முதலியாரை எண்ணிப் பார்க்கிறேன்!
சென்னை 34 — சி. பாஸ்கரன்

● இசையில் நிறைகுடமாகிய திரு டி. கே. ஜெயராமன் குறித்து ''இசையின் அழகை உணர்ந்தவர்'' என்று திரு ஆர். வேணுகோபால் எழுதியிருப்பது படிக்கப் படிக்கப் பரவசமாக உள்ளது. அதிலும் சங்கீத பாவம் என்றால் என்னவென்பதைத் தெளிவாக எடுத்துரைத்தது அதி அற்புதம்.
ஈரோடு 10 — செம்பகா அருணாசலம்

● ''கல்கியின் தனித்தன்மையை'' இரண்டு முறை படித்து விட்டேன். 'கல்கி' ஆரம்ப இதழ் முதற்கொண்டு இன்றுவரை தவறாமல் படித்து வரும் ரசிகர்களில் நானும் ஒருவன். நமது பாரம்பரியத்தை விட்டுக் கொடுக்காமலும், அதே சமயத்தில் காலத்துக்கு ஏற்ப நம்மையும் சிறிது மாற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். 'போற்றுபவர் போற்றட்டும் தூற்றுபவர் தூற்றட்டும்' என்று உறுதியுடன் தொடர்ந்து கடமையாற்றுங்கள்.
மதுரை — டபிள்யூ. சி. சுந்தரேசன்

● குற்றம் சாட்டியவர்களில் நானும் ஒருவன் என்ற நிலையில் தங்கள் விளக்கம் கண்டு மகிழ்ச்சி. கல்கி தன் நிலையிலிருந்து மாறாமல் வாசகர்களுக்குச் சேவை செய்யட்டும்.
பட்டுக்கோட்டை — எஸ். சிவகுருநாதன்



● கால இயந்திரங்கள் செய்து, இறந்த காலத்துக்கும், வருங்காலத்துக்கும் நோகாமல் பயணம் செய்யும் 'தீமிஸ்' ஏற்கனவே நிறையக் கதைகள் வந்திருந்தாலும் ''காதலியை வெறுக்கிறேன்'' சிறுகதை வித்தியாசமான முடிவுடன் அமைந்திருந்தது.
கோவை 12 — துரை பால்ராஜ்

● காவலூர் எஸ். ஜெகநாதனின் ''சீதேவிகள்'' எழுத்தின் சிறந்த இலக்கிய சிருஷ்டிகளில் ஒன்றாக இங்குள்ள இலக்கிய விமர்சகர்களால் ஒருமித்துப் பாராட்டப்பெற்றது. அத்தகைய ஒரு கதையைக் கல்கி வெளியிட்டது நிறைவைத் தருகிறது. (27-7-80 இதழ்)
கொழும்பு 11 — இ. குமரகுருநாதன்
ஆசிரியர், கலாவல்லி

● ''திரு ராதாகிருஷ்ணன் ஹரிகதா மாங்குடி சிதம்பர பாகவதரின் 'மகன் வழிச் சந்ததி'' என்பது 'தம்பி வம்சத்தில் பிறந்தவர்' என்றிருக்க வேண்டும். (3-8-80 இதழ்)
சென்னை-43 — சங்கரநாராயணன்

அமெரிக்கத் தயாரிப்பு

நான் செய்த தவறு

— ஆர்ட் புச்வால்ட்

ஒரு விஷயத்தை உங்களிடம் மறைக்கப் போவதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக அதைச் சொல்கிறேனோ அவ்வளவுக்கவ்வளவு எனக்கு நிம்மதி. எனக்குக் கார் ஓட்டத் தெரியாது.

அமெரிக்கர்கள் பரந்த மனப்பான்மை உடையவர்கள். ஒருத்தன் குடிகாரனாக இருப்பதை ஏற்றுக் கொள்வார்கள். கடத்தல்காரனாக இருக்கலாம். மனைவியை அடிப்பவனாக இருக்கலாம். ஏன், எழுத்தாளனாகக் கூட இருக்கலாம். ஆனால் கார் ஓட்டத் தெரியாதவன் என்றால் அவனிடம் ஏதோ குறை இருக்கிறது என்று கருதுவார்கள்.

என் குறையைப் பல வருடங்களாக வெளியில் சொல்லாது இருந்தேன். என் நண்பர்கள் என்னைச் சந்தேகத்துடன், அலட்சியத்துடன் பார்க்க ஆரம்பித்தார்கள்.

எனக்கு எப்போது தொல்லை ஏற்பட்டது என்றால், ஸ்டோருக்குப் போய் ஏதாவது சாமான்களை வாங்கி, 'செக்' கொடுக்கும் போதுதான்.

சென்ற வாரம் பெரிய சூப்பர்மார்க்கெட்டுக்குச் சென்றேன். ஒரு டைப்ரைட்டர் வாங்கப் போனேன்.

சேல்ஸ்மேன் பல மாடல்களைக் காட்டினார். ஒரு மெஷினைத் தேர்ந்தெடுத்தேன். ''விலையைச் செக்காகக் கொடுத்து விடட்டுமா?'' என்று கேட்டேன்.

''தாராளமாக... ஆனால் உங்களிடம் அடையாளக் கார்டு ஏதாவதுஇருக்கிறதா?''

''இதோ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பாங்க் கார்ட். டைனர்ஸ் கிளப் கார்ட், டெலிபோன் இலாகா தந்த அடையாளக் கார்ட், ஜனாதிபதி மாளிகை செல்ல விசேஷ பாஸ், எல்லாம் இருக்கின்றன.''

சேல்ஸ்மேன்எல்லாவற்றையும்பார்த்தார். ''உங்களுடைய கார் டிரைவிங் லைசென்ஸ் எங்கே?'' என்று கேட்டார்.

''என்னிடம் கிடையாது.''

''ஏன், தொலைந்து போய்விட்டதா?''

''இல்லை...இல்லை... நான் கார் ஓட்டுவதே இல்லை.''

பேசிக்கொண்டே ஏதோ பட்டனை அழுத்தினார் அவர். சில செகண்டுகளில் உதவி மானேஜர் அங்கு வந்தார்.

''சார்.... இந்த ஆள் ஒரு செக் கொடுக்கிறேன் என்கிறார். இவரிடம் கார் டிரைவிங் லைசென்ஸ் இல்லை. நம் வாட்ச்மேனைக் கூப்பிடட்டுமா?'' என்று கேட்டார்.

''அவசரப்படாதே... அவரை நான் விசாரிக்கிறேன்... ஆமாம், உங்கள் டிரைவிங் லைசென்ஸை ஏதாவது ஆக்ஸிடெண்ட் காரணமாகப் போலீஸ் பறித்துக் கொண்டுவிட்டதா?''

''இல்லை. நான் கார் ஓட்டுவது கிடையாது. எனக்குக் கார் ஓட்டப் பிடிக்காது.''

''யாருக்குத்தான் கார் ஓட்டப்பிடிக்கிறது? மிஸ்டர் உண்மையை ஒப்புக்கொள்ளுங்கள். டிரைவிங் லைசென்ஸ் இல்லாதபோது எப்படித் துணிந்து செக்கை மாற்ற முயற்சி செய்கிறீர்கள்?'' என்று இரைந்தார்.

''மற்ற அடையாளக் கார்டுகள் போதும் என்று நினைத்தேன். ஜனாதிபதி மாளிகைப் பாஸ் சுலபமாகத் தரமாட்டார்கள். ரகசிய போலீஸ் விசாரணைகளுக்குப் பிறகுதான் கிடைக்கும்.''

''ரகசியப் போலீஸ் எத்தனையோ பேருக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. அதிருக்கட்டும். டிரைவ் செய்யத் தெரியாத ஆசாமி எப்படி மார்க்கெட்டுக்கு வந்தீர்கள்?''

''டாக்ஸியில்.''

''ஆஹா... பிரமாதமான ஜோக்.''

இந்தச் சமயம் எங்களைச் சுற்றிச் சிறிய கூட்டம் கூடிவிட்டது.

''என்னவாம்?''

''இந்த மனுஷனிடம் டிரைவிங் லைசென்ஸ் கிடையாதாம்!''

''கார் ஓட்டியதே இல்லையாம்!''

''என்ன சொன்னான். ஆளைப் பிளந்து கட்டுங்கள்!''

''பிளக்கிறதா? இஞ்ச் இஞ்சாக வெட்டணும்.''

''நம் அமெரிக்காவுக்கே இவனால் அவமானம். நம் எதிரி இவன்.''


இந்தச் சமயத்தில் ஸ்டோர்ஸின் மானேஜர் அங்கு வந்தார். நல்ல காலம், அவருக்கு என் பெயரைத் தெரிந்திருந்தது. 'செக்' வாங்கிக்கொள்ளச் சொன்னார்.

இப்படி நடந்துவிட்டதே என்று அவருக்குச் சிறிது வருத்தம். ''போகட்டும்... வாருங்கள் கொஞ்சம் ஒயின் சாப்பிடலாம்'' என்றார்.

''நான் குடிப்பது இல்லையே'' என்றேன்.

இதைக் கேட்டதும் அவர் முகம் கடுகடுத்தது. கதவினருகில் என்னைத் தள்ளினார். ''போய்யா வெளியே... இனி இந்தப் பக்கம் தலையைக் காட்டாதே... உங்களால் அமெரிக்காவின் இமேஜே நாசமாகிவிடும்'' என்றார்.




மொராதபாத்
திட்டத்தின்
பலன்கள்
ஏழைகளை
எட்டவில்லை
வழக்கமான
சுதந்திர தின விருந்து!
புள்ளே!
வனஸ்பதி விலை குறையுதா?..
சோப் விலை குறையுதா?..
துணிமணி விலை குறையுதா?
டூத் பேஸ்ட் விலை குறையுதா?
மருந்து
விலை குறையுதா?

1980 ஆகஸ்டு 24
ரௌத்திரி ஆவணி 8
மலர்: 39 இதழ்: 4



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

சிரிப்பைப்பற்றிச் சற்று சீரியஸாக....

சென்ற வாரமே இது பற்றி எழுதியிருக்க வேண்டும்; நகைச்சுவை சிறப்பிதழில் எழுதினால் இன்னும் பொருத்தமாய் இருக்குமே என்று தள்ளிப் போட்டோம்!

''கராத்தே கற்கலாம்'' என்ற பகுதி ''கராத்தே பயிற்சி'' என மாறியுள்ளதையும் ஆர். வி. டி. மணிக்குப் பதில் டோனி பொன்னையா எழுதுவதையும் நேயர்கள் சென்ற வாரமே கவனித்திருப்பீர்கள். இந்த மாற்றத்துக்குக் காரணம் என்ன தெரியுமா?

கல்கி, ஆகஸ்டு 3ம் தேதி ஆண்டு மலரில் கராத்தே பற்றிய ஜோக் ஒன்றோ இரண்டோ இடம் பெற்றதாம், அது ஆர். வி. டி. மணிக்குப் பிடிக்கவில்லையாம்! 'கல்கிக்கு இனி எழுத மாட்டேன்!' என்று சொல்லி விட்டார்! இந்த ஜோக், ஜோன்ஸ் வரைந்த கராத்தே ஜோக்கை விடப் பிரமாதமான ஜோக்காக நமக்குத் தோன்றுகிறது!

ஒரு கராத்தே நிபுணர், புளூ பெல்ட், கிரீன் பெல்ட், பிளாக் பெல்ட் எல்லாம் வாங்கிப் பிரசித்தி அடைந்தவர், சினிமாவில் ஒரு பெல்ட்டும் வாங்காத நடிகரிடம் தோற்றுப் போகத் தயாராயிருக்கிறார்! வில்லனாகத் தோன்றிப் புனிதமான தற்காப்புக் கலையைத் திரைக் கதைப் பிரகாரம் வில்லத்தனங்களுக்குப் பயன் படுத்துகிறார். இதெல்லாம் அவமானமாகத் தோன்றவில்லையாம்! கல்கியில் வந்த ஜோக் இவருக்கு இன்ஸல்ட்டாகப் போய் விட்டதாம்!

இதை விடப் பெரிய நகைச்சுவை வேறு என்ன இருக்க முடியும்? கராத்தே மணியை மட்டும் குற்றம் சொல்லிப் பயனில்லை. நமது தேசத்தில் பொதுவாகவே நகைச்சுவை உணர்வு கம்மிதான். ஷேக்ஸ்பியரைத் தெய்வமாகப் போற்றும் இங்கிலாந்தில் அவரையும் அவரது இலக்கியத்தையுமே கிண்டல் செய்து புத்தகம் எழுதுகிறார்கள்! இன்னும் மேனாடுகளில் எத்தனையோ பிரமுகர்களையும் ஸ்தாபனங்களையும் நகைச்சுவை மூலம் பிய்த்து உதறுகிறார்கள். இவ்வளவு இருந்தும் போதவில்லை! ''நகைச்சுவை செத்து விட்டது!'' என்று ஒரு சிறந்த புத்தகமே எழுதியுள்ளார் ஜியார்ஜ் மைக்ஸ். நம் நாட்டிலோ நகைச்சுவை எழுத்தாளர்களே ரொம்பக் குறைவு; மக்களிடையே நகைச்சுவை ரசனை அதை விடக் குறைவு!

டாக்டர்கள் தொழிலையும் அவர்கள் சேவையையும் ஆற்றலையும் சாதனைகளையும் சிறப்பித்துப் பக்கம் பக்கமாக கல்கியில் எவ்வளவோ எழுதியிருக்கிறோம். அதையெல்லாம் ஒரு டாக்டரும் தம் கண்ணில் பட்டதாகக் காட்டிக் கொண்டதில்லை. ஆனால் ஆகஸ்டு 10உ இதழில் உமாபதி வரைந்த ''டாக்டர்கள் ஓவர் டோஸ்'' என்ற பகுதியைப் பார்த்து விட்டுப் பல டாக்டர்கள் தாங்கள் வேதனை அடைந்ததாக எழுதியுள்ளார்கள்!

இப்படியே வக்கீல் ஜோக் எழுதினால் வக்கீலும், எம். எல். ஏ. ஜோக் எழுதினால் அரசியல்வாதியும், சினிமா ஜோக் எழுதினால் டைரக்டரும், மாமியார் ஜோக் எழுதினால் மாமியார்களும் கோபித்துக் கொண்டே போகலாம். இப்படி ஒவ்வொன்றாக ஒதுக்கிக் கொண்டே போனால் பத்திரிகை ஆசிரியர் ஜோக்ஸ் மட்டுமே மிஞ்சும்! இந்த வாரம் அட்டைப் படத்தில் பிள்ளையார் ஜோக் ஒன்று இடம் பெற்றுள்ளது. விநாயகப் பெருமான் கோபித்துக் கொள்ள மாட்டார் என்பது மட்டும் நிச்சயம்!

''மனத்தைப் புண்படுத்தாத ஜோக் பிரசுரித்தால் ஏன் கோபப்படப் போகிறோம்?'' என்று சிலர் வாதிக்கிறார்கள். ''நகைச்சுவை என்பது என்ன? எது சிறந்த நகைச்சுவை? இது, படிக்கிறவர் யாருடைய மனத்தையாவது, புண் படுத்துமா? எவ்வளவு பேர் சிரிப்பார்கள்?'' என்றெல்லாம் யோசித்து யோசித்து ஹாஸ்யமாக எழுத முடியாது. நகைச்சுவை ரசிக்க வேண்டிய விஷயம். ஆராய்ச்சியில் புகுந்தால் நகைச்சுவை பிராணனை விட்டு விடும்.

நமது காரியாலயத்தில் பணியாற்றித் தற்போது ஓய்வு பெற்றுள்ள ஸோமாஸ்கந்தன் (காந்தன்) மிமிக்ரியில் வல்லவர். ஒரு சமயம் அவர் ஆசிரியர் கல்கியை மிமிக்ரி செய்து சகாக்களைச் சிரிக்கப் பண்ணிக் கொண்டிருந்தார்! (காரியாலய நேரத்தில்தான்!) அப்போது எதிர்பாராமல் கல்கியே அறைக்குள் நுழைந்து விட்டார்! யார் முகத்திலும் ஈயாடவில்லை! கல்கி அமைதியாகச் சென்று ஆசனத்தில் அமர்ந்து கொண்டு, ''ஏம்பா நிறுத்தி விட்டாய்? நானும்தான் ரசிக்கிறேனே'' என்றார்! மிமிக்ரி தொடர்ந்தது! கல்கியும் சிரித்து மகிழ்ந்தார்! ''பலே, பேஷ்!'' என்றார்.

நகைச்சுவையும் அதன் ரசனையும் இப்படித்தான் இருக்க வேண்டும்.

⁂ ⁂ ⁂

எஸ். வி. வி. நூற்றாண்டினை யொட்டி இந்த வாரம் வெளிவரும் நகைச்சுவை சிறப்பிதழை எஸ். வி. வி. யின் நினைவுக்குக் காணிக்கையாக்கி மகிழ்கிறோம். இந்த இதழின் தயாரிப்பில் அகஸ்தியனுடன் ஒத்துழைத்த எழுத்தாளர்கள், ஓவியர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்கிறோம்.

சுஜாதா என்றொரு இளம் பெண்...



சமுதாயத்துக்கு உதவ வேண்டும் என்ற சிலரது ஆசை விசித்திரமான விதத்தில் நிறைவேறுகிறது. அதிசயம் ஆனால் உண்மை என்பது போல.

சுஜாதா என்றொரு இளம் பெண். ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமியிடம் அவளுக்கு அளப்பரிய பக்தி. ஆயுர்வேத மருத்துவத்தில் எப்படியோ எதனாலோ அவளுக்கு ஓர் ஈடுபாடு. ஆயுர்வேதம் சம்பந்தப்பட்ட புத்தகம் ஏதாவது கிடைத்தால் சுஜாதா ஆவலோடு படிக்க உட்கார்ந்து விடுவாள்! நாமெல்லாம் சுஜாதா நாவலைப் படிப்பது போல் அவள் அதை ஆர்வத்துடன் படிப்பாள்! தன் தாயாரிடம் ஆயுர்வேதத்தின் சிறப்பை உலகறியச் செய்ய வேண்டும்; ஆயுர்வேதத்தின் மூலம் ஏழை எளியோருக்கு உதவ வேண்டும் என்று கூறிக் கொண்டே இருப்பாள்.

திடீரென்று ஒரு நாள் சுஜாதா காலமாகி விட்டாள்!

இப்படி அகால மரணமடைந்ததன் மூலம் ஆயிரக் கணக்கான ஏழை எளியோரை மரணப் பிடியிலிருந்து மீட்டு ஆரோக்கியம் வழங்க வழி வகுத்தும் விட்டாள் சுஜாதா.


சுஜாதாவின் வாழ்நாள் விருப்பத்தை நிறைவேற்ற முன்வந்த அவள் தாயார் ஜனகவல்லி, ஆயுர்வேத மருத்துவ இல்லம் அமையத் தனக்குச் சொந்தமான மனையை வழங்கினாள். மேலும் ரூ. 25,000 நன்கொடையும் அளித்தாள். ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகளின் அருளாசியுடன் சுஜாதா ஆயுர்வேத இலவச மருத்துவ இல்லம் இம்மாதம் 22ம் தேதி ஆரம்பமாகிறது. காலை ஏழு மணிக்கு ஆளுனர் பட்வாரி திறந்து வைக்கிறார்.



ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்தினைப் பாதுகா ஆச்ரமம் என்று குறிப்பிடுவார்கள். ஆதி சந்நிதானத்தின் பாதுகைகளை அடுத்தடுத்து வருபவர்கள் பூஜித்து வந்திருக்கிறார்கள். எனவே இன்றைய ஆண்டவன் ஸ்வாமிகள் சென்னையில் 1972ல் தொடங்கி வைத்த அறக்கட்டளை ஏற்பாடு பாதுகா சாரிடீஸ் என்று பெயர் பெற்றது. இந்த அறக்கட்டளை ஏற்கெனவே செய்து வரும் பலவித சமுதாயப் பணிகளோடு இன்று சுஜாதா ஆயுர்வேத இலவச மருத்துவ இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பையும் ஏற்றுள்ளது. ஆலோசனை, மருந்து இரண்டுமே இலவசம்தான்.

நெ. 20, தெற்குத் தெரு, ஸ்ரீராம்நகர், சென்னை-18 என்ற விலாசத்தில் இயங்கும் சுஜாதா மருத்துவ இல்லத்தில் எதிர்காலத்தில் ஆயுர்வேத ஆராய்ச்சிகளும் நடைபெற வேண்டும் என்பது ஆண்டவன் ஸ்வாமிகளின் விருப்பம். அவருடைய பூரண அனுக்கிரகம் இருக்கும்போது நல்ல பணி நிறைவேறாமலா போய்விடும்?

—சிக்கி


படப்பிடிப்பு ரத்தாகிவிட்டது! நேற்றிரவு கதாநாயகியின் அறையில், பையன், கொசு வர்த்திச் சுருள் வைக்க மறந்து விட்டதால் கதாநாயகியின் முகத்தில் கொசுக்கள் 'மேக்கப்' போட்டுவிட்டன.
கொசுக்களை 'பேக் அப்' செய்து விரட்ட உதவுவது டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
நீங்கதானா, எங்க வீட்டுக்கு மேலே புதுசா வந்த குடித்தனக்காரங்க நீங்க என்ன தினம் இச்சிப்படி டான்ஸ் பயிற்சி பண்றீங்களா?
ஆமா! இந்தப் பாழாப்போன கொசு கடிக்கிற கடி இச்சிப்படி பரதநாட்டியம்... எல்லாம் ஆடவைக்கிது.
கொசுக்களை நடனமாடவைத்து விரட்டுகிறது
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
ஏன் எப்பப் பார்த்தாலும் 'ஆமை'யையே வேண்டிக்கிட்டிருக்கே?
வேதகாலத்தில் ஆண்டவன் ஆமை அவதாரம் எடுத்து ராட்சசர்களை அழித்தான். இன்றோ அது ராட்சசக் கொசுக்களை விரட்டுகிறது
கொசுத் தொல்லையற்ற தூக்கத்தைப் பெற வித்தாரதேவியை வேண்டத் தேவையில்லை. அதற்கு உதவுவது
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
..போர்ட், பம்பாய்-400 023. ..போன்: 273831

எனக்குத்தான் அவன் எனக்குத்தான்
என்னைத்தான் அவன் காதலித்தான்! -பாரதிதாசன்

இப்பொழுதெல்லாம் ராஜீவ் சனி, ஞாயிறு தினங்களில் யாருக்கும் கால்ஷீட் கொடுக்க மறுத்தான். அந்த இரண்டு நாட்கள் உஷாவுக்கு மட்டுமே சொந்த மானவை, அவளுக்காகவே அந்த நாட்களை ஒதுக்கி வைத்தான்.

திரைப்படத் துறையில் இது ஒரு விநோத மான விஷயமாகப் பேசப்பட்டது. ''இப்பொழுதெல்லாம் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ராஜீவ் குமார் எந்தப் படப்பிடிப்பிலும் கலந்து கொள்வதில்லை; எந்தப் பத்திரிகை நிருபர்களுக்கும் பேட்டி அளிப்பதில்லை; அந்த இரண்டு தினங்களில் யாரையும், முக்கிய மான தயாரிப்பாளர்களைக் கூட வீட்டுக்கு வர அனுமதிப்பதில்லை! ஒவ்வொரு சனி ஞாயிறும் அஞ்ஞாதவாசம் போய் விடுகிறார்! என்ன காரணமோ?'' என்று வியந்தார்கள். உண்மையான காரணம் யாருக்கும் தெரிய வில்லை. மிகவும் முக்கியமான விஷயமானாலும், அந்த இரு நாட்களில் எப்போதாவது மாலை வேளைகளில் மட்டும் உஷா பத்திரமாக அங் கிருந்து போய்விட்ட பிறகு, யாருக்காவது வீட்டில் பேட்டி அளிப்பான்.

ஜெயலலிதா

உறவின் கைதிகள்




உஷாவைக் கண்ட நாள்முதல், ராஜீவ் எந்தப் பெண்ணையும் நினைத்துக் கூடப்பார்க்க வில்லை. எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்க வேண்டுமென்று கூட அவனுக்குத் தோன்றவில்லை. இப்பொழுது அவன் இரவு களைத் தனியாக, உஷாவின் நினைவிலேயே கழித்தான்.

இதுவரை அவன் அனுபவத்தில், இப்படிப் பட்டகளங்கமில்லாத உண்மையான அன்பை யார் அவனிடம் காண்பித்திருந்தார்கள்? இதுவரை அவனுக்குத்தெரிந்ததெல்லாம் திட் டம் போட்டு அவனிடமிருந்து என்னென்ன

லாபங்களைக் கரக்கலாமென்ற எதிர்பார்ப்புடன் வந்த விலைமாதுகளின் போலிக் கொஞ்சல்கள்தானே? அப்படி வந்த பெண்களில் ஒருத்திகூட கன்னியாக இருந்ததில்லை.

உஷாவின் வாழ்க்கையில் அவள் அறிந்த முதல் ஆண் அவன்தான் என்ற உண்மை, சொல்லில் அடங்காத பெருமிதத்தில் அவனைத் திளைக்க வைத்தது. அந்தவிவரம் அவன் உள்ளத்தைப் பூரிக்க வைத்தது.

தங்கள் முதலாளியின் போக்கில் இந்தப் புதிய மாற்றத்தைக் கண்ட ராஜீவுடைய வீட்டு வேலைக்காரர்களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள் — ''யாரோ இந்தச் சின்ன அம்மா ரொம்ப நல்லவங்களாகத் தெரியறாங்க.''



''ஆமாம். நம்ப ஐயாவை முழுசா மாத்திட்டாங்க!''

''இந்தச் சின்ன அம்மா வர ஆரம்பிச்சதிலிருந்து, அந்தத் தறுதலைங்க எல்லாம் இப்ப வர்ரதே நின்னுப் போயிட்டது. கவனிச்சியா?''

''இந்த அம்மாதான் அதற்குக் காரணம். மகாலட்சுமி மாதிரி இருக்காங்க. இவங்களையே நம்ம ஐயா கட்டிக்கிட்டா எவ்வளவு நல்லா இருக்கும்!''

''அப்பத்தான் இந்த வீடு, வீடு மாதிரி இருக்கும். புதுக் களை பிறக்கும்!''

ராஜீவுடைய மனத்திலும் போகப் போக இப்படிப்பட்ட எண்ணங்கள் மெதுவாகத் துளிர் விட ஆரம்பித்தன. தன் வாழ்க்கையில் முதன் முறையாக, ராஜீவ் உண்மையாகக் காதல், நேசம் என்ற வார்த்தைகளின் பொருளை உணர்ந்தான். நாளடைவில் அவனுக்கும் உஷாவுக்கும் இடையில் ஓர் அபூர்வமான அன்னியோன்யம் உருவாயிற்று. அவள் பால் அவனுக்கேற்பட்ட அன்பின் ஆழம் அவனையே அதிர வைத்தது.

''இப்படிப் பட்ட ஒரு பெண்ணைத்தான்என் வாழ்நாள் முழுதும் நான் எனக்கே தெரியாமல் தேடிக் கொண்டிருந்தேன்!'' என்று எண்ணினான். உஷா இல்லாத வாழ்க்கை இனித் தேவையே இல்லை என்று கருதினான். அவளே அவன் வாழ்வின் அச்சாணி ஆகிவிட்டாள். அவளுடைய வெகுளித்தனம், குழந்தைத்தனம், பவித்திரமான, கள்ளம் கபடமில்லாத அன்பு அவனை அவளுக்கு அடிமைப்படுத்திவிட்டது.

உஷாவைப் பொறுத்தவரையில் அவள், கட்டிலடங்காத ஆனந்தத்தில், பரவசமடைந்த இன்ப நிலையில் இளைத்தாள். என்றைக்குமே ராஜீவ் அவள் கனவுகளின் மன்னனாக இருந்தவன். இப்போது உண்மையாகவே நிஜ வாழ்க்கையிலும் அவளுக்குச் சொந்தமாகி விட்டான். இத்தனை காலம் தூரத்திலிருந்து அவள் ஹீரோ வொர்ஷிப் செய்துவந்த அவன், அவளுக்கே சொந்தம் ஆகிவிட்டதை எண்ணும்போது, அவள் கால்கள் பூமியில் நிற்கவில்லை.

அவள் பார்வையில் அவன் எந்தக் குறையுமே இல்லாதவன். இருவருடைய வயதில் இருந்த நீண்ட இடைவெளி உஷாவுக்குக் கொஞ்சமும் வித்தியாசமாகப் படவில்லை. மாறாக, அதுவே அவளுக்கு அவனை இன்னும் கவர்ச்சிகரமாகக் காண்பித்தது. குழந்தைப் பருவத்தில்தந்தையின் அன்பை அறியாத இளம் பெண்கள், சாதாரணமாக வயதில் அவர்களைவிட மிகவும் முதிர்ந்த ஆண்களையே விரும்புவார்கள் என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுவார்கள்.

உஷாவின் விஷயத்தில் அதுவே உண்மையாகிவிட்டது. நினைவு தெரியும் முன்பே தந்தையை இழந்து, தாயின் பாதுகாப்பில் மட்டும் வளர்ந்த உஷாவுக்கு, ராஜீவ் ஒரு தகப்பனைப் போல, ஒரு ஃபாதர் ஃபிகர் ஆகவிளங்கினான்.

அவனே அவளுடைய உலகமாகி விட்டான். அவனே அவளுக்கு எல்லாம்.

அன்புள்ள ''கல்கி'' ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். ''உறவின் கைதிகள்'' நான்காவது அத்தியாயத்தில் இரண்டாயிரத்து ஐநூறு பேர் கல்லூரி விழாவிற்கு வந்திருந்தார்கள் என்றுதான் எழுதியிருந்தேன். இருபத்தையாயிரம் பேர் என்று குறிப்பிட்டது தங்கள் காரியாலயத்தில் நிகழ்ந்த தவறு. இதை அப்போதே ''கல்கி'' அலுவலகத்துக்குத் தொலைபேசி மூலம் சுட்டிக் காண்பித்தேன்.

10-8-80 ''வட்ட மேஜையில்'' இத் தவறைச் சுட்டிக்காட்டிய தஞ்சை ஷோபாவின் கடிதத்தை பிரசுரித்த தாங்கள், தவறு தங்களுடையது தான், எழுத்தாளருடையது அல்ல என்று விளக்கம் கூறாமல் விட்டுவிட்டது ஏனோ?

சென்னை-86 ஜெயலலிதா

தாய், தகப்பன், காதலன், நண்பன், ஆசான், குரு—சகலமும் அவனே.

தாயைப் போல அன்பு காட்டினான். தன் கையாலேயே அவளுக்குச் சோறு ஊட்டினான். தகப்பனைப் போல மடியில் வைத்து அவளைக் கொஞ்சினான், சீராட்டினான். காதலனாக அவளை இன்ப சுகத்தில் மிதக்க வைத்தான். அவள் சிரித்து, விளையாடி, எது வேண்டுமானாலும் விவாதிக்கக் கூடிய நண்பனாக விளங்கினான். இலக்கியம், விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம், வேதாந்தம், இசை, நாட்டியம், ஓவியம் போன்ற விஷயங்களில் தனது கல்வி அறிவால் அவளைத் திணறடிக்கச் செய்து, இவற்றில் மேதை ஆகிய அவன் ஆசானாக மாறி, அவளுக்குத் தெரியாத பல புதிய விஷயங்களை அவளுக்குக் கற்பித்தான்.

மாடிக்கே சாப்பாடு கொண்டு வரப் பணியாளருக்கு உத்தரவிடுவான். வைத்துவிட்டுப் போய்விடச் சொல்வான்.

''நான் உங்களுக்குச் சாப்பாடு போடறேன்!'' என்பாள் உஷா.

''ஊஹூம். வேண்டாம். நான்தான் உனக்குப் பரிமாறணும்!'' என்பான் ராஜீவ்.

''ஏன்?''

''பாத்திரங்கள் சுடும். மிருதுவான இந்தக் கை சூடு தாங்காது எரியும்!'' என்ற அவள் கையில் மெல்முத்தமிடுவான்; அந்த அன்பு அவள் கண்களைக் கலங்க வைக்கும். தொண்டையை அடைத்து விடும். மேலும் விவாதிக்க முடியாமல் விட்டு விடுவாள்.

வீட்டின் மூன்றாவது மாடியில் ஒரு மினி ப்ரொஜக்ஷன் தியேட்டர் இருந்தது. சில அரிய ஆங்கிலப் படங்களை வரவழைத்து அங்கே அவளுக்காகப் பிரத்தியேகமாகப் போட்டுக் காண்பிப்பான். தன்னுடைய புதிய படங்கள் சிலவற்றையும் அவளுக்குக் காண்பிப்பான்.

''பேப்'', ''ரீவே கோஷே'', ''ஜெனல்'' ''லி ஏர் டு டெம்ப்ஸ்'' போன்ற அரிய வெளிநாட்டு சென்டுகளால் அவளைக் குளிப்பாட்டினான். இந்த நறுமணங்களின் பெயர்களைக்கூட உஷா அதுவரையில் கேள்விப் பட்டிருக்கவில்லை.

இன்னும் அவளுக்காக எவ்வளவோ செய்ய வேண்டும் என்று துடித்தான். வைரங்கள், நவரத்தினங்கள், பட்டுப் புடவைகள் — இப்படி அவள் மடியில் பரிசுகளாகக் குவிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். ஆனால், உண்மையில் உயர்ந்த விலையுள்ள எந்தப் பொருளையும் அவனிடமிருந்து பெற்றுக் கொள்ள அவள் மறுத்தாள்.

''நான் ஆசையாக் கொடுக்கிறதை வேண்டான்னு சொல்லாதே. என்னை இன்ஸல்ட் பண்ற மாதிரி இருக்கு'' என்றான்.

''ஏன் இப்படிக் கோபிக்கறீங்க? இதுக்காக நான் உங்ககிட்டப் பழகலியே!''

''அது எனக்கும் தெரியும். நானு பிரியப்பட்டுக் கொடுக்க விரும்பறதை ஏன் வேண்டாம்னு சொல்றே?''

''ப்ளீஸ் ராஜீவ் டார்லிங், ட்ரை டு அண்டர்ஸ்டேண்ட். இந்த ப்ரஸண்ட்ஸ் எல்லாத்தையும் நான் ஏத்துக்கிட்டாலும், எங்கே கொண்டு போய் வெச்சுக்க முடியும்? ஹாஸ்டல் ரூம்லே என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் வருவாங்க, போவாங்க. இதெல்லாம் உனக்கு ஏதுன்னு கேட்டாங்கன்னு நான் என்ன பதில் சொல்ல முடியும்? எனக்கு எவ்வளவு சங்கடமா யிருக்கும்? கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க.'' இப்படி சாமர்த்தியமாக அவனைச் சமாதானப்படுத்தினாள்.

''உம்... நீ சொல்றதும் வாஸ்தவம்தான். பட் உஷா, ஐ வாண்ட் டு கிவ் யூ த ஹோல் வர்ல்ட்!'' என்றான் ராஜீவ்.

''நீங்கதான் என் உலகம். நீங்க இருந்தாப் போதும். எனக்கு வேறே எதுவுமே வேண்டாம்'' என்றாள் அவள்.

ஒரு நாள் ஏதோ பேச்சின் இடையில், ''ராஜீவ், நீங்க ஏன் கல்யாணமே பண்ணிக்கலே?'' என்று உஷா கேட்டாள்.

ஒரு விசித்திரமான பாவம் அவன் முகத்தில் தோன்றியது.

''கல்யாணம் பண்ணிக்கிட்டேன், இருபது வருஷங்களுக்கு முன்னாலே'' என்று பதில் சொன்னான்.

''என்ன உங்களுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆயிட்டதா?'' — உஷா அதிர்ந்து போனாள். அவள் தலை சுற்றியது. முகம் வெளுத்து விட்டது.

(தொடரும்)

மனைவி: ஊரெங்கும் பிள்ளை பிடிக்கிறவனைப் பத்தியே ஒரே பேச்சா இருக்கு... எனக்கு பயமாயிருக்குங்க.

கணவன்: நமக்கென்ன குழந்தையா குட்டியா... நீ ஏன் பயப்படுறே?

மனைவி: உங்களை நினைச்சுதான் பயப்படுறேன். பார்த்தா பிள்ளை பிடிக்கிறவன் மாதிரியே இருக்கு.

சௌமியா, தேனி





तमसो मा ज्योतिर्गमय
உயர்ரக
ஃபாஷனின்
உன்னத நிலே
ஸன் க்ரேஸ்
துணிமணிகள்
அளிப்போர்:
மிஹிர்
டெக்ஸ்டைல்ஸ்
&
மாதுல்யா
மில்ஸ்
SUN GRACE
FABRICS
துடிப்பை
அழகுடன்
வெளிப்படுத்துகிறது
ஸன் க்ரேஸ்

அத்தியாயம் 4

பெண்களின் அழகைக் கண்டு ரசிப்பதில் அர்ஜுனனுக்குத் தனி உற்சாகம். சின்னப் பிள்ளையாக இருந்தபோது மார்லின் மன்ரோ, ஹெடி லாமர், அவா கார்ட்னர் போன்ற ஹாலிவுட் நடிகைகளின் போட்டோக்களில் ஆரம்பித்த கதை இளைஞனாக வளர்ந்த போது பிரிஜிட் பர்தாத், ஜீனா லோலோ பிரிஜிடா போன்ற கவர்ச்சிகளுக்குத் திரும்பியது. கல்லூரியில் படிக்கையில் அவனுடைய மனத்தில் பெண்கள் தனி இடத்தை ஆக்ரமித்துக் கொண்டார்கள். மாலாவின் கண் அழகு, சுகந்தியின் அவசரமாக இறங்கி கத்தி முனையில் நிற்கும் மூக்கு அழகு, சியாமளாவின் மார்பகத்தின் அடக்கமான நேர்த்தி, லலிதாவின் சின்ன இடை, ஹம்சாவின் பொன் நிறம் — இப்படி எத்தனை எத்தனையோ பெண்களின் அழகுகள் அவனுடைய இதய பீரோவில் அடைந்து கிடந்தன. ஒவ்வொரு இரவு ஒவ்வொருத்தி அவனிடம் வருவாள். கால்மாட்டில் உட்காருவாள். அருகே நிற்பாள். அவனுடைய தலையைக் கோதுவாள். அந்த மானசிக ஸ்பரிசம் அவனுக்குத் தாலாட்டு. தூங்குவான்.

மேலும் சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் பெண்கள் வெறும் மாமிசப் பிண்டங்கள், அவர்களுக்குக் கடவுள் கவர்ச்சியான உருவங்களைக் கொடுத்து ஆண்களிடம் அடைக்கலம் புக வழி வகுத்திருக்கிறான் என்ற கருத்து அர்ஜுனன் மனத்தில் நிலவியது. அந்தக் காலத்தில் மனம் எப்பெண்ணிடமும் மையல் கொள்ளவில்லை. ஆனால் நாள் செல்லச் செல்ல கவிஞர்களின் பாடல்கள், ஓவியர்களின் படங்கள், கோவில் சிற்பங்களெல்லாம்



புதியதொரு கருத்தை அவனிடம் உண்டாக்கின. பெண்ணின் அழகு தெய்வீகமானது என்று எண்ண ஆரம்பித்தான். மகாலட்சுமி, பார்வதி போன்ற தெய்வங்களெல்லாம் மனித மனத்தில் அகர ஒலிக் கதிர்களை எழுப்பவில்லை. அகர ஒளியைப் பரப்பவில்லை. தெய்வம் தன் உருவில் மனிதனை உண்டுபண்ணிற்று அல்லது மனிதன் தன் உருவில் தெய்வத்தை வடித்தானு என்ற சர்ச்சை அவனுள் எழுந்து குழப்பியது. நாள் செல்லச் செல்லப் பெண்கள் புதிர்களாக மாறலானார்கள்.

அவன் ஓர் அழகன் என்பதை அவனே உணர்ந்தான். சில பெண்கள் ஒரு தடவைக்கு இரு தடவைகளாகக் கள்ளத்தனமாகப் பார்ப்பதை உணர்ந்தான். சில பெண்கள் வலிய வந்து பேசினார்கள். சிலர் ஒட்டிக் கொள்ள முயற்சி செய்தார்கள். 'ரொம்பவும்' படித்துவிட்டு, கடவுள் கொடுத்த தொப்புள் ஒரு காட்சிப் பொருளாக இருக்கத்தான் என்ற எண்ணத்தோடு அவனிடம் நெருக்கம் காட்ட முயன்றாள் ஒருத்தி. அவளுடைய குச்சியான உடம்புக்கு அவ்வளவு திமிர் இருக்கக்கூடாது என்று அர்ஜுனன் முதல் நாளே விரட்டினான்.

கல்யாண வயதில் பல பெண்களின் வீடுகளிலிருந்து ஜாதகங்கள் வந்தன. மாப்பிள்ளை ராஜாமணிக்கு ஜாதகங்களில் நம்பிக்கை இல்லை என்றாலும் ஊரிலிருக்கும் பெரியவர்களுக்காகப் பொருத்தம் பார்த்தார். அர்ஜுனன் ஜாதகத்தில் செவ்வாய் எந்தக் கட்டத்தில் வேரூன்றி நிற்பது என்று பலநாள் யோசித்துக் கடைசியில் எட்டாம் இடத்தில் குடியேறியது. தோஷம். பெரிய தோஷம்.

செவ்வாய் எட்டாவது வீட்டில் வாடகை கொடுக்காமல் குடியேறியது ஒரு விதத்தில் அர்ஜுனனுக்குச் சௌகரியமாயிற்று. கல்யாணத் தொந்தரவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது.

அவனுடைய 'இளமையில் கல்' என்ற மூதுரை மீண்டும் உற்சாகத்துடன் புத்துயிர் பெற்றது.

அவன் பெண்களை, அவர்களின் அழகுகளை, பல கோணங்களிலிருந்து ரசிக்க ஆரம்பித்தான். ஒவ்வொரு விதமான அழகின் காரணமாக ஒவ்வொரு பெண் எப்படி நடந்து கொள்கிறாள் என்று ஆராய்ச்சியும் செய்ய ஆரம்பித்தான்.

இப்போது அவனுடைய ஆராய்ச்சிக்கு ஜி. எச். ஒரு பெரிய கூடமாக அமைந்தது. டாக்டர்கள், நர்சுகள், நோயாளிகள், நோயாளிகளைக் கவனிக்க, பார்க்க வருகிறவர்கள் எல்லாம் ஆராய்ச்சிக்கு மூலப் பொருள்களாக ஆனார்கள். ஆனால் இரவு வேளைகளில் அவர்கள் கால்மாட்டிலும் பக்கவாட்டிலும் வந்து நிற்கவில்லை. அவனுடைய தலையைக் கோதியும் விடவில்லை.

அன்று அவனுடையகண்ணில்மல்லிகா அகப்பட்டுக் கொண்டாள். எந்தப் பெண்ணின் உருவமும் அவனிடம் பிரமிப்பையோ, அதிர்ச்சியையோ சங்கடத்தையோ ஏற்படுத்தியதில்லை. மல்லிகா இந்த மூன்றையும் வெகு குறுகிய காலத்தில் ஏற்படுத்திவிட்டாள். மல்லிகாவும் ஒரு பெண்தான். கை கால் கண் மூக்கு நெற்றி மார்பு எல்லாம் எல்லோருக்கும் இருப்பது போல் இருக்கின்றன.

ஆனால் அவன் அவளிடம் ஒரு தத்துவத்தைக் கண்டான். தொட்டுப் பார்த்து ரசிக்கக் கூடாத அழகாகப் பட்டது.

அவளுடைய உடல் அமைப்போ, கண்ணோ, மூக்கோ, தாடையோ, இடையோ மார்பகமோ தனிதாக அவனைக் கவரவில்லை. இதெல்லாம் சேர்ந்து பிணைந்த உருவம்தான் மனத்தைத் தொட்டது. ஒரு பெண்ணைத் தொட்டு அறியாத அவன் மல்லிகாவைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்று அவா கொண்டான். ஆனால் ஒரு தெய்வத்தால்



மட்டுமே தொடக் கூடிய பெண் என்ற பயமும் எழுந்தது.

அர்ஜுனனுக்கு ஒரு குணம். மனம் எதை நினைத்துப் போராடினாலும் போராட்டத்தின் ஒலிகள் வெளியே கேட்காது. உள்ளே கோபம் குமுறிக் கொண்டிருக்கையில் கலகலவென்று சிரித்துக் கொண்டே பேசுவான். மனம் உற்சாகத்தில் திளைத்துக் கொண்டிருக்கையில் நா வெறுப்பைக் கக்கும். அவனுடைய நெஞ்சின் ஆழம் அவனுக்குத்தான் தெரியும். ஆனால் மல்லிகா விஷயத்தில் அவன் குழம்பிப் போனான். மனம் பூராவும் அடைத்துக் கொண்டுவிட்ட அவள், இடம் போதாத காரணத்தால் உடம்பெல்லாம் வியாபித்துக் கொண்டாள். அவனுடைய குணம் அவளிடம் மட்டும் பலிக்கவில்லை. ஏன்? அவனுக்கே புதிராக இருந்தது.

அன்று புறநிலை நோயாளிகள் பகுதியில் கதவுக்கு வெளியே நின்று கொண்டிருந்தான். வெளிக் கதவு திறந்து மக்கள் குபுகுபு என்று உள்ளே வர இன்னும் இரண்டு மணி நேரமாகும். சோடா; சிகரெட், வெற்றிலை பாக்குக் கடைகள் வியாபாரம் இன்றி மந்த நிலையில் காணப்பட்டன. ஆவின் பூத் திறந்திருந்தது. ஆனால், இன்னும் யாரும் வந்து 'போணி' செய்யவில்லை.

திடீரென்று ''அர்ஜுன்'' என்ற குரல் கேட்கவே அவன் ஏறிட்டுப் பார்த்தான்.

''என்ன மல்லிகா?''

''இங்கே என்ன பண்ணிண்டிருக்கீங்க? எங்க அப்பாவைப் பார்த்துக்கிற லட்சணம் இதுதானா!''

அர்ஜுன் சிரித்தான்.

''என்ன சிரிப்பா இருக்கா?''

''நீ மட்டும் என்ன அக்கறையோடு என் அப்பாவைக் கவனிச்சுக்கிறியாம்?''

''அதைப் பத்தி அப்புறம் பேசறேன். என் அப்பா எப்படி இருக்கார்?''

''சுகமாத் தூங்கறார். பிரயாணக் களைப்பு''

''வேடிக்கையா?''

''கார்த்தாலே வந்து சேர்ந்த உடனேயே எல்லா டெஸ்டுகளையும் ஆரம்பிச்சாச்சு. சாயங்காலம் எக்ஸ்ரே ஈ. ஸி. ஜி. எல்லாம் எடுக்கப்போறாங்க. சரியா பதினொரு மணிக்கு ஒரு ஊசி போட்டடா ஐயோன்னு கத்தினார். ஏன் மல்லிகா உன் அப்பா இன் ஜக்ஷனைக் கண்டு ஏன் அப்படி அலர்றார்?''

''அதிருக்கட்டும்; உங்க அப்பாவுக்குக் குளிர்விட்டுப் போயிட்டது. இப்ப என்ன செய்ஞ்சார் தெரியுமா?''

''நீ சொல்ல வேண்டாம். எனக்குத் தெரியும்.''

''என்ன தெரியும்? பிராந்தி சாப்பிடறார்.''

''இடையாது. இருக்கவே முடியாது. நீ பொய் சொல்றே.''

''என் கண்ணால் பார்த்தேன். அவருக்கு பொடேடோ சிப்ஸும் சீஸும் எங்கேயிருந்து கிடைச்சதோ தெரியலை. பக்கத்திலே வைச்சுண்டு ஒரு சிப்ஸுக்கு ஒரு வாய்னு...''

''எங்க அப்பா பிராந்தி சாப்பிட மாட்டார்!'' என்றான் அர்ஜுனன் அழுத்தந் திருத்தமாக.

''அப்ப?''

''அவர் விஸ்கிதான் குடிப்பார்.''

''ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரியில் மதுவா?''

''உன் கண்ணுக்கு அது ஆஸ்பத்திரி. ஆனா அவருக்கு அது ஒரு ஹோட்டல் ரூம்... பெர்மிட் இருந்தா அதை எங்கே எப்படி உபயோகப்படுத்தணும்னு இருக்கு. ஆனா அப்பாவுக்கு அப்படிப்பட்ட நியதிகள் இல்லை!''

''டாக்டர்கள் பார்த்துவிட்டால்?''

''ஒண்ணும் ஆகாது. இதுவரையில் நாப்பது எம். எல். ஏ. அஞ்சு மந்திரி ஏழு மாஜி மந்திரிகள் வந்து பார்த்துக் குசலம் விசாரிச்சுட்டுப் போயாச்சு''.

''இப்பத்தான் அவர் கண் அசந்தார். நாலு மணி வரை டிஸ்டர்ப் பண்ணக் கூடாதாம்.''

''ரொம்ப நல்லது. வா, போவோம். எங்க கார் கேட்டுக்குப் பக்கத்திலே இருக்கு.''

''எங்கே?''

''எனக்குக் கேள்வி கேட்டாப் பிடிக்காது.''

''சரி வரேன். ஆமாம் எதுக்கு முந்நூறு ரூபாய் சம்பளம்? நான் என்ன....,''

''உஸ்... என் அப்பாவின் குணம் உனக்குத் தெரியாது. உன்னை நான் என் ஃப்ரண்டுனு அறிமுகப்படுத்தினா போதைக் கண்ணோடு பார்ப்பார். உன் மீதும் அவருக்கு ஒரு மதிப்பு இருக்காது.... அதோடு உன் அப்பா வைத்தியச் செலவுக்கு.''

''பெரிய ஆள்....''

''இல்லாமப் போனா இருபத்தெட்டு வயசு வரை மாப்பிள்ளை ராஜாமணியை விட்டுப் பிரியாம இருப்பேனா....''

''உங்க வயசை நீங்க சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கணுமாக்கும்!''

''ஏன், என் எஸ். எஸ். எல். ஸி. புக் உங்கிட்ட இருக்கே?''

''உங்க ஜாதகமே இருக்கு.''

''என்ன உளர்றே?''

''என் அப்பாவுக்குத் தம் காலடியிலே எப்படி இருக்கோ இல்லையோ தெரியாது. ஆனா பிறத்தியாருடைய காலடிகளை நன்கு பிட்டுப் பிட்டு வைப்பார்னு பிரசித்தி.''

''ஜோசியம் தெரியுமா உன் அப்பாவுக்கு?''

''இத்தனை நேரம் சொன்னதிலேந்து புரியலையா... உங்க அண்ணா என் முதலாளி.... அவர் உங்க ஜாதகத்தை....''

''உம் சொல்லு அப்புறம்?''

பெயர்ப்பொருத்தம்-1



"அப்புறம் என்ன விழுப்புரம்? உங்க வயசு என்னன்னு தெரியும். அன்னிக்கு அப்பா அதைப் பார்த்துட்டு ஓர் அலறலே அலறிட்டார்!"

"ஏன் இன்ஜக்ஷன் கொடுக்க அப்ப டாக்டர் வந்தாரா?"

"உங்க ஜாதகத்திலே பாபக் கிரகங்கள் எல்லாம் தப்புத் தப்பான வீட்டுக்குள்ளே யெல்லாம் புகுந்து கும்மாளம் அடிக்கிறதாம். சனி, ராகு, செவ்வாய் எல்லாம் கன்னும் பின்னுன்னு மத்த கிரகங்களோடு மோதி விளையாடறதாம்."

"இதை எப்படி இவ்வளவு ஞாபகம் வைச்சுட்டிருக்கே, மல்லிகா?"

"ஞாபகம் வைச்சுக்கும்படியா என் அப்பாவை உங்கஅப்பா நடத்தியிருக்கார்... ஒரு ஆறே முக்கால் ரூபாய் காசுக்காக எங்க அப்பாவின் நடத்தையையே உங்க அப்பா சந்தேகப்பட்டது அவரை ரொம்பப் பாதிச்சிருக்கு.... என்னை விரட்டிய பயலோட பின்னே ஜாதகத்தைப் பார்த்தாயான்னு குஷியோடு புலம்பித் தீர்த்தார்."

"எனக்கு இதில் நம்பிக்கை இல்லை.... சரி வா... நாலு மணிக்கு இன்னும் ஒன்றரை மணி நேரம்தான் இருக்கு."

காரில் போகும்போது அவன் கேட்டான்:

"கையிலே எவ்வளவு பணம் இருக்கு?"

"நூத்தி இருபத்திரண்டு ரூபாய் சில்லறை...."

"ஊர்லேந்து எதிர்பார்க்கிறியாக்கும்?"

"யார் அனுப்புவா?"

"எனக்கு என்ன தெரியும்?"

"ரெண்டு பவுன் நகை இருக்கு. கிராமுக்கு இருபது ரூபா தள்ளிக் கொடுத்தாக் கூட இரண்டாயிரம் தேறும்."

"இன்னிக்கு உங்கப்பா பக்கத்திலே நின்னுக்கிட்டிருக்கிறப்போ இரண்டு டாக்டர்கள் தங்களுக்குள்ளே பேசிண்டிருந்தா...."

"என்ன?"

"சொல்ல மாட்டேன்."

"ஏன், ரிஷிகள் சொல்றதை மனிதன் கேட்டு வெளியே சொன்னா தலை வெடிக்கும்னு விக்கிரமாதித்தன் கதையிலே வரும் அது மாதிரி உங்க தலை...."

"ஊஹூம். என் தலை வெடிக்காது... உன் தலைதான்..."


"என் தலை வெடிக்காது அர்ஜுன். என் அப்பாவின் உயிர் போனா அது ஒரு ரிலீஃப். விடுதலை...."

"என்ன இப்படிப் பேசறே மல்லிகா?"

"பின்னே?"

"யாருக்கு ரிலீஃப்? யாருக்கு விடுதலை?"

"அப்பாவுக்குத்தான். அவர் என்னிக்குமே சுகப்பட்டதில்லை. என் அம்மா சுகப்பட வைத்ததில்லை.. வெளியே சாதுன்னு பெயர் எடுத்ததுதான் மிச்சம். நிறையப் பணக்காரச் சொந்தங்கள் இருக்கு. ஒருத்தர் வீட்டுக் கல்யாணத்திலே கூட அவரைச் சொந்தம்னு கூப்பிட்டதில்லே. என் மாமா தடபுடலாகக் கல்யாணம் பண்ணினார். எங்க அம்மா அசடு வழியப் போய் நின்னு அத்தை பணம்னு வழங்கினா. ஆனா மாமா, என்



அப்பா அவர் வீட்டு மாப்பிள்ளைன்னு கூட மதிக்கலை. வீடு ஏறிக் கூப்பிடலே."

"அப்படியா?"

"அன்னிக்கு நானும் அப்பாவும் வீட்டிலே வத்தல் குழம்பும் வாட்டின அப்பளமும் சாப்பிட்டோம். அம்மா திரும்பி வந்தப்போ ஒரு கூஜாவிலே பாயசம் கொண்டு வந்தா. தம்ளர்லே விட்டு அப்பாவிடம் நீட்டினா. மான அவமானங்களை லட்சிய அலட்சியங்களைப் பொருட்படுத்தாம, பாயசத்தைக் கை நீட்டி வாங்கிக்கொண்டார். ஆனா... என்னால் சகித்துக் கொள்ள முடியலை. அப்பா கையிலேந்து தம்ளரைப் பிடுங்கினேன். குழாயடியில் கொட்டிக் குழாயையும் திருப்பி விட்டேன்."

"அம்மா?"

"அவ இருந்த பாயசத்தைக் குடிச்சுட்டு சாயங்காலம் ரிசப்ஷனுக்குப்போனா."

"வெரி சாரி மல்லிகா... குடும்பங்களிலே இப்படி யெல்லாம் கூட நடக்குமா?"

"நீங்க கனக மணித் தொட்டிலில் கண் உறங்கியவர். தொட்டிலை விட்டு இறங்கிய பின்னும் சுற்றி யிருக்கிற உலகத்தைப் பார்க்கப் பிரியப்படாத வர்க்கத்தைச் சேர்ந்தவர்...."

திடீரென்று கார் நின்றது.

"என்ன நிறுத்திட்டீங்க."

"கொஞ்சம் துணி வாங்கணும். மெட்ராஸ்லே நிறைய நாள் இருக்க வேண்டிய அவசியம் வர்றப்போ நிறைய ஆடைகளும் தேவைப்படும்."

அவன் இறங்கி அவளைப் பின்தொடர்ந்தான்.

கடை வாசலுக்கு வந்ததும் கால் அதிர்ச்சியில் நின்றது.

சாமா!

அவன் அவளையும் அர்ஜுனையும் மாறி மாறிப் பார்த்து அர்த்தம் தொனிக்கப் புன்முறுவலித்தான். அவனுடைய உதட்டின் வெற்றிலைக் காவி கபடத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகப் பட்டது.

"ஏன் நின்னுட்டே மல்லிகா, வா! இந்த ப்ஃராடு இங்கே ஏன் நிற்கிறதுன்னு பார்க்கிறியா?" என்றான் அர்ஜுன்.

சாமா நின்றுகொண்டே இருக்க, அவள் மெதுவாக நடந்து கடையினுள் புகுந்தாள்.

(தொடரும்)

நாட்டை ஒன்றுபடுத்தி வைப்பது எது?

"மக்களின் நாட்டுப் பற்றும், அதற்காக உழைத்து தியாகம் செய்யத் தயாராயிருப்பதும் தான் அது. உண்மையில் இது, முற்றிலும் பிறருக்காக உழைப்பதல்ல; ஏனெனில் நாட்டின் எதிர்காலத்துடன் நமது நலனும் இரண்டறக் கலந்து பிணைந்திருப்பது ஒவ்வொருவருக்கும் தெரியும்".

—இந்திரா காந்தி



வாருங்கள், அனைவரும் சேர்ந்து உழைப்போம்

davp 80/160



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி ரூ500/- பரிசு பெற்ற ஹாஸ்யச் சிறுகதை

சாருகேசி

''நம் முதல் மகாநாட்டுக்குப் பிரதம மந்திரி வருவாரா தலைமை தாங்க?'' என்று ஆரம்பித்தாள் விசாலாட்சி மாமி.

''கேட்டால் போச்சு!'' என்றாள் சண்பக லட்சுமி அம்மாள்.

''அகில இந்திய ரீதியிலான முதல் மகாநாடு. அதனால் பி. எம். கட்டாயம் வருவார்!'' என்றாள் கனகா மாமி.

''வாழ்க்கை வாழ்வதற்கே என்று கொடியைத் தூக்கிக் கொண்டு வந்துவிடுகிறதுகள் பிள்ளைகளும் நாட்டுப்பெண்களும். அப்புறம் என்ன, வாழ்க்கை அழுவதற்கே என்று நாமும் அடங்கிப் போய்விடுகிறோம்!'' என்றாள் விசாலாட்சி மாமி கண், காது, மூக்கு, தொண்டை எல்லாம் சிந்திக்கொண்டே.

''முக்கியமான பாயிண்டுகளை நீங்கள் இப்போதே பேசிவிடக் கூடாது மாமி. நோட் பண்ணி வைத்துக் கொள்ளுங்கள். பி.எம். பிரசைட் பண்ணுகிறபோது இதையெல்லாம் பேசிக் கைதட்டல் வாங்கணும்!''

''பெண்கள் மகாநாட்டில் மட்டும் —'இத்தனை பேர் இங்கே பேசிவிட்ட பிறகு எனக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை'— என்று எந்தப் பெண்மணியும் கையைப் பிசைந்து கொண்டு விழி விழி என்று விழித்துக்கொண்டு நின்றதாகக் கதை என்ன, சரித்திர பூகோளம் எதுவுமே இல்லை. பயப்படாதீர்கள் மாமி! நிறைய இது மாதிரி பாயிண்ட்கள் ஸ்டாக் வைத்திருக்கிறேன்!''

கனகா மாமி எல்லோருக்கும் காப்பி கொண்டு வந்து வைத்தாள். கூட்டம் அவள் வீட்டில் நடப்பதால், ஒரு பத்து கப் காப்பியை அவள் தைரியமாக வழங்கினாள், பிள்ளை ரமேஷும் நாட்டுப் பெண் பிரியாவும் நீண்ட விடுமுறையில் வடக்கே போயிருப்பதைச் சாதகமாக்கிக்கொண்டு.

''நம் அசோஸியேஷனில் ஏற்கனவே மாமியார் அந்தஸ்து உள்ளவர்கள்தான் அங்கத்தினராகலாமா அல்லது வருங்கால — ப்ராஸ்பெக்டிவ் — மதர் இன் லாஸ் கூட இப்போதே சேரலாமா?''

''இது ஒரு முக்கியமான கேள்வி. யோசனை பண்ணித்தான் பதில் சொல்ல வேண்டும்.''

''வருங்கால மாமியார் என்றால், ஹவ் வில் யூ டிடர்மின் தட்? ரொம்ப சிரமம். ஏழெட்டு வயசுப் பெண்கூட வருங்கால மாமியார்தான். ஸோ, அதெல்லாம் வேண்டாம். ஒன்லி பெர்மனெண்ட் மாமியார்ஸ், கன்ஃபர்ம்ட் மாமியார்ஸ் மாத்திரம் இப்போதைக்குப் போதும். அதிலும் சந்தோஷமான வாழ்க்கை நடத்துகிற மாமியார்கள் சில பேர் இருக்கலாம். அவர்களை நாம் விட்டு விடலாம். ஒன்லி அப்ரெஸ்ட் மதர் இன் லாஸ் வில் பி அட்மிடட்!''

''கனகா என்ன சொல்கிறாள்? தமிழிலேயே பேசினால்தான் சௌகரியமா இருக்கும். இங்கிலீஷில் பேசினாலே நாட்டுப் பெண் ஞாபகம்தான் வருகிறது!'' என்றாள் சம்பகலட்சுமி முணு முணுக்கிற குரலில்.

'''நசுக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட மாமியார்கள் மட்டுமே இப்போதைக்கு நம் அசோஸியேஷனில் மெம்பராக இருக்கலாம்' என்கிறாள் கனகா. புரிகிறதோ?''

''புரிகிறது, புரிகிறது'' என்று சம்பக லட்சுமி தலையாட்டியபோது, காதிலும் மூக்கிலுமிருந்தும் டாலடித்தது.

2

''உனக்கு ஒரு ஜோக் தெரியுமோ கனகா?'' என்று சாரங்கன் கேட்டார், இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஹாலுக்கு வந்தபோது.

''தமிழ் நாடகங்களில் சொல்லாத ஜோக்கா? சொல்லுங்கள்!''

''ஒரு மாமியார் இறந்து போனாளாம். அவள் மாப்பிள்ளையின் நண்பன் உடனே அவனுக்கு ஒரு தந்தி கொடுத்தானாம்: 'உன் மாமியார் இறந்துவிட்டாள். அவளை எரிக்கவா, புதைக்கவா இல்லை பெட்டிக்குள்

போட்டுப் பாடம் பண்ணி வைக்கட்டுமா?' என்று. 'மூன்றையும் பண்ணிவிடு. ரிஸ்க்கே எடுக்காதே' என்று பதில் தந்தி கொடுத்தானாம் நண்பன். மாமியார்கள் என்றால் அத்தனை வெறுப்பு, துவேஷம். நம் நாட்டில் மட்டுமல்ல. உலகம் முழுதுமே மாமியார்களின் நிலை இப்படித்தான்!''

''இந்த நிலை மாற, இந்த அவல நிலை, இழிநிலை போகத்தான் நாங்கள் சங்கம் அமைத்திருக்கிறோம். மாமியார்களை மருமகள்களின் கோரப் பிடியிலிருந்து விடுவித்து, அவர்கள் வாழ்வு மலர, வாசம் பெற, நம்பிக்கையும் புத்துணர்ச்சியும் ஊட்டி, உதவியும் செய்வதுதான் எங்கள் அசோஸியேஷனின் அடிப்படை நோக்கம்!''

''ஏதோ, இப்போது ஒழுங்காக வேளா வேளைக்குச் சாப்பாடு கிடைக்கிறது. இருக்க நிழல் என்று ஒன்று இருக்கிறது. உன் அசோஸியேஷன் அதையும் இல்லாமல் அடித்து விடப் போகிறது!''

''நீங்கள் ரொம்பத்தான் பயப்படுகிறீர்கள். நாங்கள் சங்கம் அமைத்துவிட்டுச் சும்மா இருக்கப் போவதில்லை. பட்டி தொட்டியெல்லாம் கூட்டம் போடுவோம். குப்பைத் தொட்டியெங்கும் போஸ்டர் ஒட்டுவோம். ஜீப்பில் செல்வதே எமது பணி என்று சவாரி செய்யும் மாதர் நல இலாகா அதிகாரிகளைச் சந்தித்து மெமொராண்டம் கொடுப்போம். பெண் வக்கீல்களைத் திரட்டுவோம். எங்களுக்காக வாதாடச் சொல்வோம். பெண் டாக்டர்களைச் சந்தித்து, கொடுமைக்கு ஆளான மாமியார்களுக்கு இலவச வைத்திய வசதி அளிக்கக் கோருவோம். கொடுமைப் படுத்தும் நாட்டுப் பெண்களுக்கு வைத்திய வசதி மறுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவோம். இன்னும் மாமியார்களுக்கு நல்வாழ்வு மலர எத்தனையோ திட்டங்கள். ஜட்ஜுகளில், மந்திரி சபையில் எங்கள் மெம்பர்களுக்குப் பிரதிநிதித்துவம் கேட்போம். மருமகள் தற்கொலைக்கு மாமியாரே காரணம் என்று அபவாதத்தைச் சுமத்திப்போய் வழக்குப்போடும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கச் செய்வோம்!''

''மெள்ள... மெள்ள... உங்கள் கோரிக்கைகள் அடங்கிய தட்டியைப் பிடித்துக் கொண்டு நிச்சயம் நீங்கள் நடக்க முடியாது. அத்தனை கோரிக்கைகளையும் எழுத கிரிக்கெட்மாட்சில் வைக்கிற ஸைட்ஸ் கிரீன்தான் தேவையாயிருக்கும்.''

''அது இன்னும் சௌகரியம். ரோடு முழுக்கத் தள்ளிக் கொண்டே போய்விடலாம்'' என்றாள் கனகா. ''சரி, நான் படுத்துக்கொள்ளக் கொஞ்ச நேரமாகும். சங்கத்து பை-லா எல்லாம் எழுத வேண்டும்... நீங்கள் போய்த் தூங்குங்கள்.''

3

''மிஸஸ் கனகா சாரங்கன் என்கிறது யார்? நாங்கள் உழைக்கும் கட்சி அலுவலகத்திலிருந்து வந்திருக்கிறோம்...'' என்று இரண்டு நீலச் சட்டைகள், எண்ணிக்கொள்ளுங்கள் பற்களை என்று வாயைத் திறந்து கொண்டு வந்தார்கள். இது புன்னகையா அல்லது புரட்சிச் சிரிப்பா என்று அகில உலக மாமியார்கள் சங்கக் காரியதரிசி கனகாவும், தலைவி விசாலாட்சியும் வியந்து நிற்க, வந்தவர்களில் ஒருவர் மற்ற அங்கத்தினர்களையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''எங்க கட்சி உங்களது நியாயமான, அநியாயமான எந்தப் போராட்டத்துக்கும் உறுதியாக ஒத்துழைப்புத் தரும். எல்லா வீட்டுச் சுவரிலும் இப்போதே நாங்கள் உங்களை ஆதரித்து எழுத முடிவு செய்திருக்கிறோம். 'போராட்டத்தைத் தூண்டாதே. பொறுமைக்கும் எல்லை உண்டு; மாமியார்கள் சங்கம் சாமியார்கள் சங்கம் அல்ல' என்று புதுசாகச் சுண்ணாம்பு அடித்த எல்லார் வீட்டுச் சுவரிலும் எழுதி விடுகிறோம்.''

''அது சரி. ஆனால் நாங்கள் போராட்டம் எதுவுமே — அதிலும் அரசாங்கத்துக்கு எதிராக — தொடங்கவில்லையே?''



''அது பரவாயில்லை; அது பற்றி நாங்கள் கவலைப்படுவதுமில்லை. எங்களுக்குத் தேவை ஏதாவதும் பிரச்னையும், கண்ணும்பு அடித்த சுவரும்தான். நீங்கள் கோட்டைக்கு ஊர்வலம் சென்றால் நாங்களும் பின்னாலேயே வருகிறோம். ஒடுக்கப்பட்ட மாமியார்களே—உலக மாமியார்களே ஒன்று சேருங்கள் என்று அழைப்பு விடுப்போம்!''

கனகா மாமி பிரசிடெண்டை ஒருமுறை பார்த்துவிட்டு, ''உங்கள் ஆதரவுக்கு மிக்க நன்றி. நாங்கள் இப்போதுதான் மெம்பர்ஷிப் கேம்பெய்ன் தொடங்கியிருக்கிறோம். உங்கள் உதவி தேவைப்படும்போது கட்டாயம் உங்களை நாடுகிறோம்!'' என்றாள்.

''எந்தச் சங்கமும் அரசியல் கலப்பு இல்லையென்றால் பிழைக்கமுடியாது அம்மே!'' என்றார் உழைக்கும் கட்சி.

''எங்களுக்குத் தெரியாமல் இல்லை. மாமியார்களுக்கு என்ன, அரசியல் பாதிப்பு இல்லையா, அரசியல் விழிப்புணர்ச்சி இல்லையா? காலம் வரும்பொழுது அவசியம் உங்கள் உதவியை நாடி வருவோம்!''

உழைக்கும் கட்சிக்காரர்கள் புறப்பட்டுப் போனார்கள்.

''இது என்னடியம்மா புது வம்பாய் இருக்கிறது! எங்கே, யார், எப்போது அஸோஸியேஷன் அமைப்பார்; அதை அப்படியே விழுங்கிநாங்கள் விடும் ஏப்பம் அவர்கள் விடும் ஏப்பமே என்று சொல்ல எத்தனை கட்சிகள் காத்திருக்கின்றன!'' என்று பயந்து போனாள் கனகா.



சொல்லி வைத்த மாதிரி உழைக்கும் கட்சி போய்ச் சேரவும் பிழைக்கும் கட்சிப் பிரமுகர் வரவும் சரியாக இருந்தது. தோள் துண்டு தரையில் இழைய இழைய, தரை அழுக்கே துண்டின் கரையோ எனப் புது வண்ணம் கொடுக்க, பேட்டை ரவுடிக் களை முகத்தில் பளிச்சிட வந்த பிழைக்கும் கட்சிச் செயலாளரைப் பார்த்தபோது கனகாவுக்கும் விசாலாட்சிக்கும் உடம்பெல்லாம் நடுங்கிற்று. புடவைத் தலைப்பை எல்லோரும் இழுத்துப் போர்த்திக் கொண்டார்கள்.

''உங்கள் வீட்டுப் பிள்ளை நான்'' என்று தேர்தல் காலச் சொல் தொடரை மறந்துவிடாமல் உபயோகித்தார் பிழைக்கும் கட்சி.

''ஒரு பிள்ளையையும் நாட்டுப் பெண்ணையும் வைத்துக் கொண்டு நாங்கள் படுகிற பாடே போதும். இன்னும் ஒரு பயங்கரமான பிள்ளையா?'' என்று சம்பகலட்சுமிவிசாலாட்சியிடம் முணு முணுத்தாள்.

''உங்கள் கழக அங்கத்தினர்களை எங்கள் உதவி எப்போது தேவையென்றாலும் தயங்காது கேட்டிடச் சொல்லுங்கள். மாமியார் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று இந்தச் சமுதாயம் அறிந்திடச் செய்வோம்!''

''ஆகா, கட்டாயம், கட்டாயம்!'' என்று கனகா அவரையும் அவருடன் வந்த எருமைக் கொம்பு மீசையையும் அனுப்பிவைத்து விட்டுப் பெருமூச்சு விட்டாள்.

''மறுபடி ஏதாவதும் கட்சிக்காரர் வருவதற்குள் நம் வேலையை முடிப்போம்... நமக்கு எல்லாப் பேப்பர்காரனும் துளியூண்டுதான் நியூஸ் போடுகிறான். நாமே ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டியது தான். என்ன பெயர் வைக்கலாம், சொல்லுங்கள்!'' என்று அறிவித்தாள் கனகா.

''வாய்ஸ் அஃப் மதர் இன்லா என்று வைத்தால் என்ன?''

''மாமியாரின் வாய்களா? நன்றாகவே இல்லையே கேட்க? ஏற்கனவே நம் வாயைக் கிண்டுகிறார்கள். புஸ்தகத்துக்குப் பேரும் அதுவா?'' என்றாள் சம்பகலட்சுமி.

''இல்லே மாமி. வாய்ஸ் அஃப் மதர் இன்லா என்றால் மாமியாரின் குரல் என்று அர்த்தம்.''

''மாமியாரின் குரல் இப்பவெல்லாம் எந்த வீட்டிலே கேட்கிறது? மருமகள் குரல் தான் உரக்கக் கேட்கிறது. மாமியார்களின் முணுமுணுப்பு என்று வேண்டுமானால் வையுங்கள்!'' என்றாள் சம்பகலட்சுமி கேலியாக.

4

''**எ**ப்படி இருக்கிறது உங்கள் சங்க ஆக்டிவிடீஸ் எல்லாம்? எத்தனை உண்மை மெம்பர்கள்? எத்தனை போலி மெம்பர்கள்?'' என்று கணவர் கேட்டபோது கனகாவுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

''கேட்காதீர்கள். பற்றிக் கொண்டு வருகிறது! பலபேருக்குத் தாங்கள் மாமியார் ஆகிவிட்டோம் என்ற நினைப்பே இல்லை. இன்னும் பலருக்கு மாமியார் ஆனாலும் பிள்ளை—

நாட்டுப் பெண்களிடம் பயம் போகவில்லை. என்னத்துக்கு அஸோஸியேஷன் என்கிறார்கள் இப்படி இருந்தால் இந்த நாடு எப்படி உருப்படும்! ஹூம்...''

''உலக மாமியார்களே ஒன்றுபடுங்கள் என்கிறதுக்குப் பதில் உலக மாமியார்களே அவஸ்தைப்படுங்கள் என்று விட்டுவிடுங்களேன்! சரி, அது கிடக்கட்டும். நீ இப்போ வருவதற்கு முன்னால் இந்தத் தபால் வந்தது. உன் பிள்ளை ரமேஷ் எழுதியிருக்கிறான். லீவு முடிந்து விட்டதாம். அவனும் உன் அருமை நாட்டுப் பெண் பிரியாவும் நாளை ஜி.டி.யில் வருகிறார்களாம். சாப்பாடு எல்லாம் தயாராக இருக்க வேண்டுமாம். பிரியாவுக்கு இரண்டு நாளாய் ஒரே தலைவலியாம். அவளால் ஒன்றும் செய்ய முடியாதாம்...''

''ஐயோ! லீவ் அதற்குள்ளா முடிந்து விட்டது? காஷ்மீர் போகிறோம், இன்னும் இரண்டு வாரம் ஆகும் என்று எழுதியிருந்தானே அவன்? அதற்குள் என்ன அவசரம்? இங்கே என்ன வேலை பாழ்போகிறது? இன்னும் மெம்பர்ஷிப் கார்டு அனுப்பியபாடு இல்லை. சந்தா வசூல் முடிந்தபாடில்லை. முதல் மகாநாட்டு அழைப்பிதழ் வேறு அச்சாகவில்லை. பி. எம். வேறு வருகிறேன் என்று ஒத்துக்கொண்டுவிட்டார்....''

''அகில உலக மாமியார்கள் சங்கக் காரியதரிசியே, என்ன பயம், பீதி உன் முகத்தில் மருமகள் வருகிறாளே என்றா?''

''சீசீ... எனக்கென்ன பயம்! பிரியா என்ன ஸ்ரீப்ரியாவே வந்தாலும் நான் பயப்பட மாட்டேன். எங்களுக்கு என்ன பொறுப்பு இல்லையா, நியாயம் இல்லையா....''

''நீங்கள் சொல்வதெல்லாம் நியாயம் தான். அதுவும் யாரிடம் சொல்கிறீர்கள்— உங்கள் பிள்ளை, நாட்டுப் பெண்ணிடம்தானே பின்னே என்ன பயம், என்ன நடுக்கம்?''

''மாமனார்களை அதிகம் படுத்துவதில்லை இந்தப் பிள்ளைகளும் நாட்டுப் பெண்களும். அதுதான் உங்களுக்கெல்லாம் அவர்களிடம் கரிசனம். எங்களைத் தாக்குவதற்கும் பழி வாங்குவதற்கும் அவர்கள் உங்களுக்கு ஓர் ஆயுதம்...''

''இதோ பார், இதோ பார்... நான் என்ன சொல்லிவிட்டேன் என்று பிலுபிலு என்று பிடித்துக் கொண்டுவிட்டாய்?''

''இனி மீட்டிங் எல்லாம் சம்பகலட்சுமி வீட்டிலோ, விசாலாட்சி வீட்டிலோ வைத்துக்கொள்ள வேண்டியதுதான். இங்கே நடக்காது. 'என்ன அரட்டை அங்கே, எல்லாக் கிழவிகளுமாகச் சேர்ந்து?' என்று கூச்சல் போடுவாள்பிரியா... அட பகவானே-

பெயர்ப்பொருத்தம்-3



தாழி உடைகிற சமயத்திலா வெண்ணெய் திரள வேண்டும்!....''

5

மாமியார்கள் சங்கக் கூட்டம் அடுத்த படியாக எங்கே நடத்துவது என்பதில் ஒரு சர்ச்சையே கிளம்பியது.

சம்பகலட்சுமி முன்னாலேயே ஒதுங்கிக் கொண்டுவிட்டாள். பங்கஜம் மாமி பம்மிப் பம்மி மறைந்து கொண்டாள். சவுந்தரவல்லி அம்மாள் நமக்கேன் வம்பு என்று வாய் விட்டே சொல்லி விட்டாள்.

கிடைக்கிற இரண்டு வேளைச் சாப்பாட்டுக்கும் லாட்டரி அடிக்கத் தயாராயில்லை என்று பத்மாசனி அம்மாள் புலம்பினாள்.

'நாமிருக்கப் பயமேன்' என்று ஞானி ஒருவர் சொன்னது யாருக்கும் நினைவு வராமல் பயம் இருக்க நாம் ஏன் என்று ஒவ்வொருவராய்ப் பீதியில் பின்வாங்கினார்கள்.

கடைசியில் கனகாவே தைரியமாக முன் வந்து, ''ஆல் ரைட்! இதற்காக நாம் பாடுபட்டு வளர்த்த அசோஸியேஷனை உடைக்க முடியாது. கூட்டம் என் வீட்டிலேயே நடைபெறும். என் நாட்டுப் பெண் சண்டைக்கு வந்தாலும் நிச்சயம் கூட்டம் நடைபெறும். எல்லாரும் வழக்கம்போல் வந்துவிடுங்கள்!'' என்று தைரியலட்சுமியாக மாறி எல்லாரையும் உற்சாகப்படுத்தினாள்.

''என் நாட்டுப்பெண் நாளை பிற்பகல் வருகிறாள். அவள் வருகிற சமயத்திலேயே நம் அசோஸியேஷன் கூட்டம் நடைபெறும்!'' என்று வீர அறிக்கை விட்டாள்.

''உங்கள் நாட்டுப்பெண் சண்டைக்கு வருகிறாள் என்று வைத்துக் கொள்ளுங்கள். நாம் என்ன செய்வது?''

''என்ன செய்வதா? சண்டைக்குப் போவது! நாம் என்ன பார்டருக்குப் போய் சீனாவுடனும் பாகிஸ்தானிடமுமா சண்டை போடப் போகிறோம்? ஆஃப்டர் ஆல், நம் புடவை பார்டரைப் பிடித்துக் கொண்டு நமது நாட்டுப் பெண்ணிடமேதானே சண்டை போடுகிறோம்? அப்படி அவள் நம் அசோஸியேஷனுக்கு எதிர்ப்புத் தெரிவித்தால், என் கையில் ஒரு துருப்புச் சீட்டு இருக்கிறது. பயப்படாதீர்கள்!'' எல்லாரும் கனகா மாமியையே வியப்புடன் பார்த்தார்கள்.

6

''சம்பகா, நீங்கள் சேர்ந்த அங்கத்தினர்கள் எவ்வளவு? டோர் டு டோர்பிரசாரத்தில் நீங்கள் கலந்துகொள்ளவில்லையா?'' என்று கனகா கேட்ட பொழுது, வாசலில் டாக்ஸி சத்தம் கேட்டது.

ரமேஷும் பிரியாவும் ஸூட் கேஸ்களைத் தூக்கிவர, உள்ளே உட்கார்ந்திருந்த ஒன்றரை டஜன் மாமிகளுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. அதிலும் சம்பகலட்சுமி ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டவள் மாதிரி பாதி எழுந்து கொண்டு நின்றுவிட்டாள். அவரவர் நாட்டுப் பெண்ணைக்கண்டு அவரவர் பயந்தது போக, இப்படி ஒரே ஒரு நாட்டுப் பெண்ணைக் கண்டு 'கலெக்டிவ்'

வாக எல்லா மாமியார்களும் பயப்படும் நிலை ஏன் வந்தது சர்வேசா!' என்று (சர்வேயரின் மனைவி) சம்பகலட்சுமி மனசுக்குள் நினைத்துக் கொண்டாள்.

ரமேஷ், ''ஹலோ அம்மா!'' என்று உள்ளே வந்தவன், ''என்ன ஏதாவது பஜனைக் கிளாஸ் ஆரம்பித்திருக்கிறாயா என்ன?'' என்று திடுக்கிட்டுக் கேட்டான்.

பிரியா, உள்ளே வந்தவள், இரண்டு கையையும் இடுப்பில் வைத்துக் கொண்டு சதிர் ஆட்டக்காரி மாதிரி நின்றுகொண்டு, ''நீங்கள் இப்படி ஏதாவது செய்வீர்கள் என்று தெரிந்துதான் காஷ்மீர் கூடப் போகாமல் ஓடோடி வந்தேன். மாமியார்கள் சங்கம் அமைத்திருக்கிறீர்களாமே. அதிலும் உலக மாமியார்கள் சங்கம்! எத்தனை தேசத்திலிருந்து எத்தனை அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கிறார்கள்? எத்தனை சந்தா வசூல் செய்திருக்கிறீர்கள்?... மிஸஸ் சம்பகலட்சுமி அம்மாள் அவர்களே! எனக்கு எப்படித் தெரியும் என்று விழிக்கிறீர்களா? உங்கள் நாட்டுப் பெண் போன வாரமே இந்த விஷயத்தை எனக்கு எழுதிவிட்டாள். எத்தனை மாமியார்கள் இருக்கிறார்களோ அத்தனை மருமகள்களும், ஏன் அதைவிட அதிகமாகவே இருக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டீர்கள்!''

''ஸ்டாப் இட்!'' என்று நாட்டுப்பெண்ணிடம் இரைந்தாள் கங்கா.

''மாமியார்கள் சங்கம் அமைத்து எங்களைக் கொடுமைப்படுத்த நாங்கள் அனுமதிக்க முடியாது!'' என்று பதிலுக்கு இரைந்தாள் பிரியா.

''ஓகே! எங்கள் சங்கத்தைக் கலைக்காத பட்சத்தில் உனக்கு ஒரு யோசனை!''

''என்ன அது?''

''நீங்களும் உங்கள் நலனைக் காத்துக் கொள்ள உங்களுக்கு ஓர் அஸோஸியேஷன் அமைத்துக் கொள்ளலாம். எங்களுக்கு ஆட்சேபணை இல்லை!''

துருப்புச் சீட்டு என்று கங்கா மாமி குறிப்பிட்டது உண்மையிலேயே வேலை செய்தது.

''வெரி குட்! மாமியார்களுக்கு ஒரு சங்கம் உண்டென்றால் மருமகள்களுக்கும் ஒரு சங்கம் நிறுவுவோம்!'' என்று உறுமினாள் பிரியா.

சங்கம் கண்ட சிங்கங்களாய் மாமியாரும் மருமகளும் முறைத்துக் கொண்டு நிற்க, உழைக்கும் கட்சி அண்ட் பிழைக்கும் கட்சி பிரமுகர்கள் பின்னாலேயே வருகிறார்களோ என்று எட்டிப் பார்த்தாள் விசாலாட்சி.

கராத்தே பயிற்சி 2

பயிற்சியாளர்: டோனி பொன்னையா

சித்திரம்: 　தயாரிப்பு: குன்றுமணி


நடக்கப் பழகுதல் – 1

முதலில் இயற்கை நிலை
(NATURAL STANCE)



இயற்கை நிலைக்குப் பிறகு
இரு கால்களையும் ஒன்று
சேர்த்து வைத்து பிறகு
வலது காலைப் பிரித்து
வைத்துப் பல தடவை
பயிற்சி செய்ய வேண்டும்.
இதை முடித்த பிறகு
இதே போன்று மற்றொரு
காலுக்கும் இதே பயிற்சி தேவை.

ஒன்று சேர்க்கும் போது
கால் முட்டுக்கள் நன்கு
மடக்கியிருத்தல் அவசியம்.





தேள் கண்டார், தேளே கண்டார்!

—அகஸ்தியன்—

உங்களுக்கெல்லாம் எப்படியோ எனக்குத் தெரியாது. ஞாயிற்றுக் கிழமை வருகிறதென்றால் எனக்கு அலர்ஜி ஏற்படும். சஞ்சலம், பயம், வியாகூலம், கவலை, படபடப்பு, நடுக்கம் எல்லாம் ஏற்படும். ஏன் இப்படி என்று நீங்கள் கேட்டால், உங்களுக்கு என் அருமை மனைவி கமலாவைத் தெரியாது என்று அர்த்தம்!

ஞாயிற்றுக்கிழமை என்றால் ஆபீஸ் லீவு; ஆனால் எனக்கு வீட்டில் வேலை! வாரத்தில் ஆறு நாட்களும் அவள் திட்டமிட்டு வைப்பாள், ஞாயிற்றுக் கிழமையன்று எனக்கு என்னென்ன வேலைகளைக் கொடுக்கலாம் என்று! அவள் திட்டப்படி செய்யாவிட்டால் திட்ட ஆரம்பிப்பாள்!

எனக்கு அலர்ஜி என்பதால் ஞாயிற்றுக் கிழமை வராமல் போய் விடுகிறதா என்ன?

அன்று ஞாயிற்றுக் கிழமை. சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தேன்.

''மணி எட்டடிக்கப் போகிறது இன்னுமா தூக்கம்! வீட்டில் ஏகப்பட்ட வேலை கிடக்கிறது... காபி ரெடி... எழுந்திருங்க.... அடாடா... ஆபீஸில் என்னமோ அப்படி வெட்டி முறித்து விட்டது போல், ஞாயிற்றுக் கிழமையன்று ஒன்பதானாலும் எழுந்திருக்கிறதில்லை. சென்டலியர் கணக்கா வீட்டில் ஒட்டடை தொங்கறது. ஆறு மாசப் பேப்பர் சேர்ந்து கிடக்கிறது. ரேஷன் வாங்கியாகலை. தோட்டம் சரியான குப்பைகளின் கோட்டமாக இருக்கிறது...'' என்று என் மனைவி சலிப்பையும் நிஷ்டூரத்தையும் சம அளவில் கலந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இன்னும் தூங்கிக் கொண்டிருந்தால் அவளுக்குக் கோபம் அதிகமாகிவிடும் என்று எனக்குத் தெரியுமாதலால், சட்டென்று எழுந்தேன்.


முகம் கழுவிக்கொண்டு ஒரு கையில் பேப்பரை எடுத்துக் கொண்டு காப்பி சாப்பிடச் சென்றேன்.

''இதோ பாருங்கோ... இன்னிக்கு ஒரு நாள் மட்டும் மூன்று மணி நேரம் பேப்பர் படிக்காமல் இருங்கோ. ஒரு சாம்ராஜ்யமும் மூழ்கிப் போய்விடாது! வீட்டில் ஏகப்பட்ட வேலை இருக்குது'' என்று என் அருமை மனைவி சொன்னதும் என் மாமியார் சமையல் அறைக் கதவுக்குப் பின்னால் நின்றுகொண்டு தொண்டையைக் கனைத்துவிட்டு, ''அடியே கமலா, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இப்படி நீ பல்லவி பாடறதுதான் லாபம். எந்த வீட்டு வேலையும் ஆகப் போறதில்லை. என்ன வயசானால் என்ன, கல்யாணம் ஆகிக் குழந்தை குட்டி பெற்றால் என்ன, சில பேருக்குப் பரம்பரைக் குணம் மாறாதடியம்மா'' என்று ஓர் உலக மகா உண்மையை உதிர்த்தாள்.

இதைத் தொடர்ந்து, எங்கள் மூதாதையர் பலரது குறைகளை அவள் விவரிக்க ஆரம்பிப்பாள் என்று எனக்குத் தெரியும். ஆகவே பேப்பரை எடுத்துக் கொண்டு வாசல் பக்கம் விரைந்தேன்.

சரியாக ஐந்து நிமிடம் கூட ஆகியிருக்காது. என் மனைவி வாசலுக்கு வந்து ''அஸ்தமனமாகிறவரைக்கும் படிக்கிறதாக உத்தேசமா? நாலு மணி நேரமாகிறது பேப்பரை எடுத்து'' என்றாள்.

ஏழிலிருந்து ஏழு ஐந்து ஆவதற்குள் நாலு மணி நேரம் பிடிக்குமா என்று நான் கேட்கவில்லை. ஏன் என்று கேட்கிறீர்களா? உங்களுக்கு என் மனைவி கமலாவைத் தெரியாது. எனக்குத் தெரியும்!



''என்ன கமலா, என்ன துளைக்கிறாய்?'' என்றேன்.

''முதலில் வீட்டை ஒட்டடை அடியுங்கள். அப்புறம் நம் சமையலறைப் பரணைச் சுத்தம் பண்ணணும். நசுங்கிப் போன ஈயச் செம்பு மேலே எங்கேயோ இருக்கிறது. அதைத் தேடி எடுத்தால் அம்மா மெட்ராஸ் போகச்சே மாத்தி வாங்கிட்டு வருவாளாம்.''

'உன் அம்மா மெட்ராஸ் போகிறதா? சரியான அசட்டு மாப்பிள்ளை நான் இருக்கிறபோது அவள் ஏன் போகப் போகிறாள்? ஏழெட்டு வருஷமாகத்தான்

மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டுக் கொண்டு இருக்கிறானே!' கடச் கடச் சொல்ல நினைத்தேன். ஆனால் சொல்லவில்லை.

காரணம்.... சீச்சீ நீங்கள் நினைப்பது இல்லை. அந்தச் சமயம் என் மைத்துனர் தொச்சுவின் மனைவி அங்கச்சி வந்ததுதான். தொச்சுவோ அவன் மனைவியோ என் வீட்டுக்கு வரும்போது வெறுங் கையுடன் வரமாட்டார்கள். பையுடன்தான் 'வருவார்கள். அகப்பட்டதை வாங்கிக்கொண்டு போகப் பை இருந்தால்தானே சௌகரியம்!

''அக்கா!'' என்று என் மனைவியைப் பார்த்துக் குரல் கொடுத்தாள், காம்பவுண்டுக்குள் நுழைந்து கொண்டே. (குரலா அது! ''கீச்சு கீச்சென்று ஆனைச்சாத்தம் கலந்து பேசின பேச்சரவம்...'' எனும் ஆண்டாள் பாடலை நினைவுபடுத்தும் குரல். இரட்டைக் கீச்சு!)

''வா, அங்கச்சி'' என்று என் மனைவி வரவேற்க, ஹாலிலிருந்த என் மாமியார் திலகம், ''வாடியம்மா... வா...வா'' என்று 'ஒளிபடைத்த கண்ணினாய் வா வா' என பாரதியார் பாடி வரவேற்றதை மிஞ்சும்படி சொன்னாள்.

''என்ன அங்கச்சி, இவ்வளவு காலையிலே'' என்று மனைவி கேட்டாள். (நானாக இருந்தால் ''என்ன சாமான் கடன் வாங்க வந்திருக்கிறாய்?'' என்று கேட்டிருப்பேன்!) தொச்சுவின் மனைவி மட்டும் ராவணன் காலத்துக்கு முந்திப் பிறந்திருந்தால், அந்த இலங்கை வேந்தன் கடன் பட்டது போல் கலங்கி நின்றிருக்க மாட்டான். மிஸஸ் தொச்சுவின் முன்னுதாரணம் அவனுக்குத் தைரியம் அளித்திருக்கும்!)

''ஒன்றுமில்லை அக்கா. தேன்குழல் செய்யலாம்னு... தேன்குழல் அச்சு வேண்டும்'' என்றாள்.

''எங்கேயோ பரண் மேலே வச்சிருக்கிறது. யார் ஏறி எடுக்கிறது? பரணை ஒழிக்கணும்னு நானும் கமலாவும் கரடியாக் கத்தின்டிருக்கிறோம். யார் காதிலேயும் விழவில்லையே!'' என்று என் மாமியார் சொன்னாள். என் மாமியார் மனத்துக்குள் நினைத்துக் கொள்வதே மூன்று வீட்டுக்குக் கேட்கும். கரடியாகக் கத்தினால் ரஷ்யாவுக்கே கேட்கும். அவள் கத்தினாளாம்; யார் காதிலேயும் விழவில்லையாம்!

''பரண் மேலேதானே. ஏறி எடுத்துக் கொடுக்கிறேன். ஏணி எடு கமலா'' என்றேன்.

எவ்வளவு சீக்கிரம் தொச்சுவின் மனைவியை அனுப்புகிறேனோ அவ்வளவு லாபம்!

''ஏணியும் கோணியும் எதுவும் இடையாது. வீட்டில் என்ன இருக்கிறது இல்லை என்று தெரிந்தால்தானே. ஸ்டூல் போட்டு ஏறுங்கோ'' என்றாள் மனைவி.

''என்ன அங்கச்சி! வந்து அரை மணி ஆச்சு. உங்க அக்காவோட பேச ஆரம்பிச்சுட்டால் அவ்வளவுதான்'' என்று சொல்லிக்கொண்டே என் மைத்துனன் தொச்சு அட்டகாசமாக வந்தான் அப்போது. பக்கத்துத் தெருவில் அவர்கள் வீடு இருந்தது?

''என்ன அத்திம்பேரே... சண்டேயா. ஜாலியாக ஒய்வு எடுக்கிறீங்க. நம்மால் முடியுமா? வேளச்சேரியில் ஒரு பிளாட்டை ஒருத்தர் வாங்கறாராம். தொச்சு, நீ வந்து செட்டில் பண்ணுன்னு சொல்றார். போயாகணும்..... என்ன அக்கா... வீட்டு வாசலில் வாக்குவாதம்?'' என்று கேட்டான்.

''இந்தாடா தொச்சு... ஒரு சொட்டுக் காப்பி!'' என்று அரை லிட்டர் காப்பியைத் தொச்சுவிடம் கொண்டு வந்து என் மாமியார் கொடுத்தாள். புத்திரபாசம் ஸ்வாமி, புத்திரபாசம்!


''ஒன்றுமில்லேடா தொச்சு. தேன்குழல் அச்சு பரண் மேலே இருக்கிறது. எடுத்துத் தரச் சொன்னால் உங்க செல்ல அத்திம்பேர் ஆயிரம் சிணுங்கல் பண்ணுகிறார்'' என்றாள் என் மனைவி கமலா.

''அவரை எதுக்குத் தொந்தரவு பண்றே அக்கா.... பாவம்* தொப்பையைத் தூக்கிக் கொண்டு ஏற முடியாது! நான் ஏறி எடுக்கறேன்'' என்றான்.

''பரணையில் ஊர்ப்பட்ட குப்பை இருக்கு. சாமானெல்லாம் இறக்கி ஒழிச்சு வெக்கணும். உயிர் போயிடுமேடா''

என்றாள் அக்காக்காரி.

தம்பியின் உயிர்போகும் வேலை கணவனை ஒன்றும் செய்யாது!



''வா அக்கா உள்ளே. நான் சுத்தம் பண்றேன் பரணை. அங்கச்சி நீ வீட்டுக்குப்போ. நான் தேங்குழல் அச்சு எடுத்துக்கொண்டு வரேன்.... அடியே அசமஞ்சம்! வீட்டில் எண்ணெய் ஒரு பொட்டுகூட இல்லையே. எப்படிப் பண்ணப் போறே தேன்குழலும் தேனில்லாத குழலும்... ஒரு முன்யோசனை மண்ணாங்கட்டியும் கிடையாது. சனியன்'' என்று கத்த ஆரம்பித்தான் தொச்சு. அந்தக் கத்தலையும் மிஞ்சும்படி மிஸஸ் தொச்சு சந்திரமதி மாதிரி அழ ஆரம்பித்தாள்.

''ஏண்டா குழந்தையைக் கண் கலங்க விடறே... ஒரு கரண்டி எண்ணெயை நம்மாத்திலேருந்துதான் எடுத்துண்டு போகட்டுமே'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் செம்பு எண்ணெயைக் கொடுத்தாள் மாமியார்.

'டமார்' என்று சமையலறையிலிருந்து ஓசை கேட்க ஓடிப் போய்ப் பார்த்தேன். பரணில் ஜம்ப் பண்ணி ஏற தொச்சு முயன்ற போது சீலிங்கில் இருந்த டியூப் லைட்டில் அவன் தலை இடித்து, டியூப் லைட் கீழே விழுந்து ஆயிரம் சுக்கலாய்ப் போயிருந்தது. நாற்பது ரூபாய் டியூப் உடைந்ததைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் என் மனைவியும் மாமியாரும், ''தொச்சு! தலையிலே அடி பட்டுதாடா... பாத்து ஏறப்படாதா? கொஞ்சம் ரெஸ்ட் எடு'' என்றனர். என் மாமியார், ''அடியே கமலா, சட்டென்று நாலு ஸ்பூன் ஹார்லிக்ஸைப் போட்டுக் கரைச்சு அவனுக்குக் கொடு'' என்றாள்.

ஹார்லிக்ஸைக் குடித்துவிட்டு மறுபடியும் முயற்சி பண்ணிப் பரணில் ஏறிவிட்டான் தொச்சு என்பது, அவன் அங்கிருந்து எல்லோரையும் அதிகாரம் பண்ணும் குரலோசையிலிருந்து தெரிந்தது.

பாத்திரங்கள் கடபுடா என்று உருண்டன. ஏதோ ஒரு பாத்திரத்தை எடுக்க அதன் கீழிருந்து ஒரு பல்லி ஓட, சடாரென்று அவன் பின்வாங்கித் துள்ளிக் குதிக்க அங்கிருந்த பாத்திரங்கள் நிலைகுலைந்து உருண்டு கீழே விழ, ஒரு உருளி என்மாமியாரின் சுண்டு விரலைப் பதம் பார்க்க, பதம் பாட ஆள் இல்லாவிட்டாலும் அவளே ஐயோ, அம்மா என்று பாடிக் கொண்டே, பத்மா சுப்ரமணியத்துக்கே தெரியாத பலவித முத்திரைகளுடன் 'நாட்டியம்' ஆடினாள்.

''எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு கல்லுளிமங்கன் மாதிரி உட்கார்ந்து கொண்டு பேப்பரைப் படிக்கிறதைப் பார்'' என்று என்னை நிந்தித்தாள் என் மனைவி.

''அக்கா, இந்த ஜோடு தவலையைப் பிடி''

''அதை ஏண்டா இறக்கிறே?''

''இல்லை அக்கா... வீட்டில் தண்ணீர் பிடிச்சு வைக்கப் பெரிய பாத்திரம் இல்லை. சும்மாதானே இங்கே கிடக்கிறது. நான் எடுத்துண்டு போறேன்'' என்றான்.

'கமலாவின் இரட்டை வடம் செயின் கூட காத்ரெஜ் பீரோவில் சும்மாதான் இருக்கிறது. எடுத்துக் கொண்டு போயேன்' என்று இளக்காரமாகக் கேட்டேன், மனத்துக்குள்.

''அக்கா.... செத்தேன். போச்சு. உயிர் போச்சு... தேன்... தேனு.... தேன் கொட்டிடுத்து அக்கா.... ஐயோ, அம்மா'' என்று கத்திக் கொண்டே வேகமாகப் பரணிலிருந்து இறங்க முயன்ற தொச்சு, அங்கிருந்த பழைய அப்பளக் குழவியின் மேல் காலை வைக்க, தொபாரென்று பரணிலிருந்து கீழே விழுந்தான்.

அதைத் தொடர்ந்து ''ஐயோ உயிர் போச்சே... பிராணன்போகிறதே... காலைத் தூக்க முடியலையே...'' என்று அலறினான்!

''உங்களைத்தானே தொச்சுவுக்குத் தேன் கொட்டிவிட்டது. போய் டாக்டரை டாக்ஸியில் அழைச்சுண்டு வாங்க'' என்று என் மனைவி கத்த, ''என்ன தொச்சு... தேன் கொட்டிவிட்டதா? பாத்து எடுக்கப் படாதா பாத்திரங்களை... இரு இதோ போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வரேன்'' என்று சொல்லி ஒரே ஓட்டமாக வீட்டை விட்டுப் புறப்பட்டேன். கிட்டத் தட்ட இரண்டு மைல் தூரம் செல்லும் வரை தொச்சுவின் ஓலம் கேட்டுக் கொண்டிருந்தது!

பரணிலிருந்து விழுந்ததால் தொச்சுவுக்குக் கால் முறிவு ஏற்பட்டது. தேன் கடியுடன் இதுவும் சேர்ந்தது. டாக்ஸியில் அழைத்துக் கொண்டு போய் பிளாஸ்டர் கட்டுப் போட்டுக் கொண்டு வீட்டுக்கு – என் வீட்டுக்குத்தான் – அழைத்து வந்தோம். ''மூன்று வாரம் ஆகும் கட்டுப் பிரிக்க. அதுவரை நம் வீட்டிலேயே இரேண்டா தொச்சு'' என்று என் மாமியார் பரிவுடன் கூறி அழைத்து வந்து விட்டாள்.

அடுத்த மூன்று வாரமும் கொசுறுக்கு மேலும் சில நாட்களும் தொச்சுவும் அவனது 'பசு' குடும்பமும் என் வீட்டிலேயே மகத்தான பிக்னிக்கை நடத்தின.

தொச்சுவின் மனைவிக்குப் பல வருஷ மசக்கை ஆசைகள் தீர்ந்தன. தேன்குழல், ரவை லட்டு, பால் பாயசம், சர்க்கரை போளி, கோதுமை அல்வா, நெய் தோசை என்று சக்கையாக அவளும் மற்றவர்களும் சாப்பிட்டார்கள். அவர்கள் எல்லோரும் ஒரு சுற்றுப் பருக்க, என் பர்ஸ் நாலு சுற்று இளைத்து விட்டது!

என்மனைவியும் மாமியாரும் வாராது வந்த மாமணி போல் அவர்களுக்கு உபசாரம் செய்தார்கள். நானும் ஒப்புக்கு ''தொச்சு உடம்பைப் பார்த்துக்கோ'' என்பேன்.

ஒரு நாள் தொச்சு, ''அத்திம்பேரே! என் கால் எல்லாம் சரியாப் போயிடும். கவலைப்படாதீங்க. கட்டுப் பிரிச்சதும் முதல் காரியமாகப் பரணை ஒழிச்சுச் சுத்தம் பண்ணிடறேன்'' என்றான்.

மறுபடியும் பரண் மேலே ஏறப்போகிறானா? எனக்குத் தலையைச் சுற்றியது.





பிலிப்ஸ் தரும் சூபர்பவர் ஹை-ஃபை

புதிய பிலிப்ஸ் ஹை-ஃபை ஸ்டீரியோ ட்யூனர் ஆம்ப்ளிபையர் ஏஎச் 798—இப்போது இரட்டிப்பு சக்தியுடன்!

முந்தைய ஏஎச் 778-ஐ விட மிக உயர்சக்தி படைத்த இந்த ஏஎச் 798, முழுமையான மியூஸிக் பவரான 120 வாட் அளிக்கிறது.

இதன் வகையில் ஒன்றே ஒன்றான இந்த பிலிப்ஸ் ஹை-ஃபை ஸிஸ்டம் மட்டுமே (பிளேயர், ட்யூனர் ஆம்ப்ளி-பையர், ஸ்பீக்கர்கள்) சர்வதேச ஹை-ஃபை DIN தரங்களை எட்டுகிறது. 'ஃப்ளாட் ஃப்ரீக்வன்ஸி ரெஸ்பான்ஸ்', உண்மையான இன்னொலிக்கு உறுதி அளிக்கிறது. இணையற்ற சர்க்கீட்ரி, மிகச் சிறப்பாக மீடியம் வேவ், சிற்றலை மற்றும் எஃப்எம் ஈர்ப்புக்கு உதவுகிறது.

உண்மையைக் கேளுங்கள் : மேம்-பாடடைந்த பிலிப்ஸ் ஹை-ஃபை ஸ்பீக்கர் ஸிஸ்டம் ஏஎச் 476 இப்போது கிடைக்கும் மிகவும் சரிநுட்பமான மியூஸிக் ரீப்ரொட்யூஸர். • ஒரு 20 செ.மீ. வூஃபர், 'பூம்' இல்லாமல் ஆழமான வளம் பொருந்திய 'பாஸ்' தருவதற்கு. • இரண்டு 15 செ.மீ. x 10 செ.மீ. ஸ்க்வாக்கர்கள் குரலை எடுப்பாக எடுத்துக் காட்ட. • ஒரு 5 செ.மீ. சூபர் ட்வீட்டர் தெளிவான, கம்பீரமான உச்சஸ்தாயியைக் கேட்டு மகிழ. விரைவிலேயே உங்கள் பிலிப்ஸ் வியாபாரியிடம் சூபர்பவர் ஹை-ஃபை கேட்டு ரசிக்க சித்தமாயிருங்கள்.


hi fi

நீங்கள் தொட்டுணரும் ஒலி

PHILIPS

பிலிப்ஸ்
இந்தியாவில் 50 ஆண்டுகள்

OBM/3664 R TM


தி. நகர்
ரங்கநாதன் தெரு
(சிறிது) சொந்த சரக்குடன்!
ஏதோ கீரை வித்துப் பொழைக்கிறேன்
ஏய், லெச்சுமி எப்படி கீரே?
உன்னை டீ... நகருன்னு சொல்லலியே...
அவருக்கிட்ட இது டி.நகரான்னு சொன்னேன்
மன்னிப்பு எதும்மா..
மாம்பலம் போர்ட்டருக்கு எவ்வளவு பலம் பார்த்தீங்களா!
என்னப்பா கால்லே மிதிக்கிறே
வேறே எங்கே மிதிக்கணும் சொல்லு.. நல்லா மிதிச்சு விடறேன்
வரேன் மாமி... என் நாட்டுப் பொண்ணைப்பத்தி மீதிக் கதையை நாளைக்கு இங்கே வரபோது சொல்றேன்!


யாருக்கு இந்த நாரு மாம்பழம் வாங்கியிருக்கே?
என் நாத்தனாருக்கு!
சார், ஸ்டேஷனுக்கு எப்படிப் போகணும்?
இந்த ரங்கநாதன் தெரு வழியாத்தான் போகணும். ஆனா.. அந்த வழியாப் போனா சீக்கிரமாப் போயிடலாம்
வா.. அக்கா... .. வா.. அக்கா..
ஒண்ணுமில்லே, வாழைக்கா விக்கிறா!
ஒரு செருப்பை
ஒரு வெங்காயம்
செருப்பு வாங்கிருக்க போனாருக்கு
இல்லே அங்கே ஏதோ சண்டை
பலகாரக் கடைக்கும் கடிகாரக் கடைக்கும் பக்கத்திலே டபுள் 'காரமா' சண்டையப் பாத்தீங்களா
பொடிக்கடை
பக்திப் புத்தகம் விக்கிற ஷாப்கோர் எங்கே இருக்கு சார்?
எனக்குத் தெரியாதுப்பா
உங்க பொண்ணு கல்யாணத்தைப் பத்தி...
இந்தக் கடைகிட்டே பேச வேண்டாம். கொஞ்சம் தள்ளிப் போகலாம்..

அத்தியாயம் 56

பொறுமை

'கடல் ராணி' பாண்டவ தூர்க்கத்திலிருந்து சிந்து தூர்க்கத்தைக் கடந்துவிட்டதையும், அதைக் கண்ட டெய்லரும் இங்கிலண்டும் குதூகலித்து ஆர்ப்பரித்ததையும் கண்ட வில்வர் விவரிக்க இயலாத பிரமிப்பையும், ஆயுளில் அதுவரை கண்டிராத ஏமாற்றத்தையும் அடைந்தான். காஸண்ட்ரா காப்டன்களின் உற்சாகத்துக்குக் காரணம் மிகவும் அறிவாளியான அவன் புத்திக்குக் கூட எட்டாததால் அவன் தன் தோளிலிருந்த அந்த அகரக் கிளியைக் கையில் எடுத்துத் தடவினான். ''அபாயம்! அபாயம்!'' என்று இருமுறை அதைப் பார்த்துச் சொல்லவும் செய்தான். பிறகு கையை உயரத் தூக்கி அதைப் பறக்க விட முயன்ற தருணத்தில் அவன் கையை அனந்தின் கை இரும்புப் பிடியாகப் பிடித்துக் கிளியைப் பிடுங்கிக் கொண்டது. ''வில்வர்! இந்தக் கப்பலிலிருந்து எந்தத் தூது போயும் பயனில்லை. டெய்லரும் இங்கிலண்டும் இந்தக் கப்பல் பயணமாகப் போவதை முன்கூட்டியே அறிவார்கள்'' என்றான்.

''இல்லை. இது தந்திரம், ஏமாற்று வித்தை. அவர்கள் முட்டாள்கள்'' என்று சினத்துடன் பேசினான் என்றும் நிதானத்தை இழக்காத வில்வர்.

அந்தச் சமயத்தில் கிளியைத் தடவிய வண்ணம் பாய்மரத்தில் சாய்ந்து நின்ற அனந்த், ''வில்வர்! நான் பொய் சொல்வதாக நினைக்கிறாயா?'' என்று வினவினான். அப்படி அவன் வினவியபோது அவன் கண்கள் அரைவாசி தூக்கத்திலிருந்தன. ''இரவு முழுதும் தூக்கம் இல்லை. உன் தொந்தரவு வேறு இப்போது'' என்று சொல்லிக்கொண்டு பாய் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான் அனந்த்.

அந்த அரைவாசித் தூக்கத்தில் அனந்த் மிக அபாயமானவன் என்பதை உணர்ந்திருந்த வில்வர், சில விநாடிகள் அவனை நோக்கினான். அவன் கையிலிருந்த கிளியையும் பிடுங்கிக் கொண்டான். கிளி அவன் சொல்லிக்கொடுத்த 'அபாயம்' என்ற சொல்லை நான்கு முறை திரும்பத்திரும்பச் சொல்லியது. இங்கிலண்டுக்கும் டெய்லருக்கும் நிலைமையை உணர்த்தச் சொல்லிக் கொடுத்த பாடத்தைத் தனக்கே கிளி திரும்பப் படிப்பதைக் கண்ட வில்வர் மிகுந்த எரிச்சலுடன், ''நீ போயும் போயும் கிளிதானே'' என்று அதன் மீது எரிந்து விழுந்தான். கிளி மீண்டும் மீண்டும் ''அபாயம்!'' ''அபாயம்!'' என்றது.

''என்ன அபாயம். மண்ணாங்கட்டி அபாயம்'' என்ற வில்வர் அனந்தை நோக்கினான். அனந்தின் அரைவாசித் தூக்கத்தில் அவன் முகத்தில் அபாயத்தின் சாயை முழுவதும் எழுதி ஒட்டியிருந்தது. அந்த சமயத்தில் அறையை விட்டு வெளியே வந்த [illegible] வில்வரை நோக்கிப் புன்முறுவல் செய்தாள். அந்தப் புன்முறுவலிலும் அபாயம் உறைந்திருப்பதை உணர்ந்த வில்வர் தன் தடியை ஊன்றிக்கொண்டு அவளை நோக்கி நொண்டி ஓடினான்.

''எஸ், வில்வர் டியர், வாத் கான் ஐ பார் யூ'' (அருமை வில்வர்! உனக்கு நான் என்ன செய்யக்கூடும்?)'' என்று வினவினாள். ஆங்கில வார்த்தைகளில் 'ட'க்கு 'டி' போட்டு



பிரெஞ்சு மென்மையை உச்சரிப்பிலும் காட்டினான்.

''ஐ நோ யூ ஆர். பிரெஞ்ச் (நீ பிரெஞ்சுக்காரன் என்பது எனக்குத் தெரியும்)'' என்று வில்வர் எரிந்து விழுந்தான்.

''குத் (நல்லது)'' என்றான் லிவாலியர் மீண்டும் 'ட்'க்குப் பதில் 'த்'தைப் போட்டு. அடுத்து மராத்திக்குத் திரும்பி ''இன்று பகல் நாம் பேசுவோம். உனக்கு விளக்கிச் சொல்கிறேன்'' என்ற லிவாலியர் ''ராணி! உங்கள் அறைக்கு வருகிறீர்களா?'' என்று அழைத்துவிட்டுச் சற்று முன்பு சிற்றுண்டி அருந்திய அறைக்குப் பக்கத்திலிருந்த அறைக்குச் சென்றான்.

அந்த அறையைப் பார்த்துப் பிரமித்தாள் ராணி. அறை மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இரண்டு சிறு கட்டில்களில் ரோஜாப் புஷ்பங்கள் இழைத்தது போன்ற துணிகளில் செய்யப்பட்ட உயரமான மெத்தைகள் போடப்பட்டிருந்தன. அவற்றுக்கு இடையே ஒரு சிறு மேஜையும், மேஜை மீது பிரெஞ்சு நாட்டு செண்ட்களும் வைக்கப்பட்டிருந்தன. மேஜைக்கு அருகேயிருந்த சுவர்ப் பலகையில் வேலைப்பாடு மிகுந்த பெரிய கண்ணாடி ஒன்று மாட்டப்பட்டிருந்தது. ஒரு ஜக்கும் இரண்டு கோப்பைகளும் கூட மேஜை மீது இருந்தன. நல்ல வசதியாகத் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் விசாலையுடன் செய்யப்பட்டிருந்ததைப் பார்த்த ராணி பின்னால் நின்ற லிவாலியரை நோக்கி ''ப்யூடிபுல்! தாங்க் யூ'' என்று பாராட்டினான்.


லிவாலியர் தலையை நன்றாகத் தாழ்த்தினான். ''இட் சஸ் எ ப்ளஷர் டு ஸர்வ் த ப்யூடி ஆப் சிந்து தூர்க் (சிந்து தூர்க்க அழகிக்குச் சேவை செய்வதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி!'') என்றும் சொன்னான்.
''நௌ ஐ வில் ஸெண்ட் சாரு'' என்று கூறிவிட்டுச் சென்றான் லிவாலியர். சில நிமிஷங்களில் சாருவும் வந்து சேர்ந்தாள். அறையையும் பஞ்சணைகளையும் கண்ட சாரு மெய் மறந்து. ''இது என்ன ராணி?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''நமது அறை'' என்றான் ராணி.

''அவருக்கு?''

இதைக் கேட்ட ராணி நகைத்தாள். ''எப்பொழுதும் அவர் கூட இருக்க வேண்டும் உனக்கு'' என்று பரிகாசமும் செய்தாள்.

''உனக்கு மட்டும் அவர் வேண்டாமாக்கும்?'' என்று வினவினாள் சாரு. பிறகு இருவரும் சேர்ந்து நகைத்தார்கள். ''சரிதான் உள்ளே வாரு'' என்ற ராணி சாருவை உள்ளே இழுத்துக் கதவை லேசாக மூடினான். தொப்பென்று ஒரு மெத்தை மேல் விழுந்தாள். சாருவும் அவள் செய்கையைப் பின்பற்றினாள். இரு பெண்களும் அண்ணாந்து பார்த்தார்கள். கண்ணாடியில் இருவர் உருவமும் நன்றாகத் தெரிந்தது.



''நல்ல வேலை!'' என்றான் சாரு.

''என்ன நல்ல வேளை?'' என்று ராணி கேட்டாள் சாருவின் மனத்தைப் புரிந்து கொண்டு.

''நாம் மட்டும் இருக்கிறோம் இங்கு'' என்று கூறி சாரு புன்முறுவல் செய்தாள்.

''அவரும் இருந்தால் என்று நினைக்கிறாயா? வெட்கம் கெட்டவளே!''

''உனக்கு மட்டும் அந்த நினைப்பு இல்லை யாக்கும்?''

''எந்த நினைப்பு?''

''கண்ணாடி நினைப்பு?''

''கண்ணாடி நினைப்பா?''

''பாசாங்கு செய்யாதே! பசப்பாதே! அவரும் சேர்ந்து அதில் தெரிந்தால்?''

''உளறல், சுத்த உளறல்'' என்று கூறிய ராணியும் சாருவும் மறுபடியும் நகைத்தார்கள். திடீரென்று அவர்கள் நகைப்பு உறைந்தது. தாழிடாத அறை வாசற் கதவை மூடிவிட்டு அதில் சாய்ந்து நின்றான் அனந்த். அவன் கண்கள் பலகைச் சுவரிலிருந்த கண்ணாடியில் நிலைத்திருந்தன.

இரண்டு அழகிய புஷ்பித்த கொடிகள் போல் படுத்துக் கிடந்த இரு பெண்களையும் பார்த்த அனந்த் கண்ணாடியிலிருந்து கண்களை விலக்கவில்லை. சற்றே ஒருக்களித்ததால் ராணியின் ஒரு மார்பு பஞ்சணையில் அழுந்தி இன்னொரு மார்பு எழுந்து நின்ற காட்சியும், மல்லாந்த நிலையை விட்டு எழுந்திராமல் முகத்தை மட்டும் அவன் பார்வையிலிருந்து திருப்பிக் கொண்டதால் இரட்டை அழகுகளும் நிமிர்ந்துவிட்ட சாருவின் காட்சியும் அனந்தை நிலைகுலையச் செய்தன. ''அறையில் இந்த இருவரும் ஏன் சேர்ந்து படுக்கிறார்கள்?என்று அவர்கள் செய்கையை உன்னூரக் கண்டிக்கவும் செய்தான் மகாராஷ்டிர வாலிபன். அந்த அழகிகளின் அழகிடங்கள் மனத்தைப் பெரிதும் அலைக் கழிப்பதைக் கண்ட அவன் அவர்கள் இருவரும் கொண்டிருந்த புன்முறுவலைக் கண்டு ''ஏன் அப்படியே படுத்திருக்கிறீர்கள்? ஓர் ஆண்மகன் வந்திருக்கிறானே என்ற அச்சமில்லையா?''என்று வினவினான் சீற்றத்துடன்.

''இல்லை'' இரு பெண்களின் பதிலும் ஒன்றாக ஒலித்தது.

''உண்மையாகவா?'' அனந்தின் குரலில் கடுமை இருந்தது.

''ஆம்.'' இரட்டைப் பெண்களின் ஒலி மீண்டும் எழுந்தது.

''ஏன்?''

இம்முறை பதில் ஒருவரிடமிருந்துதான் வந்தது. ''அச்சம் உங்களுக்குத்தான் இருக்கிறது''என்று கூறினாள் ராணி சிரித்து.

''சந்தேகமில்லை'' என்று ஒத்துப்பாடினாள் சாரு.

''எனக்கென்ன அச்சம் உங்களிடம்?'' என்று வினவினான் அனந்த்.

''இல்லாவிட்டால் கதவுக் கருகே நிற்பானேன்? உள்ளே வாருங்களேன்'' என்றாள் ராணி.

''யாராவது என்னைப் போல் கதவைத் திறந்து கொண்டு வந்தால்?'' இந்திரஜித் ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்டான்.

''இதுவும் நாங்கள் சொல்லித் தர வேண்டுமா?''என்று சாரு கேட்டாள்.

''எது?''

''கதவைத் தாளிட்டுக் கொண்டு வருவதற்கு?''

''எதற்காகக் கதவைத் தாளிட வேண்டும்?''

''யாரும் பார்க்காதிருப்பதற்காக.''

''எதை?''

இந்தப் பதிலைக் கேட்டதும் இரு பெண்களும் நகைத்தார்கள். உணர்ச்சி வேகத்தில் தான் உளறிவிட்ட பதிலின் தன்மையைப் புரிந்து கொண்ட அனந்த் சற்று சங்கடத்தில் ஆழ்ந்தான். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''இங்கு சரசமாட வரவில்லை நான்'' என்றான். அவன் குரலில் சினம் நன்றாக ஒலித்தது.

அப்பொழுதும் பெண்கள் விடவில்லை. ''பின் எதற்காக வந்தீர்கள்?'' என்று வினவினாள் ராணி.

''செய்தி சொல்ல வந்தேன்.'' அனந்தின் குரல் பெரிதும் திடப்பட்டு வந்தது.

''என்ன செய்தி?'' என்று சாரு கேட்டாள்.

''இன்று பகல் உணவின்போது விவாஸியர் தனது திட்டத்தை விவரிப்பான்.''

''அதனுலென்ன?'' என்று ராணி கேட்டாள்.

''நீங்கள் இருவரும் நீராடி வேறு உடை அணிந்து வரவேண்டும் என்பது விவாஸியர் விருப்பம்'' என்றான் அனந்த்.

''வேறு உடை எங்கு கொண்டு வந்திருக்கிறோம்?'' என்று சாரு வினவினாள்.

''இந்த ஒவ்வொரு கட்டிலுக்கு அடியிலும் ஒரு பெட்டி இருக்கிறதாம். அதில் நிரம்ப பெண்களின் ஆடைகள் இருக்கிறதாம்...'' என்றான் அனந்த்.



கராத்தே பயிற்சி

கராத்தேயில் பல விதமாக பயிற்சி முறைகள் உண்டு. அவற்றில் கோஷின்-ரியூ கராத்தே முறை ஒன்று. 1976ம் வருடம் சென்னையில் மூன்று பயிற்சி நிலையங்களில் இந்த முறை பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. இன்று 15 நிலையங்கள் சென்னையில் உள்ளன. நாளுக்கு நாள் பயிற்சி பெறுவோரின், பயிற்சி அளிப்போரின் எண்ணிக்கை பெருக, தமிழகத்தில் பயிற்சி நிலையங்கள் பரவின. மலேசியாவில் கறுப்புப் பெல்ட்டும் நான்காவது 'டான்' விருதும் பெற்ற டோனி பொன்னையா பாரதம் முழுதும் தோன்றியுள்ள நிலையங்களுக்குப் பிரதம ஆசான், பிரதம பரீட்சையாளரும் கூட. இப்பொழுது கோஷின்-ரியூ கராத்தே பயிற்சி நிலையங்கள் சென்னை, கோயமுத்தூர், சேலம், திருப்பூர், மதுரை, திருச்சூர், மேட்டுப்பாளையம், ராஜமந்திரி, புதுதில்லி ஆகிய நகரங்களில் சிறப்புடன் இயங்கி வருகின்றன. கோஷின்-ரியூ சீனியர் மாணவர் தேசியப் போட்டியில் பங்கேற்கிறார்கள். கராத்தே பயிற்சியை டோனி பொன்னையா கல்வி நேயர்களுக்குச் சென்றவாரத்திலிருந்து தொடங்கியிருக்கிறார்.

- குண்டுமணி

பெயர்ப் பொருத்தம்–5



''இதையும் விவாஸியர் சொன்னான்?'' ராணி வினவினாள் வியப்புடன்.

சாரு பேசவில்லை. சட்டென்று கட்டிலிலிருந்து குதித்து அடியிலிருந்த பெட்டியைச் சரசரவென்று வெளியே இழுத்துத் திறந்தாள். திறந்து அதிலிருந்த பட்டுச் சராய்கள் சேலைகள், கச்சைகள் இவற்றை இரு கைகளாலும் அள்ளினாள். ராணி பிரமித்தாள்.

''விவாஸியரைப் போல் ஒருவனை நான் பார்த்ததில்லை'' என்று ராணி வியப்புடன் கூறினாள்.

''நானும் பார்த்ததில்லை'' என்று சாருவும் கூறினாள்.

''அப்படியானால் அவனையே கல்யாணம் செய்து கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியே செல்ல முயன்ற அனந்த் ஒருமுறை அந்த இரு பெண்களையும் திரும்பிப் பார்த்து ''விவாஸியர் பகல் ஒரு மணிக்கு உங்களை எதிர் பார்க்கிறான். முக்கிய விஷயங்கள் ஏதோ சொல்லப் போகிறானாம்'' என்று ஒரு சொல் வம்பை வீசிவிட்டு வெளியேறினான்.


அவன் சென்றதும் கதவைத் தாளிட்டாள் சாரு. ''ஆண்களுக்குப் பொறுமை போவ தில்லை பார்த்தாயா?'' என்று கேட்டாள் ராணி. அடுத்த விநாடி இரு பெண்களும் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டு பஞ்சணையொன்றில் வீழ்ந்தார்கள்.


''சீ சாரு! பைத்தியமே. இறுக்காதே. நான் அவரல்ல'' என்று கூறினாள் ராணி. இருவரும் இரைந்தே நகைத்தார்கள் அடுத்த படி. அந்தச் சிரிப்பில் விரிந்தது கனவு. எதிர்பார்ப்பு. உணர்ச்சிப் பெருக்கு.

அன்று பகல் நீராடி. பகல் ஒரு மணிக்கு விவாஸியரின் உணவு அறையில் மற்றவர்களைச் சந்தித்தபோதும் இரு பெண்களின் உற்சாகமும் விஷமமும் எல்லை மீறி இருந்தது. விவாஸியர் அவர்கள் இருவரையும் வரவேற்று அவர்கள் இடங்களுக்கு அழைத்துச் சென்றான்.

குனிந்த தலையுடன் உட்கார்ந்திருந்த அனந்த் கடைக்கண்ணால் இரு பெண்களையும் நோக்கி விவாஸியரையும் நோக்கினான். எல்லையற்ற பொறுமை அந்தக் கண்களில் குடிகொண்டிருந்தது.

அந்தப் பொறுமையை உடைத்தான் ஒரே வாசகத்தில் விவாஸியர். உணவருந்த எல்லோரும் அவரவர் ஆசனங்களில் உட்கார்ந்ததும் ''லேடீஸ் அண்ட் ஜெண்டில் மென்! ப்ரே பார் த விக்டரி ஆப் கடல் ராணி, ஐ மீன் த ஷிப் (சீமாட்டிகளே! கனவான்களே! கடல் ராணிக் கப்பலின் வெற்றிக்குப் பிரார்த்தியுங்கள்)'' என்று கூறினான். முதலில் அவன் உணவுத் தட்டு எதிரில் தலை குனிந்து. கை குவித்து. கண்களை மூடிப் பிரார்த்தனையை முணு முணுத்தான். அது முடிந்ததும் சொன்னான். ''இன்னும் நான்கு நாட்களுக்குள் நாம் காப்டன் மாக்ரேயைச் சந்திப்போம்'' என்று. (தொடரும்)







வேண்டாம் முதல்வர் பதவி

'கடுகு'

சில பதில்களுக்கு வரும் கேள்விகளில் ஒரு குறிப்பிட்ட கேள்வி திரும்பத் திரும்பப் பலரால் கேட்கப்படுகிறது. அதற்குப் பதில் அளித்தால் ரொம்ப நீண்டுபோய் விடும் என்ற காரணத்தால் பதில் கூறுமலேயே தள்ளிப் போட்டு வந்தேன். ஆனால் பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் (எண்ணிக்கை பல்லாயிரக் கணக்கான அளவு மிகை என்ற உண்மையைக் கூறிவிடுகிறேன்!) ஓர் ஆர்வத்துடன் கேட்கும்போது பதில் சொல்லாவிட்டாலும் நன்ருக இருக்காது. ஆகவே இங்கு பதில் சொல்லிவிடுகிறேன்.

கேள்வி இதுதான்: நீங்கள் ஏன் முதலமைச்சர் ஆகக் கூடாது?

பதில்: ஒரே வார்த்தையில் சொல்வதானுல் 'வேண்டாம்' என்று சொல்ல வேண்டும். விளக்கமாகக் கூறுவிட்டால் திருப்தி ஏற்படாது. (எனக்குத்தான்!)

• • •


முதல் அமைச்சர் என்றுல் தினந்தோறும் அலுவலகம் போகாவிட்டாலும், பேட்டி காண வரும் எம். எல். ஏ.க்களையும் மற்றவர்களையும் பார்க்காமல் இருக்க முடியாது. அதற்காகக் காலையிலேயே எழுந்திருந்து (கஷ்டமான காரியம்) ஷேவ் பண்ணி (ரொம்பக் கஷ்டமான காரியம்) குளித்து (ரொம்ப ரொம்பக் கஷ்டமான காரியம்) தயாராக வேண்டும்!

உதவி கேட்டு வரும் பிரமுகர்களைப் பார்த்துச் சிரிக்க வேண்டும். ஒரே ஒரு வேலை காலியாக உள்ள இடத்தில் ''நம்ப ஆளைப் போடணும்'' என்று கேட்டுக் கொண்டு தனித் தனியாக ஏழு எம். எல். ஏக்கள் வந்து கேட்பார்கள். ''கட்டாயம் போட்டுடறேன்'' என்று ஏழு பேருக்கும் மனதறிந்து பொய் சொல்ல வேண்டும். (பொய் சொல்வது லட்டு மாதிரி என்றுலும், ஒரு நாளைக்கு ஆயிரம் லட்டு சாப்பிட முடியுமா?) ஏழு பேரையும் விரோதித்துக் கொண்டு என் மைத்துனனின் பிள்ளைக்கு அந்த வேலையைக் கொடுக்க வேண்டும். (யாரை விரோதித்துக் கொண்டாலும் என் மைத்துனனை விரோதித்துக் கொள்ள முடியாது!)

அலுவலகத்துக்குச் சென்றுல் எனக்குப் புரியாத, தெரியாத, தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமே இல்லாத ஆயிரம் விஷயங்களைப் பற்றித் தீவிர ஆலோசனைக்குப் பிறகு முடிவு எழுதி ஃபைல்களை அனுப்ப வேண்டும்.

கவர்ன்மெண்ட் ஆபீசில் யாரும் சரியாக வேலை செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு உண்மை என்பது எனக்குத் தெரியும். எல்லா கோப்புக்களையும்தான் முதல்வருக்கு அனுப்பி விடுகிருர்களே! ஏதாவது ஒரு ஃபைலில், ''இதற்கு காம்பவுண்ட் வரி ஒரு சதவிகிதத்திலிருந்து ஒன்றே கால் சதவிதமாக மாற்றலாம் என்று அதிகாரி எழுதியிருப்பதைப் படித்து, இதனுல் சர்க்காருக்கு வருவாய் என்று எண்ணிச் சம்மதம் தெரிவித்துவிடுவேன். (காம்பவுண்ட் என்றுல் வீட்டைச் சுற்றி எழுப்பப்படும் சுவர் வரி என்று நான் புரிந்து கொள்ளலாமே!) இப்படி கால் சதவிதம் உயர்த்தினுல் உண்மையிலேயே வரி வசூல் குறையக் கூடும். இப்படி நஷ்டத்தைத் தரும் யோசனையை நான் ஏற்றது பற்றி எதிர்க் கட்சித் தலைவர் சாடுவார்.' மக்கள் நன்மைக்காக இதைச் செய்தேன் என்று பொய் (மறுபடியும் பொய்!) சொல்ல வேண்டும்.

சரி, அதுவே அதிக வருவாய்க்கு வழி வகுக்கும் என்றுல், மக்கள் ரத்தத்தை உறிஞ்சுகிருர் என்று எ. க. தலைவர் சாடுவார். மாநிலத்தின் முன்னேற்றத்துக்காக மக்கள் இந்தத் தியாகத்தைச் செய்ய வேண்டும் என்று அப்போது சொல்ல வேண்டும்.



காட்டாங்குளத்தூரில் மழையால் ஒரு குடிசை வீடு சரிந்து ஓர் எருமைக் கன்று இறந்துவிட்டால், மனுநீதிச் சோழனைப் போல் கன்றுக்காகக் கதறி அழுது எ.க. தலைவரும் அவரது பத்திரிகைகளும் ''ஐயகோ இவருடைய ஆட்சியில் எருமைகளை, எருமை வாகனக்காரன் இழுத்துச் செல்கிறான். தாய்மார்களே! உங்கள் பிள்ளை எருமைக் கன்றாக இருந்து இப்படி இறந்தால், உங்களின் உயிர் எப்படித் துடிக்கும்... இவருக்கா வோட்டு? எருமை கொன்ற பாதகன்!'' என்று மூன்று வர்ணப் போஸ்டர் போட்டு எல்லாவற்றையும் என் வீட்டு வாசலிலேயே ஒட்டுவார்கள் (காட்டாங்குளத்தூரில் ஒரு போஸ்டர்கூட இருக்காது!)

மழை பெய்வதற்கு முன்பே நான் குடையை எடுத்துக் கொண்டு காட்டாங்குளத்தூருக்குச் சென்று, எந்தக் குடிசை இடிந்து விழ வாய்ப்பிருக்கிறது என்று பார்த்து, அதன் மேல் குடையைப் பிடித்துக் கொண்டு நிற்க முடியுமா? முடியாது சாமி. எனக்குக் கல்யாணம் ஆனபோது என் மாமனார் ஒரு குடையைத்தான் கொடுத்தார். இத்தனை வருஷங்களில் நைந்து போய்விட்டது. இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொண்டால்தான் எனக்கு இன்னொரு குடை கிடைக்கும். ஓர் எருமைக் கன்றைக் காப்பாற்றுவதற்காக இன்னொரு மாமியாரைச் சம்பாதித்துக் கொள்வதா? நினைத்தாலே நடுங்குகிறது.

முதல்வர் என்றால் தினமும் ஏதாவது விழாவுக்குத் தலைமை தாங்கும்படி கூப்பிடுவார்கள். யாரையாவது பாராட்ட வேண்டும். உதாரணமாக, எழுத்தாளர் ஏகாம்பரத்தின் முதல் துணுக்குப் பிரசுரமானதற்காகப் பாராட்டு விழா என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் நான் பேசும்போது ''ஏகாம்பரம் போன்ற மாபெரும் இலக்கியவாதிகளைப் பாராட்டுவதில் நான் பெருமை அடைகிறேன். சிறு வயது முதலே அவரது கதைகளையும் நாவல்களையும் படித்து ரசித்திருக்கிறேன்'' என்று கூறிவிடுவேன். இதனால் என் இலக்கிய ''அறிவு'' வெளியாகும். அதைப் பற்றிக் கூடக் கவலை இல்லை. மறுநாள் ஏகாம்பரமே என்னிடம் வந்து ''இந்த வருஷ மாநில இலக்கிய விருது எனக்குக் கொடுங்களேன்'' என்று கேட்பாரே!

நகரில் நடக்கும் நாடகங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். இசைக் கச்சேரியில் உட்கார்ந்து ஔரங்கசீப்பான நான் தலையை ஆட்ட வேண்டும். ''ஜுலு மொழியில் உள்ள புரியாத கவிதைகள்'' என்பது போன்ற இலக்கிய உரை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்க வேண்டும்.

இதை யெல்லாமாவது சமாளித்து விடுவேன். சினிமா விஷயத்தில்தான் எனக்குச் சங்கடம்.

நிம்மதியாகத் ''தரை'' டிக்கட்டில் உட்கார்ந்து சீன்களுக்கு ஏற்றபடி விசில் அடித்துக்கொண்டு பத்து பைசாவுக்கு விற்கும் அசல் ''நெய்'' முறுக்குகளை விடாமல் மென்று கொண்டே பார்த்தால்தான் சினிமா எனக்கு ரசிக்கும். முதல்வராகிவிட்டதால் இந்தச் சொர்க்கம் எனக்கு எட்டாக் கனி அல்லவா?

சாதாரணமாக வேஷ்டியைத் தூக்கி டப்பா கட்டுக் கட்டிக் கொண்டால்தான் நடப்பதற்கு எனக்குச் சௌகரியம். டப்பாக் கட்டு முதல்வராக நான் இருக்க உங்களுக்குச் சம்மதமா?

ஆக மேலே கூறிய பல காரணங்களால்தான் முதல்வர் பதவியின் மேல் எனக்கு நாட்டம் ஏற்படவில்லை!

எழுத்துத் தமாஷ்!



ஃப்ரம் ரஷ்யா வித் சிரிப்



குழந்தை, நானும் சினிமாவுக்கு வரேன்!

ஒரு நாள் திடீரென்று எனக்கு ஓர் ஐடியா தோன்றியது. உலகில் எல்லா விஷயங்களும் தலைகீழாக மாறினால் எப்படி இருக்கும்? உதாரணமாக, எல்லா விஷயங்களிலும் குழந்தைகள் சொல்கிறபடி பெரியவர்கள் நடந்தால் என்ன? உதாரணமாக, எல்லோரும் டைனிங் ஹாலில் சாப்பிட உட்கார்ந்ததும், அம்மாவைப் பார்த்துக் கத்துவேன்: ''என்ன இவ்வளவு குறைவாகச் சாப்பிடுகிறாய்! கண்ணாடியில் பார்த்துக்கொள். ஒட்டடைக் குச்சி மாதிரி இருக்கிறாய். சரியாகச் சாப்பிடவில்லை என்றால் நானே கலந்து, வாயில் ஊட்டப் போகிறேன்... என்ன டயட்டோ மண்ணாங்கட்டியோ... எங்க காலத்தில் இது மாதிரி எதுவும் கிடையாது ''

அம்மா தலையைக் கவிழ்ந்தபடியே அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டு சாப்பிடுவாள்.

''இப்படி அவசரம் அவசரமாகத் தின்றால் உடம்புக்கு ஒட்டாது... பக்கத்து வீட்டுக்கார மாமியுடன் அரட்டை அடிக்க நாழியாகிவிட்டதா?... நான் சொல்கிறது காதில் விழுந்தால்தானே... எங்கேயோ பராக்குப் பார்த்துக் கொண்டு தின்கிற வழக்கம் சுலபத்தில் போகாது!... நாற்காலியை ஆட்டாமல் உட்கார்ந்து சாப்பிடு.''

இந்தச் சமயம் அப்பா ஆபீஸிலிருந்து வருவார். அவர் கோட்டைக் கழட்டுவதற்கு முன்பே: ''என்ன ஐயா இவ்வளவு லேட்? ஆபீஸ் விட்டால் நேரே வீடு வருகிறது கிடையாது. கை, கால்களில் எவ்வளவு அழுக்கு... சேற்றில் வேலை செஞ்ச மாதிரி இருக்கு. நேரே போய் நன்றாகத் தேய்த்து அலம்பு. சோப்புக் கரையறதுதான் மிச்சம். அழுக்குப் போனதும் ஆஸ்தி ஒன்றும் போய்விடாது.... அதிருக்கட்டும். விரலைக் காட்டு. நகத்தை இவ்வளவு நீளமாகவா வளர்க்கிறது? நெயில் கட்டர் எங்கே? ... ஒரு இடமாக வைக்கிற வழக்கம் இருந்தால்தானே?... என்ன இத்தனை ஃபைல்கள்? ஆபீஸ் நேரத்திலே வம்பு பேசிக் கொண்டிருந்தால் இப்படி வேலையை வீட்டுக்குக் கொண்டு வரவேண்டியதுதான்... சரி... சாப்பிட உட்கார்.''

அப்பா பயந்தபடியே உட்காருவார். அம்மா, ''நான் சொன்னேனே ஃப்ரிட்ஜ் பார்த்தீங்களா?'' என்று ஆரம்பிப்பாள்.

''ஃப்ரிட்ஜா.... வந்து....'' என்று அப்பா துவங்கும்போது ''சோத்துத் தட்டு முன் உட்கார்ந்துகொண்டு ஒரு பேச்சும் பேசக்கூடாது. பார்த்துச் சாப்பிட்டால்தான் உடம்பில் ஒட்டும்'' என்று நான் கத்த அவர்கள் கப்சிப்!


இந்தச் சமயம் பாட்டி வருவாள். ''வயசாச்சென்னு சும்மா இருக்கிறியா? இல்லாத வேலையெல்லாம் இழுத்துப் போட்டுக்கறே. மூட்டு வலி, இடுப்பு வலின்னு பின்னாலே என் கையிலேதானே வந்து அழறே... இனிமே ராத்திரியில் ஒரு டம்ளர் பால் சாப்பிட்டு விட்டுத்தான் தூங்கப் போகணும்...'' என்று அதட்டுவேன். சாப்பிட்ட பிறகு, ''எல்லோரும் டி. வி. பார்த்துக் கொண்டிருங்கள். நான் என் ஃப்ரண்ட்ஸுடன் சினிமா போய்விட்டு வரப் போகிறேன்.... என்னது நீங்களும் வர்றீங்களா? நேற்று ஏதோ பிறந்த நாள் விழா என்று போய் விட்டு வந்தீங்க. ஞாயிற்றுக்கிழமை சர்க்கஸுக்கு அழைத்துக்கொண்டு போனேன். தினமும் வெளியே போகிறது கூடாது.... இந்தாங்க, காசு. ஆளுக்கு ஒரு ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிடுங்க'' என்பேன்.

பாட்டி, ''குழந்தை... ஒவ்வொரு குழந்தையுடன் ஒரு பாட்டி இலவசமாகப் படம் பார்க்க வரலாம் என்று சொல்றாங்களே, என்னை அழைத்துக் கொண்டு போ'' என்று கெஞ்சுவாள்.

அதற்கு நான், ''இந்தப் படம், 70 வயசுக்கு மேற்பட்டவர்கள் பார்க்கக்கூடாது. தெரியுமா? சும்மா வீட்டிலேயே இரு... என்ன முனகல்?'' என்று சொல்லிவிட்டுப் புறப்படுவேன். ஆ. அந்தத் தலைகீழ் உலகம் எப்போது வரும்!


(ரஷ்ய எழுத்தாளர் விக்டர் ட்ராகன்ஸ்கி எழுதியது.)






ஜன்னல் வழியே பாலுவைக் கண்காணித்த பசவப்பா ஃபோன் செய்து...
ஹலோ! சிங்காரமா? காத்தவராயனையும் அழைச்சுக்க, நம்ம வேனை எடுத்துக்கிட்டு....
சரிங்க முதலாளி சரி, சரி....
பாலு சென்ற அடையாறு பங்களாவுக்குப் பக்கத்துத் தெருவில் ஒரு வீட்டிலிருந்து வேன் புறப்பட்டு வர...
அதோ ஒரு பையன் சைக்கிளிலே... பக்கத்திலேயே ஒரு நாய் ஓடுது... இவனைத்தான் பசவப்பா குறிப்பிட்டிருப்பான்!
தோட்டக்காரன் எதுவுமே பேச மறுத்துட்டான் பார்த்தியா டைகர்!.. இதிலே ஏதோ மர்மம் இருக்கு!
இதைச் சொல்ல ஒரு 007 பாலு வேணுமா என்ன? என்ன மர்மம்? அதைக் கண்டு பிடி!
கூடையிலே ஏறிக்கிறியா டைகர்! எவ்வளவு தூரம் ஓடி வருவே! பாவம்! ...ஆ! முதல்லே உனக்கு ஒரு ஐஸ்கிரீம்! அப்புறம் கூடை சவாரி!
007 பாலு
கதை: குமரன்
சித்திரம்: விஜு
4
பாலு ஐஸ்கிரீம் வாங்கச் சென்ற போது சைக்கிளுக்குக் காவல் நின்ற டைகருக்கு ஆபத்து!


ஐயய்யோ! டைகரை கார்ப்பரேஷன் நாய் பிடிக்கிறவன்.... ஸார்! ஸார்! அதுக்கு லைசென்ஸ் வாங்கியிருக்கேன்!
பாபுவின் கூச்சலைப் பொருட்படுத்தாமல் வேன் சென்று விட...
அடப் பாவிங்களா! அக்கிரமம் பண்றாங்களே!
சும்மா விடப்போறதில்லே நான். கார்ப்பரேஷன் ஸ்பெஷல் ஆபீஸரையே போய்ப் பார்த்து நியாயம் கேட்கப் போறேன்.
தம்பி! பாவம்! நாயைச் சங்கிலி போட்டு பிடிச்சுக்கக் கூடாது? பறிகொடுத்துட்டியே!
மாநகராட்சி விசேஷ அதிகாரியிடம் முறையிட...
தம்பி! கவலைப்படாதே! தப்பு நேர்ந்திருந்தா வருத்தப் படறேன். என் அஸிஸ்டண்டை உன் பின்னோடு அனுப்பறேன். கென்னல்லே போய்ப் பாரு!
கென்னலில்
டைகர்? டைகர்? ... ஐம்பது அறுபது நாய்களாவது இருக்கும்; டைகரை மட்டும் காணோமே! ... சூது வெளுக்கிறது.. டைகரைப் பிடிச்சது கார்ப்பரேஷன் ஆட்களே இல்லே!.. நானும் சும்மா விடப்போறதில்லே!
தொடரும்



பம்பாயில் மழை! தமிழ்ப் புத்தக மழை!

பம்பாய் தமிழ்ச் சங்கம் பற்றித் தமிழ் கூறும் நல்லுலகம் அறியும். தமிழ்ப் பேச்சாளரோ, எழுத்தாளரோ பம்பாய் வருகிறார், அல்லது பம்பாய் வழியாகச் செல்ல இருக்கிறார் என்று தெரிய வந்தால், உடனே அவர்களைச் சங்கத்தில் வரவேற்று, நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து, விருந்து கொடுத்துப் பாராட்டுவது தமிழ்ச் சங்கத்தின் பல்லாண்டு காலப் பண்பாடு. சங்கத்தில் அருமையான நூல்கள் அடங்கிய ஒரு வாசகசாலையும் நடத்தப்படுகிறது. ஊரோடு ஒத்து வாழ் என்பதற்கிணங்க மராத்தி மொழி வகுப்புகள் நடக்கின்றன. தமிழ் வகுப்புகளும் நடக்கின்றன. தமிழ் இலக்கியம் வளர தமிழ்ச் சங்கத்தின் தொண்டுகள் ஏராளம்.

இவ்வளவுக்கும் மகுடம் வைத்தது போல் ஆகஸ்டு முதல் தேதி முதல், பதினொன்றாம் தேதி முடிய தமிழ்ச் சங்க மணி மண்டபத்தில் பம்பாய் வாழ் தமிழர்களுக்காக முதல் முறையாகத் தமிழ் புத்தகக் கண்காட்சி அமைத்திருந்தார்கள். தமிழகத்தின் மிகச் சிறந்த பதிப்பாளர்கள் இப்புத்தகக் கண்காட்சியில் பங்கு கொண்டார்கள்.

ஆகஸ்டு முதல் தேதியன்று ஜாம் ஜாம் என்று ஒரே ஒரு மணி தாமதத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கண்காட்சியை மாநில நிதி மந்திரி ஸ்ரீராம் ராவ் அதிக், குத்துவிளக்கை ஏற்றித் திறந்து வைக்க, சங்க மணி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த அத்தனை புத்தக ஸ்டால்களிலும் குபீரென்று விளக்குகள் ஒளிவீசத் தொடங்கின. மணி மண்டபத்தில் இடம் குறைவாக இருந்தபோதிலும் திறம்பட இருக்கிற இடத்தை நிர்வகித்து அவ்வளவு பதிப்பாளருக்கும் ஸ்டால்கள், ஷெல்புகள், போட்டுக் கொடுத்து மிகவும் கவர்ச்சிகரமாக அமைத்திருந்தார்கள். ஆயிரம் மைல்கள் தாண்டி வந்து பம்பாயில் இப்பேர்ப்பட்ட கண்காட்சியை அமைக்க உதவிய தமிழ்ப் பதிப்பாளர் சங்கத்தைப் பாராட்டிப் பல புத்தகங்களை எழுதலாம்!

மாண்புமிகு நிதி மந்திரி அவர்கள் தமது சிறப்புரையில் நமது முப்பத்திரண்டு வருஷ சுதந்திரத்துக்குப் பிறகும் படிக்காதவர்கள் எண்ணிக்கை அதிகமாவதை எண்ணி வருந்தி, இத்தகைய புத்தகக் கண்காட்சிகள் நிறைய அமைய வேண்டும் என்று வாழ்த்தினார்.

சங்கத் தலைவர் திரு வெங்கடாச்சாரி, சங்கத்தில் புத்தக ஸ்டால்கள் அமைத்திருக்கும் பதிப்பாளர்களின் பர்ஸை நிரப்பி அனுப்பினால் போதும், புத்தகங்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார். சங்க அறங்காவலர் தலைவர் திரு ஆதி லட்சுமணன் தமது வரவேற்புரையில் சங்கத்தின் பணிகளை விளக்கிவிட்டு, பம்பாய்வாழ் இளந் தலைமுறை தமிழர்களுக்குத் தமிழ் மொழியில் பயிற்சி பெற வாய்ப்பு இல்லை என்பதை எடுத்துக்காட்டி அதற்காகச் சங்கம் நடத்தும் தமிழ் வகுப்புக்களைக் குறிப்பிட்டார்.

தமிழ்ப் பதிப்பாளர் சங்கத் தலைவர் கல்யாணசுந்தரம் தமது உரையில் இந்தக் கண்காட்சியில் இருபது பதிப்பகங்கள் நேரடியாகப் பங்கு பெற்றாலும் அவர்கள் மூலமாகப் புத்தகங்கள் அனுப்பி மொத்தம் சுமார் நூற்றி இருபது பதிப்பகத்தினர் கலந்து கொண்டிருப்பதைக் குறிப்பிட்டார். இந்தக் கண்காட்சியில் ஜோதிடம், வான சாஸ்திரம் விளையாட்டு, விஞ்ஞானம், சட்டம், நாவல், சிறுகதை, கவிதை, குழந்தைகளுக்கான புத்தகங்கள் எல்லாம் இருந்தன.

பம்பாய் மழை பற்றிச் சொல்ல வேண்டாம். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் திரளாக இந்தக் கண்காட்சியைக் காண வந்த தமிழர்களைக் கண்டு பெருமையாக இருந்தது. வியாபாரம் ஆனது அதைவிடப் பெருமையாக இருந்தது!

—லட்சுமி கண்ணன்

டா:ஃபே பிரதான விற்பனை உரிமை

பெருமையுடன் வழிவழியாக வளர்ந்துவரும் ஸ்தாபனம்.



டா:ஃபே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் இந்திய வேளாண்மைக்கு கடப்பாடு உடையவர்கள். அவர்களின் பரஸ்பர நம்பிக்கையால்தான், இந்தியநாடு முழுவதிலும் சிறந்த முறையில் அனைத்திந்திய பிரதான விற்பனை அமைப்பின் கீழ் விற்பனை மற்றும் சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. அவர்களின் கூட்டு முயற்சியால்தான் பல விற்பனை மையங்கள் ஒரு தலைமுறையையும் தாண்டி இயங்கி வருகின்றன. இதில் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மையங்கள் கால் நூற்றாண்டுக்கான பணிக்கென விருதுகள் பெற்றுள்ளன.

தொழில் ரீதியாக போட்டிகள் நிறைந்த இன்றைய சூழலில் டா:ஃபே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் வளர்ந்துவரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகத்தொடர்ந்து போராடி வருகின்றார்கள்.

இந்திய வேளாண்மையை வளப்படுத்துவதைத் தத்துவமாகக் கொண்டுள்ளது—டா:ஃபே.

MF Massey Ferguson

TAFE

டிராக்டர்ஸ் அண்ட் :பார்ம் எக்விப்மென்ட் லிமிடெட்

சென்னை

MAC/T/45-A/Tam


சிவாஜி சகாப்தம் முடிஞ்சு போச்சுன்னு சொன்னவன் நீ தானே?


நீ என்ன அரசியல்வாதியா? நாற்காலியை விடுன்னு சொன்னதுக்கு, துடிதுடிச்சுப் போன மாதிரி அழுறியே!


செகண்ட் ஷோவுக்கு போகச்சே எதுக்குங்க இத்தனை நகை போட்டுக்கணும். அன்று நகர் சாந்தி காலனியில் செயின் பறிச்சிட்டுப் போன நியூஸைப் படிக்கலீங்களா?


ஐயோ சத்தியமா நான் பிச்சை யெடுக்கிறவன் இல்லீங்க... வேண்டுதலுக்காக இப்படி....


ரேஷன் ஷாப்லெ
சர்க்கரை கொடுக்க
றாங்களாம்,
ஓடிவா.


திமுகவில்
வெச்சிருக்கிற
காலெ
தூக்கனும்னு
பார்க்கிறேன்
பாலன்ஸ்
போயிடும்
போல
இருக்குதே!


இந்த ஆளு என்ன
யமனையே பார்த்துட்ட
மாதிரி பயந்து
அழுவறாரு...

புகு மனைவிக்கு...

கமலி

அன்பே, ஆருயிரே!

ஒரு கவிதை போல் நீ உறங்கிக்கொண்டிருக்கும் இந்தக் காலை வேளையில் உன்னை எழுப்பிக் காப்பி போடச் சொல்லாததைத் தவறாக எண்ணாதே.

நேற்றுக் காலை நீ காப்பி போட்டபோது இடுக்கியின் பிடி தளர்ந்து வெந்நீர்ப் பாத்திரம் அப்படியே கீழே விழ அருகில் நின்று கொண்டிருந்த என் காலில் கொட்டிச் சிறிது ரணத்தை ஏற்படுத்தியது. நான் அங்கு நின்றது என்னுடைய தவறு. இடுக்கி பிடி தளர்ந்தால் வெந்நீர்ப் பாத்திரம் கீழே விழுமே என்று எனக்குத் தெரிந்திருக்க வேண்டாமோ? என்ன கணவன் நான்!

அப்புறம் காலைச் சிற்றுண்டிக்குத் தோசை வார்த்தாயே, அதிலும் உன் சாமர்த்தியத்தைக் கண்டேன். ஆசைக் கணவன் சாப்பிடச் சின்னச் சின்ன விள்ளல்களாக இருந்தால் சௌகரியமாக இருக்கும் என்றுதானே தோசையைத் திருப்பும்போது ஒன்பது துண்டுகளாகத் திருப்பினாய்? ஒரேயடியாகத் திருப்புவதைவிட இப்படிப் பல துண்டுகளாகத் திருப்புவது சிரமமான வேலை. இருந்தும் என் மேல் இருக்கும் ஆசையினால் நீ சிரமத்தைப் பொருட்படுத்தவில்லை. தோசை முறுவலாக இருந்தாலும் எனக்குப் பிடிக்கும்; ஊத்தப்பம் மாதிரி இருந்தாலும் எனக்குப் பிடிக்கும் என்று நான் சொல்லியிருந்ததை ஞாபகம் வைத்துக் கொண்டு ஒரு துண்டுபடு மெல்லிசாகவும் மற்றது ஒரு இஞ்ச் கனமாகவும் நீ வார்த்த சாமர்த்தியத்தை நான் எப்படி விவரிப்பேன்!

நமக்குக் கல்யாணமாகிய முதல் நாளிலேயே இத்தனை சாமர்த்தியத்தைக் காட்டிவிட்டாயே, என் கண்ணே!

காப்பியில் சர்க்கரைக்குப் பதிலாக பவுடர் உப்பைத் தவறுதலாகத்தான் போட்டுவிட்டாய். இருந்தாலும் நம்பு, என் மனோரஞ்சித மலரே, உப்புப் போட்ட காப்பியின் ருசி இவ்வளவு பிரமாதமாக இருக்கும் என்று எனக்கு இதுவரை தெரியாது. அடாடா, என்ன டேஸ்ட்!

தோசைக்கு மிளகாய்ப் பொடி பண்ணியதிலிருந்து உன் சிக்கனத்தையும் சமையல் தேர்ச்சியையும் கண்டறிந்தேன். பருப்பு விற்கும் விலையில் மிளகாய்ப் பொடியில் பருப்புகளைப் போடுவது ஊதாரித்தனம். வெறும் மிளகாய்ப் பொடியைத் தொட்டுக் கொண்டால் அப்படி ஒன்றும் மோசமாக இல்லையே. கண்ணில் நீர் வந்ததும் ஒரு நல்லதற்குத்தான். கண்களும் சுத்தமாகின்றன. நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டி இருப்பதால், ஒரு தோசை சாப்பிட்டாலே வயிறு நிரம்பி விடுகிறது. ஏழெட்டுத் தோசை சாப்பிட்டால் வீணாக உடல் பருக்கும்; தொப்பை விழும்.

ஆகா! அந்த அருமையான தோசையும் காப்பியும் இன்னும் என் நாக்கிலேயே இருக்கின்றன. உன்னை எழுப்பி, இன்றைக்கும் காப்பி போட்டுத் தோசை செய்து கொடுக்கும்படி சொல்ல எனக்கு மனமில்லை. நீ தூங்கிக் கொண்டே இரு. இதோ இரண்டே நிமிஷத்தில் தெருக்கோடி மீனாட்சி பவனிலிருந்து ஆறு தோசை, இரண்டு கப் காப்பி வாங்கிக் கொண்டு ஓடி வந்து விடுகிறேன்.

கண்ணே, தூங்கு. நான் வருவதற்குள் எழுந்து காப்பி போட்டுவிடாதே, ப்ளீஸ்...



"...ஓங்காரம்... ஓங்காரம்... ஓங்காரம்...!"

எஸ். ஐ. ஆர். ரயிலில் ஏறி விட்டோம் குடும்ப சமேத ராய். எங்கப்பாவுக்கு ஒரே குஷி. தம் வாழ்க்கையின் மனோரதம் பூர்த்தி ஆக ஆரம்பித்துவிட்டது பற்றி. தம்மை அறியாமலேயே ஹரி நாம கீர்த்தனை பாட ஆரம்பித்தார். ரயில் ஓடும் — போடும் தாளத்துக்கு ஏற்ற படி ராகமும், பார்வைகளும் வெளிவந்தன. எங்களுக்கு வெட்க மாயிருந்தது. ரயி லில் கூடச் செல்லும் பய ணிகள் எங்கப்பாவின் டியூ னைக் கேட்டுச் சிரிக்கப் போகிறார்களே என்றிருந் தது.

•

வருஷம் 1935. எஸ். ஐ.ஆர். ரயில்வே யில் ஸ்டேஷன் மாஸ் டர் எங்கப்பா. ரிடயர் ஆக ஆர் டர் வந்துவிட்டது. ரயில்வே பாஸ் 'பாஸின்' பாஸ் எல்லாம் வீணாகப் போகாமல் இருக்க காசி யாத்திரை செய்ய வேண்டும். ஏன், எல்லா ரிடையர் ஆகும் ரயில்வே சிப் பந்திகளுக்கும் ஏற் படும் ஆசை இது. இதற்கு எங்கப்பாவும் விதி விலக்கல்லே!

எங்கப்பாவுக்கும் வேலையில் இருந்த காலத்தில் வாழ்ந்த 'சட்டைக்கார அனுசார' வாழ்க் கைக்கு முழுக்குப் போடக் காசி சென்று வரவேண்டும் என்ற பேராவல்.

''சே, இந்த பாண்ட், கோட்டு, பச்சை ஜரிகைக் குல்லா — எல்லாமே அனுசார வேஷம்'' என்று கூறுவார். ''நான் ரிடயர் ஆன பிறகு ரொம்ப ஆசார மாய் ஜபம், பஜனைகளுடன் இருக்கப் போகிறேன்'' என்பார் எங்க அம்மாவிடம்.

நாளுக்கு நாள் அந்த ஆசை துளிர்விட்டது. அதோடு அவரின் ஸ்டேஷன் மாஸ்டர் பச்சை ஜரி கைக் குல்லாய்க்குள்ளே ஒரு சிறு சிகையும் முளைக்க ஆரம்பித்தது: ஓய்ந்த வேளையில் பஞ்ச கச்சம் கட்ட ஆரம்பித்தார். பட்டை விபூதி, கோபி சந்தனக் கீற்று.

காசி யாத்திரைக் கனவு வளர ஆரம்பித்தது எங்கப்பாவுக்கு. குடும்பத்தோடு காசிசென்று வரத் திட்டம். அகில இந்திய 'ரயில்வே மேப்'பை பிரித்து வைத்துக் கொண்டு 'தண்டு' எடுக்கும் ராணுவ தளபதி போல் பல குறிப்பெடுப்பார். அந்த வேளை யில் நாங்கள் குறுக்கிட்டால் கட்டுவிடுவார் கட்டு. அப்பாவின் ஒரு சாஸ்திரிகள் நண்பர் கூறியபடி தேசப் பிரதட்சிணத்தை 'ஓம்கார ரூபமாய்ச் செய்ய வேண்டும்' என்று முடி வெடுத்தார்.

புரோகிராம் தயார். முதலில் தஞ் சையை விட்டு ரயில் கிளம்பும். சென்னையை அடையும். சரி! அடைந்தாகி விட்டது. அங்கிருந்து காஞ்சி மாநகர் போக வேண்டும்.

எங்கம்மாவும் திட்டத் தயாரிப்பில் கலந்து கொண்டாள். ''உங்களைத்தானே ஒரு சந் தேகம். சென்னையை விட்டு காஞ்சிக்கா? எப்படி வடக்கே போய்விட்டுத் தெற்கே வந்தால் அது ஓங்கார ரூபப் - பிரதட்சிணை மாகாதே? நீங்க என்ன சொல்கிறேள்



சாஸ்திரிகளே'' என்று நண்பரைக் கேட்டான். அவரும் தலையை ஆட்டினார். அப்பாவும் அதை வாபஸ் பெற ஆமோதித்தார். முதலில் காஞ்சி பிறகுதான் சென்னை. அதன் பிறகு சென்னையிலிருந்து பம்பாய் மெயிலில் நேரே பண்டரிபுரம் போவது! ஆ! பண்டரிபுரம்... எங்கப்பாவின் இதயத்திலே தேங்கி நிற்கும் ஒரு ஆசை பண்டரிபுரம் செல்வது. பண்டரிநாதனைத் தரிசிப்பதுதான்.

''ஏன்னா, அப்படியே பண்டரிபுரத்திலே உட்கார்ந்துவிட்மார்களே.. மேலே போக வேண்டாமா?''

''ரைட் ரைட்... அப்பா பச்சைக் கொடியைக் காட்டினார். மனோ ரயில் பிறகு பம்பாய் மதுரா, ஹரித்துவார், அயோத்தியா, அலகாபாத், காசி, கயா, கல்கத்தா பூரி ஜெகன்னாத் சென்று சென்னை திரும்பி விட்டது. திட்டம் ஏகமனதாகத் தீர்மானமாகியது.


''ஓம்கார ரூபம், பிரணவ ரூபப் பிரதட்சிணம்! பேஷ் பேஷ் சாஸ்திரிகளே'' என்று குதூகலித்தார் அப்பா.

மளமளவென்று திட்டங்களை விவரித்து ஊர்களைக் கூறி அப்பா ரயில்வே பாஸ்களுக்கும் ''பாரின்'' பாஸ்களுக்கு ஏற்பாடு செய்தார். அவையும் வந்து சேர்ந்தன. எங்கப்பாவும் ரிடையராகி விட்டார். அப்பாவுக்கு ரயில்வேக்காரர்கள் டீ பார்ட்டி அளித்தனர். பத்திரிகைகளில் செய்தி வராதது அப்பாவுக்குப் பெருங் குறை!

யுத்த காலப் பாணியில் காசி யாத்திரை ஏற்பாடுகள் நடந்தேறின.

ஒரு மாதப் பயணத்துக்கு ஏற்றபடி சமையல் சாமான்களைச் சாக்கு மூட்டையில் கட்டினாள், கள்ளிப் பெட்டிகளில் அடைத்தாள் எங்கம்மா. எனது கெட்டிக்கார அண்ணன் கள்ளிப் பெட்டிகளைத் திறக்க முடியாதபடி எங்கும் ஆணிகள் கொண்டு பாக்கிங் செய்து விட்டு அம்மாவிடம் வாங்கிக் கட்டிக்கொண்டான். ஆக மொத்தம் ஏழு எட்டு பெரிய சாமான் மூட்டைகள் எங்களுடன் காசி பார்க்க ரெடியாகின.

திட்டப்படி ரயிலில் காஞ்சி வந்தோம். பிறகு சென்னை. பம்பாய் மெயிலில் இடம் பிடித்து (எட்டு சாமான்கள், ஏழு நபர்கள், வடக்கே படையெடுக்க 'சலோ' செய்தோம். அடுத்த படைத்தளம் அமைக்கும் இடம் பண்டரிபுரம். பண்டரிபுரத்தை நினைத்தாலே எங்கப்பாவுக்கு புளகாங்கிதமாகி விடும். அவர் பல முறை 'பக்த விஜயக்' கதைகளைப் படித்திருக்கிறார். படிக்கும்போது எல்லாம் தம்முடைய ஸ்பெஷல் ட்யூனில் ''நிவர்த்தி ஞானதேவ, சோபான முக்தாபாய், ஏக



நாத, நாம தேவ, துகாராம்... துகாராம் துகாராம்'' என்று அடிக்கடி பஜனை 'ஹம் மிங்' செய்வதைக் கேட்டிருக்கிறோம். அப்பா வின் ஆத்ம வட்சியபுரி பண்டரிபுரத்துக்கு நிஜமாகவே பயணம்.. இப்போது அது நிறை வேறப் போகிறது.

குருவாடி ஸ்டேஷன் வந்தது. பெரிய ரயிலிருந்து பண்டரிபுரம் செல்லும் 'டாய் 'டிரெயினில்' மாற வேண்டும். இடித்துப் பிடித்துப் புகுந்து எட்டுச் சாமான்கள், ஏழு பேர்களும் ஏறவேண்டும், ஏகக்கூட்டம். உள்ளே உட்கார்ந்திருந்த மராத்தியர்கள் இடம்விட மறுத்து மராத்தியில் மொழிய அப்பா பதிலுக்கு இங்கிலீஷிலும் தமிழிலும் வசனிக்க (வசவு கூற) நானும் என் தம்பியும் வேடிக்கை பார்க்க ஜன்னல் சீட்டுக்கு அடித்துக் கொள்ள ஒரு வழியாகப் பண்டரி புரம் வந்தடைந்தோம்.

'பாண்டுரங்கா! பண்டரிநாதா...' எங் கப்பா பஜனை டியூனில் இசைக்க 'பண்டரீ புரத்தில் 'மிலிட்டரி கூடார'மடிக்கப்பட் டது. ஒரு வாரத்துக்கு மேல் கேம்ப். தின மும் அப்பாவின் புதிய புதிய பஜனை கீதம். பண்டரிநாத விக்ரகத்தை 'கடாலிங்கனம்' செய்யச் செய்ய எங்கப்பாவின் ஆஸ்திக வேகம் மேலும் அதிகரிப்பதைக் கண்டோம்.

அப்பா பஞ்ச கச்சம் கட்ட ஆரம்பித்தார். அவர் போகும் ஆஸ்திக வேகத்தில் எங்கள் கிராப்புகளும் குடுமிகளாக மாறிவிடுமோ என்றுகூடப் பயந்தோம்.

திரும்ப ஊருக்குச் சென்றால் தினசரி ஜபம் செய்ய ஒரு மூக்கு வைத்த செண்டியும் வாங்கினர். புராண கால ரிஷிகள் கையில் இருக்குமே அது மாதிரி டிசைன். அந்தப் பித்தளைக் கிண்டியின் அழகில் சொக்கிய நாங்களும் ஆளுக்கு ஒரு கிண்டி வேண்டு மென்று அடம் பிடித்தோம். வெற்றி எங் களதே.

ரிஷி குமாரர்கள் மாதிரி 'சந்திர பாகா' நதியில் குளித்துவிட்டு கிண்டியை ஏந்திக் கொண்டு தினமும் நடந்தோம் ஸ்டைலாக.

பண்டரிபுரத் தெரு எங்கும் பாண்டுரங்க பஜனை கோஷ்டி காணம். ஒவ்வொருவர் கையிலும் ஜாலரா, தம்பூரா, கழுத்திலும் துளசி மணி மாலைகள். சிப்ளாக்கட்டை.

''அப்பா, நீங்க ஊரில் போய் பஜனை செய்யப் போகிறீர்கள் அல்லவா?''

''ஆமாம், நிச்சயமாக!''

''அப்போ, பஜனை செய்ய ஜாலரா வேண் டாமாப்பா?''

''எஸ். ஆமாம், ஆமாம்...''

அடுத்தபடி எங்கள் ஒவ்வொருவர் கையி லும் ஜாலரா ஏறியது. அப்பாவின் கையில் கூடத்தான். நாங்கள் எல்லோரும் அந்த ஜாலரா நாதத்தில் சொக்கித் திளைத்தோம்.

''பரதேசி மாதிரி கையிலே தம்புரா, சிப்ளாக் கட்டை... அப்புறம் எங்கேயாவது கப்பரை விக்கிறாளா பாருங்கோ! உங்கள் குழந்தைகளுக்கு வாங்கித்தர'' என்று தாயார் சத்தம் போட்டாள்.

பண்டரிபுரத் தெருவெல் லாம் துளசி மணியைக் கடைந்தெடுத்து மாலை கட்டி விற்பனை செய்யும் கடைகளைக் கண்டோம்.

பஜனைக்கு ஜாலரா தயார். பண்டரிநாத நாம சங்கீர்த்தனமோ மனப்பாடம். அதற்கு ஏற்பக் கழுத்தில் துளசி மணி மாலை இல்லா விட்டால் பரம பாகவதனாக எப்படி ஆக முடியும்? எங்கப்பாவும் முழுச் சம்மதம் அளித்தார். அதோடு அவருக்கும் சின்ன ருத்ராட்ச மாலையும் வாங்க ஆசை.

ஒரு துளசி மணி மாலைக் கடையில் புகுந்து தலைக்கு — இல்லை! கழுத்துக்கு — நாலு வடம் துளசி மணி மாலை வாங்கி அணிவித்தார் அப்பா. தமக்கும் ஒரு செட். கூட ருத் ராட்ச மாலையும் வாங்கினர்.

அம்மாவிடம் ஆசையாக ருத்திராட்ச மாலையைக் காட்டினர். அம்மாவுக்கு இந்த வேஷங்களைக் கண்டு கோபம். மாலையை வாங்கிப் பார்த்தாள்.

''ஐயையோ இது ருத்திராட்ச மாலைன்னு சொல்லி யாரோ உங்கள் கழுத்தில் கட்டி விட்டாளே.... அசல் இலந்தைக் கொட்டை மாலை! யார் தின்ன எச்ச இலந்தைக் கொட்டைகளோ, கர்மம் கர்மம்!''

அப்பா ஃயாஸ் போன சோடா ஆனர்.

எப்படியோ சுதாரித்துக் கொண்ட எங் கப்பா, அடுத்தபடி தம் மகோன்னத ஆசை ஒன்றை நிறைவேற்ற மீண்டும் திட்டமிட் டார். ஊருக்குப் போய் பஜனை செய்ய உட் கார ஒரு 'கிருஷ்ணாஜனம்' அதாவது மான் தோல் ஆசனம் ஒன்று வேண்டுமென்ற ஆசைதான். யார் யாரிடமோ விசாரித்துக் கொண்டிருந்தார். காட்டான் போன்ற தோற்றமுடைய ஆசாமி ஒரு மான் தோலைக் கொண்டு வந்து எங்கப்பாவிடம் காட்டினன் ஒரு நாள். அதன் அழகில் மனத்தைப் பறி கொடுத்தார்.

50 ரூபாய்க்கு ஆரம்பித்த பேரம் நாலு மணி நேரம் மணிப்பிரவாள பாஷை மழை பொழிய ஒரு வழியாக 25 ரூபாய்க்கு உடன்படிக்கையாகியது.

''என்னப்பா, நீ கொண்டு வந்திருக்கிற மான் தோல் மொட மொடன்னு இருக்கு. 'சாப்டா' இருக்க வேண்டாமோ?'' - இது எங்கப்பா.

''ராம், ராம்! இந்த மானை இரண்டு நாட்களுக்கு முன்தான் பக்கத்துக் காட் டிலே வேட்டையாடிக் கொண்டு வந்தேன். இன்னம் சரியாக்கூடப் பாடம் செய்ய வில்லை, சரியா பாடம் செய்திருந்தால் 100 ரூபாய்க்குக்கூடப் போகும். ராம் ராம்...! இதை நீங்க வாங்கின பிறகு தினம் கொஞ்சம் பாடம் செய்தால் ஒரு மாசத் திலே 'சிக்' கெட்டுது. அப்படி ஆகும்.''

''சரி விடு... அதை எப்படிப் பாடம் செய்யவேண்டும்? எங்களுக்குத் தெரியாதே!''





''ராம், ராம், ராம்.. இதென்ன பிரமாதம்? விளக்கெண்ணெய் இல்லே விளக்கெண்ணெய்...? (மராத்தியில் சொன்னதை ஜாடையில் அபிநயித்ததை எப்படியோ அர்த்தம் புரிந்து கொண்டோம்) அதையும் மஞ்சளையும் கூட்டிக் குழைத்து மான் தோலில் தடவ வேண்டும். இரண்டு நாள் கழித்து மறுபடியும் வேப்பெண்ணெய் இல்லே வேப்பெண்ணெய்? அதையும் காவிக் கட்டியையும் கலந்து தடவ வேண்டும். இரண்டு நாள் கழித்து மீண்டும் விளக்கெண்ணெய், மஞ்சள், அப்புறம் வேப்பெண்ணெய், காவிக்கட்டி இப்படியே ஒரு மாசம் மாறி மாறித் தடவி வந்தால் சில்க்! என்ன' ராம் ராம்! நான் சொன்னது புரிந்ததா? பணத்தை எடுங்கள்'' என்றான்.

தோல் பாடம் செய்வது எங்கப்பாவுக்குப் பெரிய வேலையாகப் படவில்லை.

ஒரு கலயத்தில் விளக்கெண்ணெய், ஒரு கலயத்தில் வேப்பெண்ணெய். இரு பொட்டலங்களில் மஞ்சள் பொடியும், காவிக் கட்டியும் வந்து சேர்ந்தன.

பண்டரி நாதனையும், பாண்டுரங்கனையும் மறந்துவிட்டு, மான் தோலுக்கு விளக்கெண்ணெய், பாடம் செய்ய ஆரம்பித்தார். தரை பூரா மஞ்சள், உடல் பூரா விளக்கெண்ணெய். மான் தோல் விரைத்துக் கொள்ள, இவர் இழுக்க, அது இழுக்க, நாங்கள் இழுக்க, எப்படியோ மான் தோல் பாட ஆரம்பம் நடந்தது.

மறுநாள் முதல் மான் தோல் பாடம் படிக்கும் வேலை என் தலையில் விழுந்தது. சகோதரிகள் மூக்கைப் பிடித்துக்கொண்டு ஓடிவிட்டனர். சரியான சமயத்தில் என் சகோதரர்களுக்குப் பக்தி அதிகமாகி பாண்டுரங்க தரிசனத்துக்கு ஓடி ஒளிந்து விட்டனர். தினமும் அகப்பட்டவன் நான்தான்.

எனக்குத் தினசரி பஜனை மான் தோல், விளக்கெண்ணெய், மஞ்சள் அல்லது வேப்பெண்ணெய், காவிக்கட்டி!

''டேய், இப்போ மான் தோல் எப்படி பாடம் ஆறது பாத்தியாடா?'' என்று அப்பாவின் குதூகலக் கேள்வி.

அம்மா மூக்கைப் புடவைத் தலைப்பால் மூடிக்கொண்டு முகம் சுளிக்க ஆரம்பித்தாள்.

மான் தோல் எங்கள் கோஷ்டியுடன் காசி யாத்திரைக்குத் தயார். இப்பொழுதெல்லாம் ரயிலில் நாங்கள் கூட்டத்தில் அவதிப்படுவதே இல்லை. காரணம்,

மான் தோல் மணத்தைத் தாங்க முடியாமல் ரயில் பெட்டியில் உள்ள சக பிரயாணிகள் வேறு பெட்டிக்கு ஓட ஆரம்பித்ததுதான். நாளுக்கு நாள் ஊருக்கு ஊர் இந்தக் காட்சி அதிகமாயிற்று. ரயில் எங்கும் சென்னை 'குரோம்பேட்டை' மணம் பரவியது.

பம்பாய், மதுரா, ஹரித்துவார், காசி, கயா, கல்கத்தா, பூரி, எல்லா ஊர்களையும் நாங்களும், எங்கள் அருமை மான் தோலும் சுற்றி வந்தோம். நாளுக்கு நாள் சுகந்தம் அதிகரித்ததே தவிரக் குறையவில்லை.

எங்கள் மூக்குகள் உணர்வழிந்தன. காசி ஹல்வாவும், கல்கத்தா ரசகுல்லாவும் மணமிழந்தன. ஒரு வழியாக, டின்டி, ஜாவரா துளசி மணி மாலை, மான் தோல் சகிதமாக ஊர் வந்து சேர்ந்தோம்.

காய்ந்த சப்பாத்தி மாதிரி விரைத்துக் கொண்டே வந்தது மான் தோல். ஊர் வந்தாகிவிட்டதே. இனி ஆசார சீலத்தைத் தொடர வேண்டாமா? பஜனை, ஜபம் செய்ய வேண்டுமே! ஒரு மாத பாடத்துக்குப் பின்னும் இந்த மான் தோல் படியவே மாட்டேன் என்கிறதே.... 'சில்க்' போல ஆகாமல் முரட்டு மாப்பிள்ளை மாதிரி விரைத்துக் கொண்டு இருக்கிறதே?..

''சேசே.... அடியாத மான் படியாது'' எப்படியாவது யாராவது 'தோல்' ஸ்பெஷலிஸ்ட் கிட்டே காட்டிப் படிய வைக்க ஆசை கொண்டார் அப்பா.

அந்தத் தோல் பதனிடும் 'நிபுணர்' தோலைத் தொட்டுப் பார்த்தார். புரட்டிப் பார்த்தார். கூர்ந்து பார்த்தார். அப்பாவுக்குப் பதிலே கூறவில்லை. வேலையில் கண்.

மீண்டும் தடவிப் பார்த்தார், சுரண்டிப் பார்த்தார், சுரண்டிப் பார்த்தார் நிபுணர்.

''என்னப்பா, நீ இது மாதிரி 'கிளாஸ்' மான் தோலை உன் ஆயுசுலே கண்டிருக்கியா?'' அப்பா குரலில் ஒரு பெருமை.

''என்னப்பா, மான் தோல் அழகிலே அப்படியே பிரமிச்சு உட்கார்ந்துட்டியா? பதில் சொல்லேன்?''

நிபுணர் புகையிலைச் சாற்றைத் துப்பி விட்டு வந்தார். கனைத்தார்.

''சார், சொன்னாக் கோபிச்சுக்க மாட்டீங்களே, அந்த அந்த ஆள் அசடு இல்லீங்க! அவன் ரொம்பக் கைகாரன். எனுங்கன்னு... இது மான் தோலே இல்லே, சின்ன கன்னுக்குட்டித் தோலு சார்! ஏமாந்துட்டீங்களே...''

''அப்பவே எனக்குத் தெரியும்! கர்மம் கர்மம்! காசிக்குப் போய் என்ன பலன்! கர்மம் தொலையல்லியே இந்த மனுஷனுக்கு! ரிடயர்ட்! புத்திகூட ரிடயர்ட்!'' – உள்ளே இருந்து அம்மா எரிந்தது எங்கள் காதில் விழுந்தது.

என் தம்பி பெட்டியில் இருந்த ஜாலராவை எப்படியோ எடுத்து விட்டான்.

''நிவர்த்தி, ஞானதேவ, சோபான, முக்தாபாய், ஏகநாதா, நாமதேவ துக்காராம் துக்காராம் துக்காராம் துக்காராம்... என ஜாலராவுடன் பாடிக் கொண்டிருந்தான்.

''என்னப்பா இது?'' ஏகோபித்த குரலில் நாங்கள் கேட்டோம்.

''சரி சரி சரி... விட்டுத் தள்ளு... விட்டுத் தள்ளு... விட்டுத் தள்ளு!'' என்றார் அப்பா!





எஸ்.வி.வி


அமரர் கல்கி

நான் சென்னைக்கு வந்த புதிதில் ''இந்த எஸ். வி. வி. யார்? உங்களுக்குத்தெரியுமா?'' என்று சென்னையில் நான் சந்தித்தவர்களை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்படி 'என்னைக் கேட்கும்படியாகச் செய்தது. அப்போது புதிதாக வெளியாகியிருந்த Soap bubbles என்னும்' புத்தகம்தான். இந்தப் புத்தகத்தில் முதல் விஷயம் ''கோவில் யானை'' (The Temple Elephant) என்னும் கதை. இதைப் படித்தபோது நான் சிரித்ததை நினைத்தால் இப்போது கூட வயிற்றை வலிக்கிறது. புத்தகத்தைப் படிக்கும்வரையில் இப்படிச் சிரிப்பும் சந்தோஷமுமாய் இருந்தது. படித்து முடித்த 'பிறகோ பெருமை பொத்துக் கொண்டு போயிற்று. ''நம்முடைய தமிழ் நாட்டில் இப்படி எழுதக் கூடிய ஒருவர் இருக்கிறாரே!'' என்று நினைக்க நினைக்கக் கர்வம் ஓங்கி வளர்ந்தது. தமிழ் நாட்டைக் குறித்து முன் எப்போதும் இல்லாத கௌரவ உணர்ச்சியும் உண்டாயிற்று. ''தமிழ் நாட்டில் இலக்கிய ஊற்று என்பது அடியோடு வற்றி உலர்ந்து போய்விட்டது'' என்று நினைத்ததெல்லாம் சுத்தத் தவறு என்னும் நிச்சயம் ஏற்பட்டது. இவ்வளவு நகைச்சுவையுடன் எழுதக் கூடிய மனிதர் ஒருவர் இருக்கும்போது, தமிழ் நாட்டில் ஜீவ சக்தி இல்லை என்று சொல்ல முடியாது. நிச்சயமாக இருக்கிறது. பாலாற்றின் வெண்மணல் பரப்பின் அடியில் உள்ள நீரைப் போல் தமிழ் நாட்டின் ஜீவசக்தி மறைந்து கிடக்கிறது. கொஞ்சம் மேல் மணலைத் தோண்ட வேண்டியதுதான். உடனே பளிங்கு போன்ற ஜலம் குபுகுபுவென்று குமிழி விட்டுக் கொண்டு வரும் — இத்தகைய தைரியமும் நம்பிக்கையும் எனக்கு உண்டாயின.

எஸ். வி. வி. இவ்வளவு ஹாஸ்யத்தையும் இங்கிலீஷில் கொட்டியிருக்கிறாரே என்ற வருத்தம் சிறிது இல்லாமல் போகவில்லை. ஆனால் ஒரு திருப்தி இருந்தது. பாஷை இங்கிலீஷாயிருந்தாலும் விஷய மெல்லாம் தமிழ் விஷயம்தான். இங்கிலீஷ் நன்றாய் எழுதும் இன்னும் சில தமிழர்களும் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் இங்கிலீஷ்காரனையே மனத்தில் வைத்துக் கொண்டு அவன் படிக்க வேண்டும் என்பதற்காக எழுதுகிறார்கள். வேறு சிலர் தாங்களே அசல் இங்கிலீஷ்காரனாகி விட்ட மனோபாவத்துடன் எழுதுகிறார்கள். எஸ். வி. வி. யின் இங்கிலீஷ் அப்படியில்லை. அவர் தமிழர்களைப் பற்றி, தமிழிலேயே எண்ணி, தமிழர்களுக்காகவே எழுதுகிறார். பாஷை ஒன்றுதான் இங்கிலீஷ். அதையும் தமிழாகச் செய்துவிடுவது மிகவும் சுலபம். சந்தர்ப்பம் கிடைக்க வேண்டியதுதான். தமிழிலும் இவ்வளவு சரளமாகவும் இன்பமாகவும் எழுதுவார் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு நாள் எஸ் வி. வி. யைப் பார்ப்பதற்காக (இரண்டு நண்பர்களும் நானும்) திருவண்ணாமலைக்குச் சென்றோம். இரவு பதினொரு மணிக்கு அவருடைய வீட்டைக் கண்டு பிடித்துக் கதவை இடித்தோம். எஸ். வி. வி.யே வந்து கதவைத் திறந்தார். யாரோ கட்சிக்காரர்கள் அவசரக் கேஸ் விஷயமாக வந்திருக்கக்கூடும் என்று அவர் நினைத்திருக்கலாம். நாங்கள் விஷயம் இன்னதென்று சொன்னதும் இடி இடி என்று சிரித்தார். இராத்திரி பதினொரு மணிக்கு வந்து கதவை இடித்துத் தூக்கத்திலிருந்து எழுப்பி, ''ஒன்றும் காரியமில்லை. வெறுமனே உங்களைப் பார்ப்பதற்காக வந்தோம்'' என்று சொன்னால் யாருக்குத்தான் சிரிப்பு வராது? ''எங்களை எத்தனையோ தடவை காரணமில்லாமல் சிரிக்கச் சிரிக்க அடித்தீர்கள் அல்

எண்ணமெல்லாம்...பழமொழி-1





லவா? அதற்குப் பழிக்குப் பழி வாங்கிவிட்டோம்'' என்று நான் சொன்னேன்.

''இந்த எஸ். வி. வி. எப்படி இருப்பார்?'' என்று பார்ப்பதற்குத்தான் நாங்கள் முக்கியமாய்ப் போனோம் என்றாலும் மனத்துக்குள் வேறோர் அந்தரங்க நோக்கம் இல்லாமல் இல்லை. அவரைத் தமிழிலும் எழுதப்பண்ண வேண்டும் என்பதுதான் அந்த நோக்கம். இதற்கு அந்தத் தடவையில் விதை போட்டு விட்டுத் திரும்பினோம். அதற்குப் பலன் சில வருஷங்களுக்குப் பிறகு கிடைத்தது. எஸ். வி. வி.யின் முதல் தமிழ்க் கட்டுரை ''தாக்ஷாயணியின் ஆனந்தம்'' என்ற தலைப்புடன் 1—7—33 விகடன் இதழில் பிரசுரமாயிற்று. அதை ராஜாஜி படித்துவிட்டு அளவற்ற மகிழ்ச்சி தெரிவித்தார். ''இவ்வளவு நன்றாய் எஸ். வி. வி. இங்கிலீஷில் எழுதியது கிடையாது'' என்றார். ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரும் அதே அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். ஏதோ அரும் பெரும் காரியத்தைச் சாதித்து விட்டது போல் எனக்கு சந்தோஷம் உண்டாயிற்று.

(11—8—40 ஆனந்தவிகடன் கட்டுரை)

● ● ●

எஸ். வி. வி. காலமானபோது இமயமலை அன்னாமலைக்கு ஆறுதல் கூறுகிறது :

எஸ். வி. வி. இந்தப் பக்கமாக வந்துதான் வானுலகத்துக்குப் போனார். எனது சிகரத்துக்கு மேலே கொஞ்ச தூரம் போனதும் அவரைப் பற்றி ஒரு வாக்குவாதம் ஏற்பட்டு விட்டது. யமதூதர்கள் அவரை யமனுலகத்துக்கு அழைத்துப் போவோம் என்றும் தேவதூதர்கள் சொர்க்கத்துக்கு அழைத்துப் போக வேண்டும் என்றும் தர்க்கம் செய்தார்கள். மத்தியஸ்தம் செய்ய வந்த சித்திரகுப்தன் அவருடைய அபிப்பிராயத்தையே கேட்டு விடலாம் என்றான். 'உம்மை எங்கே அழைத்துப் போக வேண்டும்? யம லோகத்துக்கா? சொர்க்க லோகத்துக்கா?' என்று எஸ். வி. வி.யைக் கேட்டார்கள். அதற்கு அந்த மனிதர், 'இந்தக் கேள்விக்கு ஐயாவைக் கேட்டுத்தான் பதில் சொல்ல வேண்டும்' என்றார். 'அது யார் ஐயா?' என்று கேட்டார்கள். எஸ். வி. வி. இலேசாகச் சிரித்துவிட்டு, ''பூலோகத்தைக் காட்டிலும் இங்கே படிப்பு அதிகம் போலிருக்கிறதே! உங்களையெல்லாம் எம். எல். ஏ.க்கள் ஆக்கிவிடலாம் போலிருக்கிறதே!'' என்றார். இதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. ஆனால் அந்த யமலோகத் தூதர்களும் சொர்க்க லோகத் தூதர்களும் ஒன்றும் தெரியாமல் விழித்தார்கள். சித்திரகுப்தன் கோபித்துக் கொண்டு, ''இவர் இவ்வளவு பிடிவாதக்காரராயிருப்பதால் யம லோகத்துக்கே கொண்டு போங்கள்!'' என்று உத்தரவு போட்டு விட்டான்.


அங்கே அவர் போனதும் யமலோகத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் ஓயாமல் சிரிக்கத் தொடங்கினார்கள். அது யமலோகம் என்பதே எல்லோருக்கும் மறந்து விட்டது. நரக வேதனையும் இல்லாமல் போய்விட்டது. உடனே யமன், ''இவரை இங்கே வைத்திருக்கக் கூடாது' என்று தீர்மானித்து எக்ஸ்



பிரஸ் புஷ்பக விமானத்தில் சொர்க்க லோகத்துக்கு அனுப்பி வைத்தான்!

யமலோகம் எப்படித் திமிலோகப்பட்டது என்னும் விஷயம் ஏற்கனவே சொர்க்கத்துக்கு எட்டியிருந்தது. அதைப் போல் சொர்க்க லோகமும் சிரிப்பாய் சிரிக்கக்கூடாதென்று எண்ணி அங்கே எஸ். வி. வி. வந்ததும் நாரதரின் கையில் இருந்த வீணையைப் பிடுங்கி, எஸ். வி. வி.யின் கையில் கொடுத்து விட்டார்கள். (எஸ். வி. வி. வீணை வாசிப்பில் வல்லுநர்) அதுமுதல் எஸ். வி. வி. வீணையை மீட்டிக் கொண்டு சங்கீத ஆனந்தத்தில் ஈடுபட்டிருக்கிறார். (கல்கி 11—6—50)

ஆதாரம்: பொன்னியின் புதல்வர்



காலேஜில் சேர்க்கிறது!

எஸ்.வி.வி

ஒரு பிள்ளையைக் காலேஜில் சேர்க்கும் கஷ்டத்தைப் பார்த்தால் மூன்று பெண்களுக்குக் கல்யாணம் செய்துவிடலாம் போலிருக்கிறது. அவ்வளவுக்குப் பேஜாராக அல்லவா ஆகிவிடுகிறது!

பணத்தைக் கொடுத்தோம், டிக்கெட்டு வாங்கினோம், ரயில் ஏறி உட்கார்ந்து பிரயாணம் செய்தோம் என்று இருக்கிற மாதிரி பிள்ளை கையில் பணத்தைக் கொடுத்தனுப்பினோம், 'சம்பளத்தைக் கட்டிவிட்டு காலேஜிலே சேருடா' என்றோம் அவன் போய்ச் சேர்ந்து படித்தானும் என்றில்லையே!

சர்க்கார் உத்தியோகஸ்தனாயிருந்தால், பெண் கல்யாணத்துக்கென்று இரண்டு மாதம் லீவு வாங்கிக் கொள்கிறது போல் பிள்ளையைக் காலேஜில் சேர்க்கிறதற்காகப் பரீட்சை முடிவு தெரிந்தவுடன் ஒன்றரை மாதத்துக்காவது லீவு வாங்கிக்கொண்டால்தான் ஆகும்.

லீவு வாங்கிக்கொண்டு பிள்ளையைக் கையில் பிடித்துக் கொண்டு சென்னைப் பட்டணம் வந்து சேர வேண்டும். பையில் நிறையப் பணம் எடுத்துக் கொண்டு வர வேண்டும். பட்டணத்தில் பஸ்ஸுக்கென்றும், டிராமுக்கென்றும், ரிக்ஷாவுக்கென்றும் என்ன பணம் செலவாகும் என்கிறீர்கள்! பிள்ளைக்குக் காலேஜ் சம்பளம், புத்தகம், டிரஸ் இனங்களுக்கு நூற்றைம்பது ரூபாய் ஆகுமென்றால் அதற்கு முன்னாடி அவனைக் காலேஜில் சேர்க்கும் திரிச்சலுக்கும் பிரயத்தனத்துக்கும் மற்றொரு நூற்றைம்பதாவது ஆகும்.

ஒரு சிநேகிதன் வீட்டில் போய் இறங்கக் கட்டாது. எத்தனை நாட்கள் ஒரு சிநேகிதன் வீட்டில் நாமும் பிள்ளையுமாய்ச் சாப்பிட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம்? அதோடு காலேஜ் காலேஜாய் நாம் திரிந்துவிட்டு, மத்தியானம் ஒன்றரை மணிக்கும் இராத்திரி ஒன்பதரை, பத்துக்கும் வீடு வந்து சேர்ந்தால் யார் சாப்பாட்டை வைத்துக் கொண்டு காத்திருப்பார்கள்! அது சரிப்படாது! எங்கேயாவது ஒரு ஹோட்டலில் போய் இறங்கி 'ரூம்' எடுத்துக் கொண்டு தினம் இரண்டு இரண்டரை என்றுசார்ஜ் கொடுத்துத்தானாக வேண்டும்.

காலையில் எழுந்து காப்பி சாப்பிட்டுவிட்டுச் சட்டையை மாட்டிக் கொண்டு, நாமும் பிள்ளையும் இணைப்பிரேமாளும் தாம்பரம் என்றும், சேத்துப்பட்டு என்றும், நுங்கம்பாக்கம் என்றும், சமுத்திரக்கரை என்றும் சைதாப்பேட்டை என்றும் காலேஜ் காலேஜாய் நுழைந்து வெளி வந்து ஒவ்வொரு இடத்திலும் பிரவேசக் கட்டணம் என்று இரண்டோ மூன்றோ ஐந்தோ தக்கபடி தட்சிணையையும் சமர்ப்பித்துவிட்டு, நடுவில் களைப்பைப் போக்கிக்கொள்ள ஐஸ் போட்ட சோடா கலர், எல்லாம் குடித்துவிட்டு, ரயில்காரன், பஸ்காரன், டிராம்காரன் இவனுக்கெல்லாம் கொடுக்க வேண்டிய கடனையெல்லாம் கொடுத்துவிட்டு மறுபடி ஹோட்டலில் வந்து விழும்போது 'அப்பாடா!' என்று ஆகிவிடும்.

''ஏண்டா அப்பா இப்படிப் பிள்ளையாய்ப் பிறந்து என்னைக் கொலை பண்ணுகிறாய்?'' என்று நம்ம பிள்ளையைப் பார்த்தே கேட்கும்படியாகத் தோன்றும்.


அவனாகவா வேண்டுமென்று நம்ம பிள்ளையாகப் பிறந்தான்?

பிள்ளையைக் காலேஜில் சேர்க்க வந்திருக்கும் தகப்பனுடைய குணமும், மாம்பலத்திலிருந்து பாரீஸ் கார்னருக்குக் கரி போட்டு ஓடும் பஸ்ஸில் போகிறவன் குணமும் எப்பொழுதும் வெடி மருந்து மாதிரிதான் இருக்கும். எதைச் சாக்கிட்டு எரிந்து விழலாம் என்று காத்துக் கொண்டிருக்கும்!

இவைகள் எல்லாவற்றுக்கும் பணம் நிறையக் கையில் இருந்தால்தான் சரிப்படும். சென்னைப்பட்டணத்தில் வெளிக் கிளம்பினால் பர்ஸில் போட்ட கை போட்ட பிரகாரம் இருந்தாலொழிய முடியாது. இந்தத் திரிச்சலையும் அலைச்சலையும் வேறு எப்படிச் சமாளிக்க முடியும்! இது போனால் பட்டணத்துக்கு என்று வந்த பிறகு கொஞ்சம் மனத்



எண்ணமெல்லாம்.. பழமொழி-2



துக்கு நிம்மதியாய், சினிமா, டிராமா பார்க்காமல் இருக்க முடியுமா?

ஹூம்! ஹூம்!

இந்த ஓட்டம் பாட்டமெல்லாம் காலேஜ் பிரின்ஸ்பல்களைப் பார்க்கறதற்கு மாத்திரம் என்று நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை. இந்தக் காலங்களில் காலேஜ் பிரின்ஸ்பல்களைப் பார்க்கிறதென்கிறதே சாத்தியமான காரியமில்லை. முன்னாடி காலேஜ் ரைட்டரே நமக்கு முகம் கொடுத்துப் பேச மாட்டாரே! சாதாரண காலங்களில் ஸ்வாமியைத் தரிசிப்பது சுலபமான காரியம்! அவரே கருடன் மேலே ஏறிக் கொண்டாராளுல், அவருக்கு மகிமை ஏறிப் போய் முடிவில் கும்பலில் இடி, குத்து இல்லாமல் அவரை நாம் தரிசனம் பண்ண முடியாது. அந்த மாதிரி 'ரைடர்'களுக்கெல்லாம் இது உற்சவ காலம்.

காலேஜ் பிரின்ஸ்பல்கள் சிபாரிசுகளைக் கவனிக்க மாட்டார்கள் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். இருந்தாலும் நம்முடைய மனம் கேட்கிறதா? பிரின்ஸிபலுக்கு யார் மச்சான், மாமனார் இன்னும் அந்தரங்க சிநேகிதர்கள், யார் சொன்னால் அவரால் தட்ட முடியாது என்றெல்லாம் விசாரித்து அங்கங்கு ஓடி, சிபாரிசுக் கடிதங்களைப் பெறப் பார்க்கிறோம்.

போகட்டும்! இவ்வளவு சிபாரிசுக் கடிதங்களையும் எடுத்துக் கொண்டு பிரின்ஸிபலிடம் போய் அவரும் நம்மைப் பார்க்கிறது என்று ஏற்பட்டு, சிபாரிசுக் கடுதாசியை அவரிடம் கொடுத்தால் அவர் அதைத் திறந்து பார்க்கிறார் என்கிறீர்களா? பிரிக்காமலே பக்கத்தில் வைத்துவிட்டு, பின்னை இங்கிலீஷில் என்ன மார்க்கு வாங்கி யிருக்கிறான் என்று கேட்கிறார். கடைசியில் "யோசனை செய்கிறேன், கார்டு அனுப்புகிறேன், போங்கள்" என்கிறார்.

கார்டு வருகிற வரைக்கும் நம்முடைய மனம் அடித்துக் கொள்கிறது. சான்ஸ் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்ள நம்போல் திண்டாடுகிறவர்களுடன் பேச்சுக் கொடுத்துப் பார்க்கிறோம்.

எடுத்ததே என்ன கேட்கிறார்கள்?

"பிள்ளை முதல் கிளாஸில் தேறியிருக்கிறானா?" என்கிறார்கள்.

"இல்லை. தேறுவான் என்று நிச்சயமாகத் தான் இருந்தோம். என்னமோ இரண்டாம் கிளாஸில்தான் விழுந்தது!"

"இங்கிலீஷில் என்ன மார்க் வாங்கியிருக்கிறான்?"

"கிளாஸ் பரீட்சையிலெல்லாம் நாற்பது நாற்பத்தைந்து வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான். ஒருதரம் ஐம்பது கூட வாங்கியிருக்கிறான். பரீக்ஷையில் என்னமோ நூற்றுக்கு முப்பத்தைந்துதான் வாங்கி யிருக்கிறான். முப்பத்தைந்து மார்க் என்றால் சேர்த்துக்கொள்ள மாட்டார்களோ?"

"கஷ்டம்தான். நாற்பத்தைந்து ஐம்பது வாங்கினவர்களைக் கூடப் போதாது என்கிறார்களாமே! என்ன ஸப்ஜெக்ட்டோ?"

"ஹிஸ்டரி!"

"ஹிஸ்டரிதானே அதற்கு எந்தக் காலேஜில் வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்வார்கள்!"

"இல்லை அப்பா! இண்டரில் ஹிஸ்டரி எடுத்துக்கொண்டான். இப்போ 'இகனாமிக்ஸ்' ஹானர்ஸில் சேர வேண்டும் என்கிறது!"

"ஆனால் கஷ்டம்தான்!"

"'இகனாமிக்ஸ் ஹானர்ஸ்' என்றால் என்ன, வெல்லம் போட்டிருக்கிறதோ! என்ன உயர்த்தியோ! என்ன தலையால் கஞ்சி குடித்தால் கூட இருபத்தைந்து ரூபாய் சம்பளத்துக்கு லாட்டரி அடிக்க வேண்டி யிருக்கிறது. எல்லாம் வீண் தண்டம்! தண்டம்!"

"ஆனால் அதில் சேர்த்துக் கொள்கிறது கஷ்டம்தானோ?"


"அப்படித்தான் தோன்றுகிறது. இந்த வருஷம்தான் குபேரப் பட்டணம் கொள்ளை போனாற் போல் இண்டர்மீடியேட்டில் முதல் கிளாஸாவே அடித்துத் தள்ளி யிருந்ததே!"

"ஸப்ஜக்டில் என்ன மார்க் வாங்கியிருக்கிறான்?"

"என்னடா வாங்கியிருக்கிறாய்?"

"முப்பத்தெட்டு!"

"முப்பத்தெட்டு! மூஞ்சியைப் பார்! 'படிடா படிடா' என்று அப்பொழுதெல்லாம் தலையில் தலையில் அடித்துக் சொன்



டேன். அப்போ புத்தி புல் மேயப் போச்சு, முப்பத்தெட்டு!''

''சம்ஸ்கிருதத்தில் நாற்பத்தி மூன்று வாங்கியிருக்கிறேன்!''

''வாங்கியிருக்கிறாய். சாப்பிடுகிறதில் கூடத்தான் நூற்றுக்கு நூற்றிருபது வாங்குவாய். இங்கிலீஷில் என்னடாவென்றால் சம்ஸ்கிருதத்தில் நாற்பத்தி மூணு வாங்கியிருக்கிறானாம்! வெட்கமா யில்லே!''

ராமமூர்த்தி எஸ். எஸ். எல். ஸி. தேறினதுமே போதும் படிப்பு என்றேன். அவன் தாயார் பொரிசுக்கு வந்து விட்டாள். எனக்குந் தான் தோன்றிற்று. இண்டர்மீடியட்டிலாவது தேறித் தொலையட்டும். வேறு எந்த வழியிலாவது திருப்பி விடலாமென்று. இண்டர்மீடியேட் தேறினதும் போதுமென்றேன். பி. ஏ.யும் பி. எல். லும் படிக்கிறதால் புத்தி கெட்டுப் போகிறதைத் தவிர வேறு ஒன்றுமில்லே என்றேன். நான் சொன்னால் யார் கேட்கிறார்கள்! மறுபடி தாயார் பொரிசுக்கு வந்து விட்டாள்.

''என்னமோ ஹானர்ஸாமே, அதற்குப் படிக்க வேணும் என்கிறானே; போய்ப் படிக்கட்டுமே!''

''ஆனர்ஸ்! என்ன ஆனர்ஸ்?''

''அது என்னமோ எனக்குச் சொல்லத் தெரியவில்லே. அது என்ன சொல்லேண்டா!''

''இகனமிக்ஸ் ஆனர்ஸ், அப்பா!''

''உன் மூஞ்சிக்கு இகனமிக்ஸ் ஆனர்ஸ். உன்னை யார் சேர்த்துக் கொள்கிறார்கள்? முப்பது மார்க்கும், முப்பத்தைந்து மார்க்கும் வாங்கினவனுக்கு ஆனர்ஸ்!''

''இவனுக்கும் குறைந்து வாங்கியிருக்கிறானும் கோதண்டம். அவனைச் சேர்த்துக் கொண்டு விட்டதாய்க் கார்டு வந்துவிட்டதாமே! நீங்களும் போய்ப் பிரயத்தனப்பட்டால்தானே முடியும்! வீட்டில் உட்கார்ந்து கொண்டே முடியாது என்று சொல்லிக் கொண்டிருந்தால் முடியாதுதான்! பிள்ளையைப் பெற்றுவிட்டால் ஆகிவிட்டதா என்ன? அதுகளுக்குக் காலா காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்தால்தானே!''

ஈசுவரா! ஈசுவரா!

படாத பாடு பட்டுக் கடைசியில் அவனைச் சேர்த்தேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்! ஆனால் என்ன பேஜாரல்!

நன்றி: ஆனந்தவிகடன் (20—7—41).

கல்கி நற்பணி மன்றம்

வாசகர் பரிசுத்திட்டம்

இந்த வாரம் நீங்கள், உங்கள் வசதி, தகுதிக்கு ஏற்பச் செய்த ஏதேனும் ஒரு நற்பணியைக் கீழே உள்ள கூப்பனில் சுருக்கமாக நாலு வரிகளில் எழுதுங்கள். கூப்பனை வெட்டி எடுத்து உறையிலிட்டு, **''கல்கி - நற்பணி மன்றம், தபால் பெட்டி எண் 3159, சென்னை- 600032** என்ற விலாசம் எழுதி, போதிய தபால் தலையொட்டித் தபாலில் சேர்த்துவிடுங்கள்.

பரிசுகள்: ஒருவருக்கு உஷா தையல் மிஷின்: மேலும் 50 பேருக்கு ஆளுக்கு ரூ. 10/— இவர்களின் நற்பணிகள் கல்கியில் பிரசுரமாகும்.


உறையில் கூப்பனைத் தவிர வேறு எதுவும் வைக்கக் கூடாது.

ஆகஸ்டு மாதத்துக்கு முடிவு தேதி: செப்டம்பர் 22.

கல்கி நற்பணி மன்றம்

இவ்வாரம் (ஆகஸ்டு 24—30)

நான் செய்த நற்பணி:




கையெழுத்து: தேதி: ____________________

பெயர்: ____________________

விலாசம்: ____________________

____

____



உடம்பு சரியில்லை!

ரா. கி. ரங்கராஜன்

நோயுள்ள வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது என் கட்சி. ''இந்த நாற்பத்தைந்து வருஷத்தில் நான் தலைவலி என்று ஒரு நாள் கூடப் படுத்தது கிடையாது ஸார்!'' என்று சொல்லுகிறவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. நாற்பத்தைந்து வருஷங்களை வீணடித்து விட்டாரே மனிதர் என்று அவருக்காக அங்கலாய்ப்பேன். கேவலம் ஒரு தும்மல் கூட இல்லாமல் வாழ்க்கையில் இந்த நபர் என்ன சுகத்தைக் கண்டிருக்கக் கூடும்?

ஜலதோஷம் வந்து கைக்குட்டையின் நுனியைத் திரித்து மூக்குக்குள் விட்டுக் கொண்டு ஐந்து தும்மல் போடும் ஆனந்தத்தை அறியாத அப்பாவிகள் இருந்தாலென்ன, டைபாயிடலோ டி.பி.யிலோ போனாலென்ன? குளிர் ஜுரம் வந்து காலோடு தலை போர்த்திக் கொள்ளும்போது உடம்பு கண குஷியாய்க் கதகதக்கிறதே, அந்த இன்பத்தைத் தெரியாதவர்கள் எதற்காகப் பூமியில் மாந்தரென ஜனிக்கிறார்கள்? வயிற்றைப் புரட்டுகிறது என்று, இல்லாளின் கையால் ஒரு டம்ளர் மோரைக் குடிக்கும் பேற்றினைப் பெறாதவர்கள் எத்தகைய துரதிர்ஷ்டசாலிகள்!

என்னைப் பொறுத்தவரையில் எனக்கு உடம்பு சரியில்லாமல் போனால், ஆபீஸில் ஒன்பது மாசப் போனஸ் கொடுத்தாற்போலச் சந்தோஷப்படுவேன்; மனைவி பிறந்தகம் போனாற்போலக் குதூகலிப்பேன்.


''டாக்டருக்குச் சொல்லி யனுப்பட்டுமா?'' என்று சகதர்மிணி வினவுவாள்.

''டாக்டர் ஜகதீசன் வேண்டாம். டாக்டர் ராமராவுக்குச் சொல்லி யனுப்பு. அவருக்குத் தான் கைராசி கிடையாது'' என்பேன் நான். என் நோயை மெதுவாகக் குணப்படுத்தும் ராமராவ் என் நண்பர்; நாலே நாளில் என்னைக் குணப்படுத்தி படுக்கையை விட்டுக்கிளப்பி விடும் டாக்டர் ஜகதீசன் என் விரோதி.

இருமிக் கொண்டே அன்றைய பத்திரிகையைப் பார்ப்பதில் அலாதி மகிழ்ச்சி அடைகிறேன் நான். பாதிச் செய்திக்குமேல் படிக்க முடியாமல் போனாலும் பரவாயில்லை. மிச்சப் பாதியைக் கற்பனை செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கிறதல்லவா? உடம்பு சரியான பிறகு ஒரு நாள் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு பழைய பேப்பரைப் படிப்பேன். சேலம் கோவிந்தசாமி தன் சம்சாரத்தை அரிவாளால் வெட்டித் துண்டம் போட்டது ஏன் என்பதை அறிவேன். எனது முந்தைய ஊகமும், நிஜமான செய்தியும் சரிதான் என்பது தெரிந்ததும், உற்சாகம் தாங்க மாட்டாமல் துள்ளிக் குதிப்பேன்.

எதிர் வீட்டுப்பாட்டி வந்து என்னைப் பார்ப்பாள். என்ன கோளாறு என்று விசாரிப்பாள். நான் உள்ளம் பூரிப்பேன். சாதாரண நாளில் என்னை ஏறெடுத்துப் பார்க்காத பாட்டி இவள். ஆனால் இன்று? நான் ஒரு நோயாளி. அவளுடைய வைத்திய ஞானத்தை வடிக்கக்கூடிய பாத்திரம் நான்!

காரியாலயத்திலிருந்து என் சிநேகிதர்கள் சம்பளத்தை நேரில் கொண்டு வந்து தருவார். போன மாதம் நான் வாங்கிக் கொண்டிருந்த அட்வான்ஸ் தொகை அதில் கழிக்கப்பட்டிருக்காது. ''உங்களுக்கு உடம்பு சரியில்லை. செலவுக்குப்பணம் வேண்டியிருக்கும். அடுத்த மாதச் சம்பளத்தில் கழித்துக் கொள்ளலாம்



என்று மானேஜர் சொல்லிவிட்டார்'' என்பார். ஆ, என் அருமை நோயே, நீ கர்ணன், உனக்கே தெரியாமல் நீ கொடுக்கிறாய்!

குடும்பத்தின் அமைதிக்கும் பலத்துக்கும் வியாதிகள் இன்றியமையாதவை என்பது எந்த மாப்பிள்ளைக்கும் தெரிந்த சேதி.

எனக்கு என் மாமியாரைக் கண்டால் பிடிக்காது. என் மாமியாருக்கு என்னைக் கண்டால் பிடிக்காது. இந்த மாதிரி நிலையில் நான் 'ஒற்றைத் தலைவலி' என்று சொல்லிக் கொண்டு ஈஸிச் சேரில் சாய்கிறேன்.

என் மாமியார் ஓடோடியும் வருகிறாள். ''ஒற்றைத் தலைவலியாமே? நிஜமாகவா?'' என்று கேட்கிறாள். ''ஐந்து லட்ச ரூபாய் பரிசு விழுந்திருக்கிறதாமே? நிஜமாகவா?'' என்று கேட்கும் பாவனை!

''ஆமாம்... இரண்டு நாளாக...''

''எனக்கும் பதினேழு வருஷமாய் அதே கம்ப்ளெய்ண்ட்தான்'' என்கிறாள் என் தாரத்தின் தாய். அவள் கண்களில் கருணை வழிகிறது. என் கண்களிலும்தான். இத்தனை வருஷங்களாக இல்லாத தோழமை உணர்ச்சியை இந்த ஒற்றைத் தலைவலி ஒரே நாளில் எங்களுக்குள் ஏற்படுத்தி விடுகிறது. ''இன்னும் இரண்டு நாள் இருந்துவிட்டுப் போகலாமே ஊருக்கு?'' என்று அவளைக் கேட்டுக் கொள்ளும் அளவுக்கு நான் மாறிவிடுகிறேன்.

மாமியார்தான் இப்படி என்றால் மனைவி இரட்டிப்பு மடங்கு உற்சாகத்துடன் இருக்கிறாள். நான் எழுந்து நடமாட ஆரம்பிக்கிற வரையில், ராஜ்ய பாரம் அவள் கையில் தானே. சாதாரணமாக, என் சம்பளத்தில் பத்து ரூபாயை என் கைச் செலவுக்குக் கொடுத்துவிட்டு மிச்சத்தை வைத்துக் கொள்ளும் வழக்கம் அவளுக்கு. இம்மாதம் அந்தப் பத்து ரூபாயும் 'இன்க்ரிமெண்ட்' மாதிரி.

வேலைக்காரர்கள், தம்பி தங்கைமார்கள், மைத்துன, மைத்துனிமார்கள் ஆகியோருக்கு எங்கிருந்தோ என்னிடம் அலாதி இரக்கம் வந்துவிடுகிறது. ''க'' என்பதற்குள் கஞ்சியும் 'ப' என்பதற்குள் பாலும் எடுத்து ஓடோடி வருகிறார்கள். வந்தவர்களை 'வா' என்று வரவேற்க வாயைத் திறந்தால், 'வாந்தி எடுக்க வருகிறது' என்று சொல்கிறேனோ என்று தலையை அழுத்திப் பிடிக்கிறார்கள். 'ஐயோ பாவம் சாகக் கிடக்கிற சமயத்திலாவது அவர் சொல்லும் வேலையைச் செய்வோம்' என்ற எண்ணமோ என்னவோ?

ஆகா, என் வீடு சுவர்க்கமாகிறது. என்னைச் சுற்றியுள்ள உலகில் சாந்தத்தென்றல் சஞ்சரிக்கிறது. டாக்டர்கள் தேவதைகளாகவும், மருந்து சீசாக்கள் அமுத கலசங்களாகவும் காட்சி அளிக்கின்றன.

சூடான காப்பி, சாத்துக்குடி தோல் குவியல்கள்; படிக்காத பத்திரிகைகள்!

இவ்வளவுடன் நான்; என் வியாதி.

இந்த இன்ப நிலை எத்தனை நாள் நீடிக்க முடியுமோ அத்தனை நாள் நீடிக்க நான் ஏன் விரும்ப மாட்டேன்? குணப்படுத்தும் டாக்டரைக் கண்டால் எனக்கு ஏன் கோபம் வராது? ஜுரமே வா!

தலைவலியே என்னைத் தழுவிக்கொள்!

இன்புளுயன்ஸாவே, டபுள் நிமோனியாவே, காதுக் குடைச்சலே, கண் எரிச்சலே— மற்றுமுள்ள ஆயிரமாயிரம் நோய்களே! என் மீது இரக்கப்பட்டு என்னை வந்தடையுங்கள்.

உங்கள் வருகையை எதிர்நோக்கி இந்தக் கட்டை என்றென்றும் காத்து நிற்கும்.

(ஜெயகுமார் பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டுள்ள 'இன்பப் பொழுது' என்ற புத்தகத்திலிருந்து.)

இனி இனி இப்படி இப்படி தப்பு தப்பு பண்ணாதீர்கள்! பண்ணாதீர்கள்!

1980 ஜனவரி Mad இதழில் நான்கு பொடி ஜோக்குகள் இரண்டு இரண்டு பக்கங்களில் அச்சாகி விட்டன.


இந்தத் தவறைச் சுட்டிக்காட்டி வாசகர் எழுதிய கடிதம்:

''இனிமேல் இனிமேல் இந்த இந்த மாதிரி மாதிரி அபத்தமான அபத்தமான தவறுகளை தவறுகளை செய்யாதீர்கள் செய்யாதீர்கள்!''

முழுக்க முழுக்க நகைச்சுவை இதழாக அமெரிக்காவிலிருந்து வெளிவருவது மேட் (MAD) பத்திரிகை. சமீபத்திய இதழில், சர்குலேஷன் பற்றி சட்ட ரீதியான அறிவிப்பு கொடுத்திருந்தார்கள்.

இதன் சர்க்குலேஷன் 24, 63, 099. (விற்பனையாகாமல் திரும்பி வரும் பிரதிகளின் எண்ணிக்கை 8, 29, 131)

சமீபத்திய இதழின் அட்டையில் வந்த ஜோக் இங்கு வெளியிடப்படுகிறது.



நானும் என் மந்திர உலகமும்



புஷ்பா தங்கதுரை

சின்ன வயசில் அந்த அதிசயம் நடந்தது.

ந நாள் இரவு ஒரு சொப்பனம் கண்டேன். ன் வகுப்பு அறை இடம் மாற்றப்பட்டிருப்பதாக அந்தக் கனவு. மறுநாள் நான் பள்ளிக்குப் போக அதிசயமாக என் வகுப்பறை அதேபோல் இடம் மாறியிருப்பதைக் கண்டுகொண்டேன். அதுதான் மாய மந்திர உலகத்தைப் பற்றிய என் நம்பிக்கைக்கு ஆரம்பம்.

பின்னர், ஊரில் ஒரு பெரியவர் வித்தை ஒன்று செய்வதைக் கண்டேன். கோலிக் குண்டைக் கையில் வைத்து மாயமாய் மறைந்து போகப் பண்ணுவார். பிறகு, வயிற்றுச் சதையைக் கிள்ளி அதிலிருந்து அந்தக் கோலியை வெளியில் எடுப்பார். வயிற்றுச் சதையில் கீறல் விழுந்து உள்ளே வெள்ளைச் சவ்வுகூட நம் கண்ணில் விழும்.

வருடா வருடம் பீதாம்பரையரின் சீடர் ஒருவர் ஊரில் வந்து வித்தை காட்டுவார். வெறும் கையில் ஒரு பட்டுத் துணியைப் போட்டு மூடி, மந்திரம் சொல்லித் திறக்க மா ஜீனி, கைநிறையக் கொழித்துக் கீழே எல்லாம் உதிரும். வெறும் தந்திரம் என்று இதை என்னால் நம்ப முடியவில்லை.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் என்னைப் பெரிதும் பாதிக்க, நான் ஹைஸ்கூல் மாணவன் (செயின்ட் சேவியர்ஸ் ஹைஸ்கூல் பாளையங்கோட்டை) ஆனபோது மந்திர விவகாரங்களில் இறங்கினேன்.

சுவடிகளையும், மாந்திரீகப் புத்தகங்களையும் தேடி அலைந்தேன்.

கிராமத்தில் (கீழநத்தம், திருநெல்வேலி ஜில்லா) எனக்கு ராஜகோபாலன், வெங்கட்ரங்கன் என்று இரு சகாக்கள் சேர்ந்தார்கள். நான் மாந்திரீகத்தைத் தீவிரமாகப் பின்பற்றலானேன்.

சுடுகாட்டுக்குப் போய், அதன் நடுவில் நின்று ஜபிப்பது, சாம்பல் எடுத்துப் பூசுவது போன்ற வேலைகளில் ஈடுபட, ஊரில் என்னைப் பற்றி ஒரு குசுகுசுவான மரியாதைப் பேச்சு பரவலாயிற்று.

இரவில் ஆற்றங்கரையில் (தாம்ரவர்ணி) பதினொரு மணி வரை உட்கார்ந்து பீடம் அமைத்து, தனியாக இருந்து மந்திர உச்சாடனங்கள் செய்யத் தொடங்கினேன்.

போதாததற்கு என் வீட்டு மச்சிலில் நான் படிக்கும் மேஜை மீது ஒரு நாய்க்குட்டியின் மண்டை ஓடு ஒன்று வைத்திருந்தேன். அசப்பில் அது ஒரு சிறு குழந்தையின் ஓடு போல் தோன்றும். இதுவும் பலரை என் அருகிலிருந்து விரட்ட உதவியாக இருந்தது.

சீக்கிரத்தில் என் மந்திர முயற்சிகள் யாவும் வீண், அவற்றால் எந்தப் பலனும் ஏற்படவில்லை என்று எனக்குத் தெரியலாயிற்று.

ஆனால், ஏற்கனவே உபாசகன், மாந்திரீகன் என்று என்னைப் பற்றிப் பெயர் பரவிவிட்டதால், என் தோல்வியை நான் வெளியே ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை.

இந்தச் சமயத்தில் எழுந்ததுதான் என் மாய ஜாலக் கண்ணாடி ஐடியா!

காலியான வீட்டில் ஒரு இருட்டறையில் மாயாஜாலக் கண்ணாடி ஒன்று வைத்தோம்.

அதைக் கேள்வி கேட்டால் அது ஜோசியம் சொல்லும் என்று ஊரில் செய்திகள் பரப்பினோம்.

நிறையப்பேர் பய பக்தியோடு வர ஆரம்பித்தார்கள்.

உள்ளே கண்ணாடிக்கு ஒரு கோணத்தில் என் நண்பன் ராஜகோபாலனை வேஷம் போட்டு நிறுத்தி வைத்திருந்தோம். அவன் கையில் ஒரு மூடிய பெட்ரூம் விளக்கு கொடுத்திருந்தோம். அவன் நிற்பது தெரியாதபடிக்கு அமைப்புகள் செய்திருந்தோம்.

யாராவது கேள்வி கேட்டவுடன், ராஜகோபாலன் அந்த பெட்ரூம் விளக்கு மூடியைச் சிறிது சிறிதாகத் தளர்த்த அவன் வேஷ உருவம் அந்தக் கண்ணாடியில் சிறிது சிறிதாக உற்பத்தியாவது போல் தோற்றம் உண்டாகும்.

அதைப் பார்த்தவுடனே வந்திருந்த ஆள் அநேகமாக அசந்து போய்விடுவான்.

சரி, கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வது?

பிரசித்தி பெற்ற நெப்போலியன் உபயோகித்த ஓராகுலம் (Oraculam) என்ற ஜோசியப் புத்தகம் சென்ற நூற்றாண்டில் அச்சடிக்கப்பட்டிருந்தது.

அதன் காப்பி ஒன்று எங்கள் வீட்டுப் பரண்களிலிருந்து எங்களுக்குக் கிடைத்தது.

நெப்போலியன் இந்த ஓராகுலத்தைப் பார்த்துத்தான் சண்டைக்கோ சமாதானத்துக்கோ புறப்படுவான் என்று கூறுவார்கள்.

அது தொடுகுறி சாஸ்திரம் போல் ஒரு புத்தகம் என்று நினைக்கிறேன்.

அதை உபயோகித்து ஜோசியப் பதில்களை உள்ளிருந்தவாறே குரலை மாற்றிப் பேசுவான் ராஜகோபாலன்.

இந்தப் பதில்கள் பலித்தனவோ, இல்லையோ, சீக்கிரம் எங்கள் புகழ் பக்கத்துக் கிராமங்களில் பரவ, நிறையப் பேர் குறி கேட்க வர ஆரம்பித்தார்கள்.

பணமும் கொடுக்க ஆரம்பிக்க, அதை மட்டும் தடுத்து நிறுத்திவிட்டோம்.

அப்போதுதான் அந்தத் தலைவலி வந்தது.

பக்கத்துக் கிராமங்களிலிருந்து வரும் தைரியசாலிக் கல்லூரி மாணவர்கள் சிலர் எங்களுக்குச் சவால் விட ஆரம்பித்தார்கள்.

குறிப்பிட்ட ஒரு ஞாயிற்றுக் கிழமை வந்தால் எங்கள் மந்திர சக்தியைக் காட்டுவதாகப் பதில் சவால் கொடுத்தோம்.

வருவதாகச் சொல்லிவிட்டார்கள்.

அவர்கள் எங்களைவிட வயதில் அதிகமான கல்லூரி மாணவர்கள். பலவான்கள்.

ஊரில் எங்களுக்கு இரண்டு மூன்று பெரியவர்கள் சொன்னபடி கேட்பார்கள்.

அவர்களில் ராமசாமி என்பவரைக் கிராமத்துக்கு அரை மைலில் ரஸ்தாவில் நிறுத்தி வைத்தோம். மற்றொருவரைக் கிராமத்தில் பக்கத்தில் நிறுத்தி வைத்தோம்.

அந்த மாணவர்கள் வரும்போது அந்த ராமசாமி, ''ஏம்பா? நீங்க எங்க போறீங்க'' என்று கேள்வி கேட்டார்.

ஊர் பேரைச் சொன்னார்கள்.

உடனே அவர், ''வேணுகோபாலன் வீட்டுக்கா?'' என்று பயத்தோடு கேட்டார்.

''ஆமாம்.''

''ஐயோ; உங்களுக்கு ஏன் இந்தப் புத்தி? உங்களுக்காகத்தான் அவன் பூஜை செய்கிறானு? ஜாக்கிரதை. காலுக்கடியில் பாம்பை வரவழைத்துவிடுவான்'' என்று மேலும் பல சொல்லிக் காபரா டடுத்தி வைத்தான்.

மாணவர்களுக்குப் பத்து சதவீத திகில். அப்படியும் முன்னேறி வந்தார்கள்.

இரண்டாவது பெரியவர் அவர்களைத் தடுத்து மேலும் கொஞ்சம் பயமுறுத்தினர்.

ஆக, கிராமத் தெருவுக்குள் நுழையும் போது மாணவர்கள் பாதி அவுட்டாகினர்.

நான் யோக வேஷம் போட்டுத் தலையில் தலைப்பாகை கட்டியிருந்தேன். என்மீது தாம்புக் கயிற்றையும் சுற்றிக் கட்டியிருந்தார்கள்.

என் எதிரே பெரிய சாணிக் குவியல். அதில் தலை கீழாக ஒரு மழுக் கத்தியை நட்டு வைத்திருந்தோம். சுற்றிவர விளக்கு, பூஜை விவகாரங்கள் எல்லாம்.

மாணவர்கள் என் வீட்டு வாசலில் வந்ததும் ஏற்கனவே காஷாயம் போல் ஒரு வஸ்திரம் தரித்திருந்த ராஜகோபாலன் அவர்களை எதிர்கொண்டான். பேசவில்லை. அதற்குப் பதிலாக வாசலில் நிறுத்தி வைத்து ஹிஸ்டீரிகலாக மந்திர உச்சாடனம் செய்தான்;

ஒரு தெருக் கும்பல் அவனை வேடிக்கை பார்த்தது.

பிறகு 'ஹோ ஹோ' என்று சத்தம் போட்டு மாணவர்களை மெல்ல மாடிப் படியில் ஏற்றி மேலே கொண்டு வந்தான்.

மாடி ஏறி நிஷ்டையில் இருந்த என்னையும் என் பூஜா முறைகளையும் பார்த்த மாணவர்கள் பிரமித்து விட்டார்கள்.

ஏற்கெனவே முக்காலும் அவுட்டாகி இருந்தவர்கள் மாடியில் வந்தபோது முழுதும் அவுட்டாகி விட்டார்கள்.

நான் தூப தீபங்கள் பிரமாதமாகப் போட்டேன். கடுமையாக உச்சாடனம் செய்தேன்.

பிறகு மெள்ளக் கண்களைத் திறந்து, —இங்கு யாருக்காவது வயிறு ஊத வைக்க வேண்டுமா? என்றதுதான் தாமதம்.

அந்தக் கல்லூரி மாணவர்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று படிகளில் தாளம் போட்டுக் குதித்து, தெருக் கும்பலிடையே புகுந்து வெளிவந்து மேற்கு நோக்கிப் பிறி ஓடினார்கள்.

விடுவானா ராஜகோபாலன்!

அவர்கள் பீதியைப் புரிந்து பின்னால் ஓடி, சீக்கிரம் அவர்களைக் கடந்து மறு பக்கம் போய் ரஸ்தாவில் குறுக்கே ஒரு கோடு கிழித்து, 'இதைத் தாண்டினால் செத்துப் போவீர்கள்' என்று சபதம் போட்டான்.

ஆச்சரியம்! அந்த மாணவர்கள் உறைந்து போய் நின்று விட்டார்கள்.

நாங்கள் சீக்கிரம் அந்த இடத்தை அடைய எங்கள் ஏமாற்று வேலை விளைவித்த பலனைப் பார்த்துக் குபீர் என்று எங்களையும் மீறிச் சிரிப்பு வரச் சிரித்தோம்.

நடந்ததெல்லாம் நாடகம் என்று அறியவே அந்த மாணவர்களுக்கு வெகுநேரம் பிடித்தது.

அநேகமாக அந்தச் சம்பவத்தோடுதான் என்று நினைக்கிறேன், என் மந்திர உலகச் சோதனைகள் நின்றுவிட்டன!

எண்ணமெல்லாம்...
பழமொழி-3




வெற்றி நடைபோடுகிறது!
சென்னை
மிட்லண்ட் A/C
தினசரி 2 காட்சிகள்
(10-30A.M. 1-15P.M)
கிரவுன்
புவனேஸ்வரி
தினசரி 3 காட்சிகள்
கிருஷ்ணவேணி
பகல் 11-30 மணி காட்சி
மற்றும் தென்னகெங்கும்
P.S.வீரப்பா
அளிக்கும்
P.S.V. பிக்சர்ஸ்
மேகத்துக்கும்
தாகமுண்டு
A
வண்ணப்படம்
கதை-வசனம்-டைரக்ஷன்
ட.ஜெகதீசன்
தயாரிப்பு
P.S.வீரப்பா.P.S.V.ஹரிஹரன்



ஈவினிங் நேரத்திலே...

ஈவினிங் நேரத்திலே — சகியே
ஈஸ்டர் விடுமுறையில்
கூவம் நதிக் கரையின் பார்க்கில்
குஷியாய் வீற்றிருந்தேன்
சிகரெட்டுப் புகையும் — சகியே
ஜிம்மென் நடித்ததடி
புகைச் சுருளோட்டம் — பின்னிருந்து
புரண்டு வந்ததடி
திரும்பிப் பார்த்தேனடி — இனியவராய்
தெரிய வில்லையடி
விரும்பும் ஓர் உருவம் — புகைக்குள்ளே
'விசிபிள்' ஆச்சுதடி
எங்கோ பார்த்த முகம் — ஒரு 'யங்
லேட்' அங்கு நின்றான்.
இங்கே வந்தனையே — என்றே
இங்கிதம் பேசலுற்றான்.
'கர்லிங் கிராப்' அழகும் — கழுத்தில்
கட்டிய டை அழகும்
'மிர்ரர்' அதைப் போல — மின்னி
மினிரும் 'பேஸ்' அழகும்
மிகைப் படுத்துவானேன் — அவனோடு
'மிக்சர்' ஆகிவிட்டேன்.
வாயிற் புகையினையே — குப்பென்று
வானத்தில் ஊதிவிட்டு
காயும் உதட்டசைத்து — அவன் சொன்ன
கதையைக் கேளடியோ
பேப்பர் மலர் அழகின் — பேஷனில்
பேதித்து விட்டாயடி.
'வேப்பராய்'ப் போகுதடி — என்னுயி
வெந்து புழுங்குதடி.
'ஸ்பெக்ட்' விழிகளிலே — என்னை
எக்ஸ்பெக்ட் பண்ண வைத்தாய்
'சஸ்பெக்ட்' வேண்டாமடி — உனக்கு
சரணம் என்றானடி.
'பார்க்கிங் டாக்' ஒன்று — எங்கிருந்தோ
பாய்ந்து வந்ததடி.
ஆர்க்குந் தெரியாதடி — அப்பவே
அப்ஸ்காண்ட் ஆகிவிட்டான்.

'ஹார்ட்'டைக் கவர்ந்துசென்ற—அந்தக்
கள்வன் நினைவினில் 'ஹாட்
மார்ட்'டும் பிடிக்கவில்லை— ஹேர் ஆயில்
மணமும் சகிக்கவில்லை.
வென்னிலாச் சுவேனிலே — என்னமோ
வெப்பத்தைக் கண்டேனடி
சன்னே பிடித்த பௌடர் — எனக்கு
சஞ்சலம் தந்ததடி.
என்ன படித்தாலும் — மூளையில்
ஏறுவதில்லை யடி
என்மார்க் கெல்லாமே — பரீட்சையில்
டென்மார்க் ஆச்சுதடி
ரேஷன் குறைவது போல் — எடையின்
ரேட்டில் குறைந்தேனடி
காசம் பிடித்தவன் போல் — இருமும்
கரையலுற்றேனடி
'இன்ஜக்ஷன்' செய்தாலும் — படிப்பு
இம்மியும் ஏறவில்லை
'கன்ஜக்ஷ'னும்கூடச் — சகியே
ஹார்ட்டில் நிற்கவில்லை.
ஸாரி என் சகியே — அவனைச்
சந்தித்தே தீரவேண்டும்
மேரி பண்ண வேணும் — இல்லையேல்
வீழ்ந்து மடிய வேணும்.

(சுமார் 25 வருஷங்களுக்கு முன்பு தமிழ்ப் பத்திரிகை யொன்றில் வெளியான கவிதை இது. நகைச்சுவை இன்றைக்கும் மிளிருகிறது. இதை எழுதியவரின் பெயரைக் குறித்துக்கொள்ள மறந்துவிட்டேன். அவர் என்னை மன்னிப்பாராக!

— பி. எஸ். ஆர்.)

எண்ணமெல்லாம்... பழமொழி-4



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

நிகரில்லா வலிமைக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—லேசுடா லேசு,
நீடித்த உழைப்புக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—வீசுடா வீசு !



நிர்லான்

நைலான் மீன்பிடி வலை மணிக் கயிறு

நிர்லான் ஸிந்தெடிக் ஃபைபர்ஸ் & கெமிக்கல்ஸ் லிட்.,

பதிவு அலுவலகம்:
"நிர்லான் ஹவுஸ்"
254-B, டாக்டர் அன்னி பெஸண்ட் ரோடு.
பம்பாய்-400 025

சென்னை கிளை:
300, மோப்ரேஸ் ரோடு
சென்னை-600 018

லின்டாஸ்-NIR-12-203 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka







- எஸ். வி. வி.
- கல்கி
- கோபுலு
- ரா. கி. ரங்கராஜன்
- டைரக்டர் ஸ்ரீதர்
- புஷ்பா தங்கதுரை
- அகஸ்தியன்

ஆகியோரது ஹாஸ்யக் கதை, கட்டுரைகள்

- உமாபதி
- செல்லப்பன்
- நடனம்
- ஜெயராஜ்
- ராமு முதலியோரின் சிரிப்புச் சித்திரங்கள்

- அவன், அவள், அது!
- ரங்கநாதன் தெரு
- சினிமா ஸ்டூடியோவும் சிரிப்பும்

போன்ற விசேஷ நகைச் சுவை அம்சங்கள்

ரூ 500/- பரிசு பெற்ற ஹாஸ்யக் கதை